Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල්

19 செப்டம்பர் 2003 - வெள்ளிக்கிழமை | 22 றஜப் - 1424
கவடு - 20 | தருகை - 15 ரூபா

Registered as a Newspaper in Srilanka

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்
வார ஏடாக மக்கள்
கருத்துக்களுடன்




# பேச்சுவார்த்தை மேசையில் இடைக்கால சபை!

# முஸ்லிம்களின் கதி என்ன ?

வடக்கு கிழக்கிற்கான இடைக்கால சபை அமைக்கப்படுவது நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வில் முக்கிய புள்ளியாக நிலை நிறுத்தப்பட்டு விட்டது. அரசாங்கமும் புலிகளும் சர்வதேச சமூகமும் "இவ்விடைக்கால அரசியல் புள்ளியிலேயே" அதிக கவனத்தையும் ஈடுபாட்டையும் காட்டி வருகின்றன. பேச்சுவார்த்தையின் உறுதியான முன் செல்கைக்கு வடக்கு கிழக்கில் இடைக்கால சபை அமைக்கப்படுவது தவிர்க்க முடியாத முன் நிபந்தனையாக மாறிவிட்டது. இந்நிலையில் நமது அரசியல் தலைமைகளோ நமது மக்கள் முன் கண்கெட்ட பிறகு "சூரிய நமஸ்காரம்" கதையைச் சொல்ல காத்திருப்பது போல் தெரிகிறது. நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலைமைகளின் தீவிரத்தை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. மக்களாகிய நாம் இந்தக்கையறு நிலையில் மௌனமாக இருந்து விடத்தான் முடியுமா?

வடக்கு கிழக்கில் இடைக்கால சபை அமைக்கப்படுவதிலும் அது தனித்த ஒரு சபையாகவே இருக்க வேண்டுமெனவும், அச்சபையை நிர்வாகிக்கக் கூடிய அனைத்து அதிகாரமும் புலிகள் தலைமைக்கே வழங்கப்படல் வேண்டும் என்பதுவே புலிகளின் விட்டுக் கொடுக்க முடியாத நிலைப்பாடாக உள்ளது. இந்த ஏகபோகமான அரசியல் நிலைப்பாட்டிலிருந்து புலிகள் இறங்கி வருவார்கள் என்பதை யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது!

ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திற்கு பேச்சுவார்த்தையை முன் நிறுத்துவதற்கு - புலிகள் கோரும் இடைக்கால சபையை வழங்குவதைத் தவிர வேறு வழி இருப்பதாக இப்போதைக்குத் தெரியவில்லை. புலிகள் கோரும் இடைக்கால சபையை வழங்காது விட்டால், அல்லது அது தொடர்பான இறுதி முடிவுக்கு வராது விட்டால் பேச்சுவார்த்தை என்பது - யுத்தமாக மாறி விடும் அரசியல் சூழலாக எழுந்து நிற்கிறது - ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் யுத்தத்திற்கு செல்வதற்கு தயாரில்லை - அது சமாதானத்தை காட்டியே தனது ஆயுட்காலத்தை சர்வதேச சமூகத்தின் உதவியுடன் நீடித்து வருகிறது.


இந்த அரசியல் நிலைமையில், வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் வாழ்விற்கான அரசியல் உத்தரவாதங்களும், ஏற்பாடுகளும் தொடர்பான மயக்கங்களும் குழப்பங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. புலிகளோ மிகத் தெளிவாக முஸ்லிம்களுக்கு தனியான இடைக்கால சபைப் பேச்சுக்கே இடமில்லை என நிராகரித்து விட்டனர். ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கமோ "முஸ்லிம்கள் கைவிடப்படமாட்டார்கள்" என்று மட்டுமே சொல்லி வருகிறது. முஸ்லிம் அரசியல் தலைமைகள் கோரும் தனியான இடைக்கால சபை பற்றி அரசாங்கம் இதுவரை ஒரு வார்த்தை தானும் வெளிப்படுத்தவில்லை - நமது அரசியல் தலைமைகளோ ரணில் வாக்குறுதியளித்துள்ளார் எனத் தெரிவித்து வருகின்றன.

இவ்வாக்குறுதிகளும், பத்திரிகை அறிக்கைகளும், தீர்மானங்களும் நமக்கான தனியான இடைக்காலத் தீர்வை பெற்றுத்தந்து விடுமோ என்கிற கேள்வியை மக்களாகிய நாம் எழுப்புதல் வேண்டும். ஏனெனில் ஒரு சமூகத்தின் உரிமைப் போராட்டத்தில், அரசியல் தீர்விற்கும் வெறும் வாக்குறுதிகளும், மேம்போக்கான பத்திரிகை அறிக்கைகளும்; நிலைமையை கையாள்வதற்கான தீர்மானங்களும் எந்த விதத்திலும்

**புலிகள் கோரும் இடைக்கால சபையை வழங்குவது ரணிலின் அரசாங்கத்திற்கு அவசியமாகி விட்டது!**

ஆரோக்கியமாக பங்காற்றப் போவதில்லை. இதனை நமது மக்கள் உணர்ந்து விட்டனர்; எதிர்வரும் காலங்களிலும் மீளமீள உணரத்தான் போகிறார்கள்! முஸ்லிம்களுக்கான தனியான இடைக்கால சபையைப் பெற்றுக் கொள்வதற்கு மக்களாகிய நாம் அளப்பரிய பங்களிப்பாற்ற வேண்டிய தருணம் இது என்பதை முன் கூட்டியே அச்சமூட்டி எச்சரிக்கிறோம்! முஸ்லிம் அரசியல் தலைமைகளால் முன் மொழியப்படுகின்ற தனியான இடைக்கால சபையை பெற்றுக் கொள்வதற்கும் - நமது மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குமான விடுதலைப் போராட்டத்தில் நமது அரசியல் தலைமைகள் என்ன செயற்திட்டத்தை முன் வைத்துள்ளனர் என மிகத் தெளிவாக மக்கள் அரங்கிற்கு முன்வைக்க வேண்டும்! மக்களாகிய நாம் நமது உரிமைப் போராட்டத்தில் உறுதியாய் நிற்க என்றுமே தயாராக உள்ளோம் - இனியாவது நமது அரசியல் தலைமைகள் நமது மக்கள் போராட்டத்தை தலைமைதாங்கி முன்னெடுக்க திடசங்கற்பம் பூணுவார்களா?

## முஸ்லிம் தேசத்தின் சொத்து கவிச்சுடர் அன்பு முகையதீன்



கவிஞர், சமூக அக்கறையுள்ள போராளி அன்பு முகையதீன் கடந்த செவ்வாய்க் கிழமை இறையடியெய்தி விட்டார்! (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்) கிழக்கு எங்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் மரணத்தின் நிழல் படிந்திருந்த தினத்தில், அன்னாரின் மறைவுச் செய்தி நமது மக்களை அதிகமா கவே உலுக்கி விட்டது. கல்முனை மண் கண்ணீரில் குளித்து நின்றது.

சமூகங்களிடையேயான ஒற்றுமைக்கும்; முஸ்லிம் சமூகத்தின் உயர்ச்சிக்கும் விடுதலைக்கும் - தனது எழுத்தாற்றலை அர்ப்பணித்தவர் அன்பு முகையதீன் அவர்கள். முஸ்லிம் காங்கிரஸின் சிதைவும் - முஸ்லிம் சமூகத்தின் கையறு நிலையையும் கண்டு பதறி நெஞ்சம் வெடித்து உணர்வுகளின் ஊற்றாக அவர் தனது அந்திம காலத்தில் இருந்தார் என்பதை அவருடன் உரையாடியவர்கள், உறவுகள் புரிந்திருப்பர்.

மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் - அன்பு முகைதீனின் மணி விழா மலரில் எழுதியுள்ளதை ஒரு தரம் மீட்டிப் பார்க்கிறோம் "ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர் எனக் குள்ளே கலந்திருக்கின்றார், எனது இதயத்தின் மீது சிம்மாசனம் போட்டது மட்டு மன்றி, எனது இரத்தத்தோடு கலந்து எனது நரம்புகளிலும், நாளங்களிலும் எப் போதும் அவர் ஓடிக் கொண்டிருக்கிறார்" என எழுதியிருந்தார் - அந்த வார்த் தைகளை மெய்ப்பிப்பதில் இறைவனின் நாட்டமும் கலந்திருந்தது என்பதை அன்பு முகைதீனின் மறைவுத் தினம் நமக்கு ஏற்படுத்துகிறது-

அவரது ஆளுமைக்கும், சமூக அக்கறைக்கும் எமது தாழ்மையான நன்றிகள் உரித்தாகட்டும் - நமது சமூக விடுதலைப் பயணத்தில் அன்பு முகையதீனின் பாடல்கள் உணர்வுகளாய்த் திரண்டு எதிர்காலத் தலை முறையை வழிநடாத்தும்! அன்னாருக்கு எல்லாம் வல்ல இறைவன் சுவர்க்கத்தை அருள்வானாக!

-பிரதம ஆசிரியர்.
முஸ்லிம் குரல்.

## ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லையடி பெண்ணே!



60வது வயதானால் அரச சேவையிலிருந்து கண்டிப்பாக ஓய்வு பெற்று விட வேண்டுமென, தனது ஆட்சிக்காலத்தில் அதிகமாக உபதேசித்து வந்தவர்தான் ஜனாதிபதி சந்திரிகா. இப்போது ஜனாதிபதிக்கு 58 வயதாகிறது. அவர் சொன்னது போல் செய்பவராயின் இன்னும் 2 வருடங்களில் ஓய்வு பெற்று விட வேண்டியதுதான். அவருக்கு 60 வயதாகும் போது ஜனாதிபதிப் பதவிக்காலமும் முடிந்து விடும். ஆனால் அம்மையாருக்கு ஓய்வு பெறும் நோக்கமில்லையாம். அண்மையில் அத்தனகலயில் நடைபெற்ற நீலக்கட்சி சம்மேளனக் கூட்டத்தில் அதன் செயலாளர் பதவியை தனதாக்கிக் கொண்டுள்ளார். இது எதைக் காட்டுகிறது என்றால் அம்மையார் சும்மா இருக்கப் போவதில்லை என்பதைத்தான்..

## பின்லேடனை கைதுசெய்ய முடியாது! சி. ஐ. ஏ. கைவிரிப்பு.

அல்-கய்தா அமைப்பின் தலைவர் பின்லேடனை கைது செய்வது தங்களது சக்திக்கு அப்பாற்பட்டது என சி.ஐ.ஏ. தலைமையகம் தெரிவித்துவிட்டது. நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பின்லேடனை கண்டு பிடிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பலத்த தோல்வியடைந்துவிட்டதை வெளிப்படையாக சி.ஐ.ஏ. ஏற்றுக் கொண்டது இதுவே முதற் தடவையாகும்.

மேற்குலகில் பெரும் அதிருப்தியை சம்பாதித்துவிட்ட இந்தத் தோல்விகுறித்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பெருத்த சினத்திற்குள்ளாகி உள்ளதாகவும், இத்தோல்வி அமெரிக்காவில் விரைவில் நடைபெறவுள்ள தேர்தலில் பெரும் பின்னடைவை தனது கட்சிக்கு ஏற்படுத்துமெனவும் புஷ் நிர்வாகம் கருதுகிறது. இத் தோல்வியிலிருந்து மீள்வதற்கு பல்வேறு சதி நாடகங்களை அமெரிக்க அரசு எதிர்காலத்தில் ஆட முன்வரும் என்ற எதிர்பார்ப்பு முஸ்லிம் உலகில் மேலோங்கிக் காணப்படுகிறது.

## மன்னித்து... விடுங்கள்!... இந்த வரிகளை...



ஒரு சரித்திரத்தை
சரித்து விட்டோம் என்று...
சிரிக்கின்றதோ?...
இந்த சதிகாரக் கும்பல்கள்!...

இந்த தேசத்தின்...
சிங்கத்தை கொன்று விட்டோம்...
முஸ்லிம் தேசமே!...
உன்னை
சிரச்சேதம்செய்து விட்டோம்!...
என எகிறுதோ...
இரத்த வேட்கை கொண்ட...
அசிங்கங்கள்!...

வெட்கம்!... வெட்கம்!...
வெம்பித் துடிக்கும் தேசமே!...
உனக்குள் இன்னுமின்னும்...
வேண்டாத தர்க்கம்!...
உரிமைகள் மறந்து...
பதவிகளுக்கு சதுரங்கம்!...

பேரின... வாத தேசங்களின்...
கோரப்பற்களுக்குள்...
இரையாக... துடிக்கின்ற...
நமது முஸ்லிம் சமூகத்தை...
அடையாளப்படுத்தியவன்...
நமது மக்களுக்கு...
ஒரு.. விலாசத்தை... தந்தவன்...
மாமனிதன்!... அஷ்ரஃப்!...



ஆகாயத்தில்...
அழித்து விட்டோம்...
அந்தரத்தில்...
உதிர்த்திவிட்டோம்...
ஆஹா!... ஆஹா!...
ஆனந்தம்!... ஆனந்தம்!... என்று...
துள்ளிக்குதித்தன ஆதிக்க சக்திகள்...

வெட்கம்!... வெட்கம்!...
அவன்... பாசறையில்...
முளைத்த...
மரங்களே!... நீங்கள்...
வெறும் புல்லாக போனீர்களே!...
மண் புதராகப் போனீர்களே!...
வெறும் பதராக...போனீர்களே!...
வெட்கம்!... வெட்கம்!...

இது... அவன் உதிரம்...
நனைந்த தேசம்!...
இதை... செதுக்க...
உங்களுக்கு... தெரியவில்லை...
அவன் சிதறிய போது...
பதறிய தேசத்தின்...
உணர்வுகளெல்லாம்...
விலைபோயினவோ?
வீணாப்போயினவோ...
பதவி... வேட்கையால்...
பேரினவாத கோடாரிகளுக்கு...
காம்புகளானீர்களோ?...

ஒரு கத்தமுல்குர்ஆன்!...
ஒரு அன்னதானம்!...
ஒரு முத்திரை வெளியீடு!...
பத்திரிகைகளில்...
சில... கட்டுரைகள்!...
சில... கவிதைகள்!...
ஓ!... முஸ்லிம் தேசமே!...
அவன் மரத்தினில்...
முளைத்த கிளைகளே!...
இவ்வளவுதானா?...
உதிர்ந்த அவன் உதிரத்திற்கும்...
சிதறிய... அவன் சதிரத்திற்கும்...
நீங்கள்... தருகின்ற காணிக்கை...?



-தேச புத்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள் ,வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!**

# மக்களிடமிருந்து மனுக்கள்...

நடவடிக்கைக்காக...

## க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு ஆங்கிலப்பாடம் கட்டாயமாக்கப்பட வேண்டும்!

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடமும் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டிருப்பினும் அது கட்டாயப்பாடமாக்கப்படவில்லை.

ஆங்கிலப் பாடத்தை கட்டாயப்பாடமாக்குமாறு பல புத்திஜீவிகள் கோரிக்கை விடுக்கின்ற போதிலும், கல்வி அமைச்சர் அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கின்ற போதிலும் இது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

உலக வங்கியானது, இலங்கையின் கல்வித்தரத்தை, குறிப்பாக ஆங்கிலக் கல்வியை முன்னேற்ற பல திட்டங்களை முன்னெடுத்துச் செயற்பட்டு வருகின்ற போதிலும், அதன் முன்னேற்றகரமான திட்டங்களுக்கு பௌத்தபிக்குகள் முட்டுக் கட்டையாக இருந்து வருவது கவலைக்குரியதாகும். ஆங்கிலப் பாடத்தை கட்டாயப் பாடமாக்குவதற்கு கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு அவர்கள் பல்வேறுபட்ட முயற்சிகளை எடுத்து வரும் வேளையில் பௌத்த பிக்குகள் அவரை அணுகி அதைத் தடுத்து நிறுத்துவதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆங்கிலப் பாடத்தை கட்டாயப்பாடமாக்குவதன் மூலம் சிங்கள சமூகம் அடையும் நன்மையிலும் பார்க்க, தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் அதிக நன்மை அடைந்துவிடும் எனப் பயப்படுகிறார்கள் இவர்கள். தமது சமூகம் ஆங்கிலம் கற்காவிட்டாலும் ஏனைய சமூகங்கள் கற்றுவிடக் கூடாது என்பதில் மிகவும் கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றனர்.

இந்த நல்ல விடயத்தை எதிர்ப்பது பற்றி ஒரு சிங்களப் பத்திரிகையாளர் ஒரு பௌத்த பிக்குவை அணுகிக் கேட்ட போது, அதற்கவர் "ஆயிரம் அஷ்ரஃப்களும், ஆயிரம் அன்டன் பாலசிங்கங்களும் உருவாகுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?" எனத் திருப்பிக் கேட்டாராம். கல்வி அமைச்சர் ஒரு சிங்களவராக இருப்பதால் அவரால் தனது மதகுருமாரை எதிர்த்து எதையும் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

மேலும், கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தமிழ் - முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த சில மாணவர்களும் இக்கட்டாயப் பாடமாக்கும் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகும். ஆங்கிலப் பாடம் கட்டாயமாக்கப்படுவதால் தமது பல்கலைக்கழக அனுமதிக்கு வேட்டு விழுந்து விடும் எனப் பயப்படும் இவர்கள் தமது எதிர்கால சமூகம் இதனால் பெருமளவு நன்மையடையப் போகிறது என்பதை உணர மறுக்கின்றனர். இம்மாணவர்களின் நடவடிக்கைகள் இதை எதிர்க்கும் பௌத்த பிக்குகளுக்கு சாதகமாக அமைந்து விடும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

எனவே, நாமனைவரும் இந்த ஆங்கிலப் பாடத்தை கட்டாயமாக்கும் யோசனைக்கு முழு ஆதரவு தெரிவிப்பதுடன், இதை எதிர்ப்போரின் நடவடிக்கைகளுக்கு துணைபோகாது சிந்தித்துச் செயல்படுவோமாக!

–ரொஸான் பைறூஸ், காத்தான்குடி –04.

## ஆசிரியர்களும் இலங்கை தாபனக்கோவையின் பிரமாண நியதிகளுக்கு முற்றிலும் உட்பட்டவர்களே!

தாபனக்கோவையினதும், பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் அடிப்படையிலும் பொருத்தமான சம்பளத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அமர்த்தப்படல் வேண்டுமென ஸ்ரீலங்கா இஸ்லாமிய ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் எம்.அனஸ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினை அவசர தொலைமடல் மூலம் கோரியுள்ளார். கல்வி அமைச்சர், பொது நிர்வாக அமைச்சர், தாபனப் பணிப்பாளர் நாயகம், வடக்கு கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் ஆகியோர்களுக்கும் பிரதியிடப்பட்ட மேற்படி வேண்டுகோளில் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்பட்ட தினத்திலிருந்து, அவர்கள் பல்வேறு வழிகளில் பாதிப்படைய வைக்கப்பட்டுள்ளார்கள். என்ற விடயத்தினை ஏனைய ஆசிரிய அமைப்புகளுடன் சேர்ந்து நாங்களும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்து இருக்கின்றோம். ஆனால் தீர்வு நடவடிக்கைகள் இன்னமும் ஆமை வேகத்திலேயே சென்று கொண்டிருப்பதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

பொது நிர்வாக அமைச்சினதும், தாபனக்கோவையினதும் பிரகாரம் ஆசிரியர்களும் ஏனைய அரச ஊழியர்களைப் போன்று பொதுச் சேவையைச் சேர்ந்தவர்களேயாவர். ஆயினும் ஆசிரியர் சேவை நடைமுறைப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து ஆசிரியர்களும் பொதுச் சேவையைச் சேர்ந்தவர்களே என்ற அரசின் பொதுக் கொள்கை புறந்தள்ளிவைக்கப்பட்டுள்ள நிலைமையினை தங்களுக்கு சுட்டிக் காட்ட வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்குப் புறம்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட தெளிவற்ற சுற்றறிக்கையொன்றினால் தாபனக்கோவை மூலமும் அமைச்சரவை அங்கீகா ரத்துடன் வெளியிடப்பட்ட பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை மூலமும் சலுகைகளைப் பெற்ற ஆசிரியர்கள், அவற்றைத் தற்போது இழந்தது மாத்திரமன்றி தாங்களும் பொதுச் சேவை ஊழியர்கள் என்ற அடிப்படை உரிமையினையும் இழக்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும், இச்சுற்றறிக்கையானது ஸ்ரீலங்கா குடியர சின் அரசியலமைப்பின் 12 வது சரத்தையும் பயமின்றி மீறியுள்ளது. மேன்முறை யீட்டு நீதிமன்றம் கூட இச்சுற்று நிருபத்திற்கெதிரான தீர்ப்பை அளித்திருந்தும், வடக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு அதனை நடைமுறைப்படுத்தாது அதனை இன்னமும் கிடப்பில் போட்டுள்ளதோடு தொடர்ந்தும் தன் விருப்பப்படியே நடந்து வருகின்றது.

அதேசமயம், ஏனைய பொதுச் சேவை ஊழியர்கள் இன்னமும் அத்தகைய சலுகைகளை அனுபவித்து வருகின்றனர். அரசின் அனுமதியுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்பினைப் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் விடயத்திலும், வன்செயலால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து மீண்டும் சேவையில் 11/93 என்ற அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை மூலமும் இணைந்து கொண்ட ஆசிரியர்களும், மற்றும் இன்னுமோர் பொதுச்சேவைக்கு திணைக்களத் தலைவரால் விடுவிக்கப்பட்டு மீண்டும் சேவையில் இணைந்து கொண்ட ஆசிரியர்களும் இத்தகைய காலத்திற்கு சம்பளவேற்றம் எதுவும் வழங்கப்படாத நிலையிலும், பதவி உயர்வு தடுக்கப்பட்ட நிலையிலும் பாதிப்படைய வைக்கப்பட்டுள்ளனர். இது மேற்படி விடயங்களில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாக அமைந்து காணப்படுவதனை நோக்கலாம். இவை அனைத்தும் சீர்தூக்கி ஆராயப்பட்டு மேற்படி இலங்கை தாபனக் கோவையின் சரத்துகளுக்கும் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பொதுநிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்ட 11/93 என்ற சுற்றுநிருபத்தின் சரத்துகளுக்கும், ஏனைய பொதுச் சேவை ஊழியர்களைப் போன்று ஆசிரியர்களை உட்படுத்தி, மேற்படி ஒரு பிரமாண நியதிகளுக்கும் மேலும் சட்டவலுவினை வழங்க வேண்டியது தங்களது பெரும் கடமையுமென இஸ்லாமிய ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் அனஸ் மேலும் இலங்கை பிரதம அமைச்சரைக் கேட்டுள்ளார்.

–எம்.அனஸ், ஸ்ரீலங்கா இஸ்லாமிய ஆசிரிய சங்க பொது செயலாளர்.

## பொதுப் பாவனை இடங்கள் பறிபோகும் அபாயம்

கொழும்பு - 12 அப்துல் ஹமீத் 111ஆம் இலக்கத் தோட்டத்தில் அமைந்துள்ள 125 வீடுகளில் வாழும் சுமார் 2000 மக்களின் பாவனைக்காக இருந்த குளியல் றைகள் - மலசல கூடங்கள் தனியாருக்கு உரிமையான இடமாக மாறிவருவது குறித்து இங்கு வரும் பொதுமக்கள் விசனம் கொண்டுள்ளனர்.

பொதுமக்களின் சுகாதார நலனுக்காக தோட்ட மத்திய பகுதியிலும் பின் புற வாசல் பகுதியிலும் 14 குளியலறை கூடங்களும் 28 மலசல கூடங்களும் இருந்த இடங்களில் தற்போது 14 மலசல கூடங்களும் ஒரு குளியலறை கூடமும் மட்டுமே மக்கள் பாவனைக்காகக் காணப்படுகின்றது. போதைப் பொருள் பாவனையாளர் சிலர் சில கூடங்களை ஆக்கிரமிப்பு செய்வதால் பொது மக்கள் மேலும் பாதிப்புக்குள்ளாகுகிறார்கள். சில கூடங்களின் கதவுகளும் அகற்றப்பட்டுள்ளன.

அப்துல் ஹமீத் வீதி இலக்கம் 75, 95 இலக்கத் தோட்டங்களுக்கு மத்தியில் நகர சபையால் நிர்வாகிக்கப்பட்ட ஆண், பெண் மலசல கூடங்கள் போதிய கவனிப்பின்றி குப்பை கூழங்கள் போடும் இடமாக மாறி, பொது மக்களால் பாவிக்க முடியாத இடமாக நீண்ட காலமாக காணப்பட்ட இடத்தை நகரசபை பொறுப்பேற்று மலசல கூடங்களை இடித்து அவ்விடத்தில் மூன்று மாடி கட்டிடமொன்றை எழுப்பியது. புதுக்கடை மக்களின் நலன் பேண டிஸ்பென்ஸரி ஒன்றையும் சன சமூக நிலையமொன்றையும் வழங்கவுள்ளதாக சொல்லப்பட்டாலும் அக்கட்டிடம் கூட முழுமை பெறாமல் பல மாதங்களாக காட்சி தருகின்றது. அக்கட்டிடத் திற்குள்ளும் தற்போது குப்பை கூழங்கள் நிரம்பியே காணப்படுகின்றன. இதனால் சமூக விரோத நடவடிக்கைகளுக்குரிய இடமாக இது மாறிவருவதால் இப்பகுதி வாழ் மக்கள் வேதனையோடு இதனைப் பார்க்கிறார்கள்.

புதுக்கடை வட்டார மாநகர சபை உறுப்பினர்களின் கவனத்திற்கு இவ்விடயங்கள் கொண்டு வரப்பட்டபோதும் பொதுமக்கள் திருப்தியுற எவ்வித காத்திரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிர்தௌஸ், புதுக்கடை

# கரவாகுப் பிரதேச செயலாளர் பிரிவு சொல்லும் கதை

காலஞ் சென்ற சட்டத்தரணி கே.டபிள்யூ தேவநாயகம் உள்துறை அமைச்சராக இருந்த போது நிர்வாக முறையில் மாற்றங்கள் செய்தார். உதவி அரசாங்க அதிபர் முறையை ஒழித்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளை உண்டாக்கி அவற்றை நிர்வகிக்க பிரதேசச் செயலாளர்களை நியமித்தார். கரவாகுப்பற்றும் பிரதேசச் செயலாளர் பிரிவாக மாறியது. இத்தருணத்தைப் பயன்படுத்திய கரவாகுப்பற்றுத் தமிழர்கள் தங்களுக்கு முஸ்லிம் பிரதேசச் செயலாளரின் நிர்வாகத்தின் கீழ் இருக்க முடியாதெனக் கூறி தங்களுக்கு கரவாகுப்பற்றில் இன அடிப்படையில் பிரதேசச் செயலாளர் பிரிவொன்றை அமைச்சரிடம் வேண்டினர்.

கரவாகுத் தமிழர்களின் வேண்டுகோளை கவனத்திற் கொண்ட மந்திரி தேவநாயகம் அவர்கள், சட்டவரம்புகளுக்கப்பால் மந்திரி சபைத் தீர்மானத்தின் கீழ் கல்முனை தமிழர் பிரதேசச் செயலாளர் பிரிவொன்றை உண்டாக்கி அதற்கென தனியொரு செயலகத்தையும் நிறுவி தமிழர் பிரதேசச் செயலாளர் ஒருவரையும் நியமித்துக் கொடுத்தார். இச்செயற்பாட்டுக்கு கரவாகுப்பற்று முஸ்லிம்களோ கல்முனைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஏ.ஆர்.எம். மன்சூரோ எவ்வெதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

கல்முனைத் தமிழர் செயலாளர் பிரிவு இலங்கையில் புதுவிதமான ஒரு அமைப்பாகத் திகழ்ந்தது. இதற்கு குறிப்பிட்ட எல்லைகளில்லை. கரவாகுப் பற்றிலிருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் முஸ்லிம்களும் தமிழர்களும் புட்டும் தேங்காயும் போல் வாழ்கின்றனர். பாண்டிருப்பு தவிர்ந்த ஏனைய கிராமங்களில் வாழும் தமிழர்களையும் அவர்கள் வாழும் இருப்பிடங்களையும் அவர்களுடைய காணிபூமிகளையும் மற்றும் ஆதனங்களையும் ஒன்றாக்கி மந்திரி தேவநாயகம் கல்முனை தமிழர் பிரதேசச் செயலாளர் பிரிவை இன அடிப்படையில் உருவாக்கினார். இதனால் கரவாகுப் பற்றில் எஞ்சிய மக்களும் பிரதேசமும் முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவாக மாறியது. இவ்விரண்டு பிரதேசச் செயலாளர் பிரிவுகளும் பின்வருமாறு அமைந்திருக்கின்றன.

பாண்டிருப்புக் கிராமத்து முஸ்லிம்கள் தமிழர் பிரிவுக்குள்ளேயே சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இதனை வைத்துப் பார்க்கும் போது தமிழர்களையும் முஸ்லிம்களையும் கொண்ட பாண்டிருப்புக் கிராமத்தை மையமாக வைத்து அதனுடன் ஏனைய மேலே சொல்லப்பட்ட

| கிராமம் | முஸ்லிம் | தமிழர் |
|---|---|---|
| துறை நீலாவணை | x | x |
| மருதமுனை | x | - |
| பாண்டிருப்பு (முஸ்லிம்களுட்பட) | - | x |
| துரவந்தியன் மேடு | - | x |
| சேனக்குடி | x | x |
| நாற்ப்பிட்டி முனை | x | x |
| மணற்சேனை - தமிழர் பறங்கியர் | - | x |
| கல்முனை - கடைத் தெரு கடற்கரைப் பள்ளிப் பிரிவு இஸ்லாமாபாத் - சிந்தை | x | x |
| கல்முனைக்குடி | x | - |
| சாய்ந்தமருது | x | - |

கிராமங்களிலுள்ள தமிழர்களையும் அவர்களின் குடியிருப்புக்கள், காணிபூமிகள், மற்றும் சொத்துக்களையும் இணைத்தே கல்முனைத் தமிழர் பிரதேசச் செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்பின் படிப்படியாக கரவாகுப்பற்றிலுள்ள தமிழர்களுக்கு தனிமையான கல்விக் காரியாலயம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், வைத்தியசாலை, சுகாதார அதிகாரி பிரிவு முதலியவை அமைக்கப்பட்டு வருகிறது. இவை யாவும் சுமுகமாக இயங்கி வருகின்றன. இவ்வுதாரணத்தை மையமாக வைத்து கிழக்கு - வடக்கு மாகாணங்களின் முஸ்லிம்களைக் கொண்டு முஸ்லிம் அலகொன்றை அமைக்கலாம் என்பது சாத்தியம் எனத் தெரிகிறது.

கரவாகுப்பற்றில், சிறுபான்மையினரான தமிழர்களுக்கு, முஸ்லிம்களையும் பெரும்பான்மையினராகத் தமிழர்களையும் கொண்ட பாண்டிருப்புக் கிராமத்தை மையமாக வைத்து கல்முனைத் தமிழர் பிரதேசச் செயலாளர் பிரிவு அமைக்கப்பட்டிருப்பதுபோல், முஸ்லிம்களும், தமிழர்களும், சிங்களவரும் பறங்கியரும் வாழும் ஒருங்கிணைந்த, கல்முனை சம்மாந்துறை, பொத்துவில் நிந்தவூர் ஆகிய தோதற் தொகுதிகளை மையமாக வைத்து அதனுடன் கிழக்கு - வடக்கு மாகாணங்களின் கலைந்து வாழும் முஸ்லிம்களையும் அவர்களுடைய குடியிருப்புக்களையும், காணிகள் மற்றும் சொத்துக்களையும் இணைத்து முஸ்லிம்களுக்கென்று இடைக்கால நிர்வாகமொன்றை அமைப்பது சாத்தியமாகும். இதேபோன்று சிங்களக் குடியேற்றக்காரர்களுக்கும் இடைக்கால நிர்வாக அலகொன்றை அமைப்பது சாத்தியமானதாகும். கல்முனை தமிழர் செயலாளர் பிரிவு இயங்க கரவாகு முஸ்லிம்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

–காசிம் ஜீ, கல்முனை

# வாரமொரு உரைகல் - மருதூர் மெய்யொளி

## கடந்த காலத்தின் கனதி

நாம் நமது கடந்த காலத்தை மற ந்தோ, புறக்கணித்தோ எதிர்கா லத்தை செவ்வனே செப்பனிட வும், பேணுவதற்கும் முற்படுவோ மானால் அது சரியான செல் நெறியைக் கொண்டதாக அமை யப் போவதில்லை.

ஏனெனில், நாம் கடந்து வந்த பாதையை இரைமீட்டிக் கொள்வ தினால் நாம் நடந்து வந்த கடந்த காலத்தை நிகழ்காலத்தில் வெளிச்சமாக்கி வைக்கும். இத னூடாக நமது எதிர்காலத்தை நன்கு திட்டமிட்டு அமைத்துக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

நமது நேற்றைய வாழ்வுதான் இன்றைய வரலாறாகப் பதிவாகி, நாளையை நிர்ணயிக்கப் போகி ன்றது. ஆயின் தேவையான அவதானங்கள், மாற்றங்கள் என்பவற்றை நாம் ஏற்படுத்திக் கொள்ள நமது கடந்த கால இரை மீட்டல் உதவுவதுடன், நமது இருப்புச் சான்றின் ஒன்றான வர லாற்றுத் தடத்திற்கும் இது பங் காற்றுகின்றது.

இதனால்தான் அல்லாமா இக்பால் நமது கடந்தகால இரை மீட்டலின் கனதியையும், அது நமக்குப் புகட்டும் பாடங்களையும் பின்வரும் சிறிய வரிகளுக்குள் அர்த்த புஷ்டியான கருத்துக்களை நிறைவாகச் சொல்கின்றார்.

*"வாழ்வானது அதன் கடந்த காலச் சுமையை முதுகில் சுமந் தவாறே முன்னோக்கிச் செல் கின்றது. ஓர் இனமும் தனது கடந்த காலத்தை முற்றிலும் புறக்கணித்துவிட முடியாது. ஏனெனில், அவர்களது கடந்த காலமே அவர்களது வரலா ற்றை உருவாக்கியுள்ளது."*

ஆகவே, நாம் இன்றைய நிகழ்வுகளை சரியான ஒரு திசைக்குள் கொண்டு வருவதற்கும், நாளைய நமது வரலாற்றை ஓர் உத்வேகத்துடன் கூடிய உன்னதமாக வடிவமைத்துக் கொள்வதற்கும், நமது எதிர் காலச் சந்ததிகளை நெறிபிறழா வழியில் நிலை கொள்ளச் செய் வதற்கும், நமது வரலாற்றை அவர்களிடம் ஒழுங்குபடுத்திய நிலையில் கையளிப்பதற்கும் நாமின்று நமது கடந்த கால வாழ்வு நெறியின் இரை மீட் டலின் பக்கம் இணைந்திருப்பது இன்றியமையாத ஒன்றென்பதில் ஐயமில்லை.

## பதில் சொல்வாரா?

02.09.2003 செவ்வாய்க்கிழமை காலை சூரியன் செய்தி அறிக்கையில், புலிகளின் கிழக்குப் பிராந்திய பொறுப்பாளர் கர்ணா அம்மான் பரிசில் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் "முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அவர்கள் பேச்சுவார்த்தைகளில் தங்களுடன் பேசுவதை வேறு விதமாகத் திரிபுபடுத்தி, முஸ்லிம் மக்கள் முன் பேசுவதாகவும் அதனால் தாங்கள் அவரை நம்பவில்லை" என்றும் "அரசுடனான பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பு பேச்சுவார்த்தைக்கே இடமில்லை" என்றும் ஆணித்தரமாக சொன்னார். இதற்கு என்ன பதில்?

அமைச்சர் ரவூஃப் ஹக்கீம் அவர்களது விளக்கத்தை முஸ்லிம்களின் உரிமைக் குரலான முஸ்லிம் குரல் மூலம் அறிய விரும்புகின்றேன்.

என்.எல்.எம்.எஸ். ரஹ்மத்துல்லா மரிக்கார்,
123/16, சமகி மாவத்தை, புத்தளம்.

## விலை போகும் இறை நாமம்

"அதான்" (பாங்கு) இன்று சாதாரண அற்ப பொருட்களின் இலாபத்துக்காக புனிதமான 'அதான்' வைத்து விளம்பரம் செய்யப்படுவதை நாம் அன்றாடம் தனியார் தொலைக்காட்சி வாயிலாக பார்த்தும் கேட்டும் வருகின்றோம். இது முஸ்லிம்களின் கலாசாரத்திலும், கடமைகளிலும் சேறுபூசும் நிகழ்வாக இருக்கின்றது. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் தொலைத் தொடர்பு அமைச்சராக இருப்பவரும் ஒரு முஸ்லிமே! ஐவேளைத் தொழுகைக்காக ஒலிக்கும் அதான் இன்று (Ole Arshik) மென் பானத்துக்கான விளம்பரமாய் தொலைக்காட்சியில் ஒலி, ஒளி பரப்பப்படுவதை உடனடியாக இரத்துச்செய்ய வேண்டும். இது விடயத்தில் முஸ்லிம் விவகார அமைச்சும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையும் மற்றும் தொலைத் தொடர்பாடல் அமைச்சும் உடனடி நடவடிக்கை எடுக்குமா?

பஹ்மி, பீஸ் லேன்,
திருகோணமலை

## நீ தெரிந்து கொள்வதற்காக எழுதுகிறேன்!

காத்தான்குடி ஊர் எனது.
அடியில் வாசித்து என் பெயரைத் தெரிந்து கொள்.
மஹ்மூது லெப்பைக்கும் ஹதீஜாக் கண்டுக்கும் ஒரே மகனாய்
பிறந்தேன், அடக்குமுறையினூடே வளர்ந்து ஆளாகியுள்ளேன்.
கபுறடி வீதி ரெண்டாம் குறிச்சியில்.

முப்பத்தி ஐந்து வயதை இவ்வருட ஜூலையில்
முடித்த அனுபவத்தின் தைரியத்தில் எழுதுகிறேன்.
சத்தியமாக இவ்வூரில் ஒழியும் காடுகளில்லை
அடுத்தவனைக் கொன்றுவிட்டு
பதுங்கி ஒழிய வீதிக்கு வீதி பங்கர்களுமில்லை.
இல்லவே இல்லை - மேலும்,
கடத்திக் கப்பம் பறிக்கும் முகாமொன்றும் கூட இல்லை
எப்படிச் சொல்லுவாய் காத்தான்குடியில் ஜிஹாத் உள்ளதென்று?

வலது கையில் குர்ஆனையும், என்னூர்க்காரர்கள்
சமாதானத்தை மற்றக் கரத்திலும் சுமப்பவர்கள்
உயிரைக் குடிக்கும் படுகொலைத் துப்பாக்கிகளை
படமாய்க் கீறுவதையும் பாவமென்று தவிர்ப்பவர்கள்
காத்தான்குடியில் போர்ப் பயிற்சி முகாமென்று
வதந்திகளை விதை தூவும் உன்னயோக்கியத்தனமென்ன?

முஸ்லிம்கள்தான் நூறுவீதமிவ்வூரில்
பாங்கொலி பொழிந்து நனையும் மூலை முடுக்குகள்
ஏராளமிருக்கையில், இந்நிலத்தில்
இரத்தத்தைத் தெளிக்க விருப்பமில்லைதானெவருக்கும்.
சுன்னத்துக்காகவே தொப்பியுடுத்துமிந்த ஊரார்
யுத்தத்தில் தலையைப் பாதுகாக்கும் கவசத் தொப்பிகளை
முசுப்பாத்திக்கும் நினைத்துப் பார்க்கதில்லை
காத்தான்குடியில் முஸ்லிம் படையணி இருப்பதாக
வெறும் புரளி கிளப்புகிறாயே?



இவ்வூரின் உம்மா மார்களுக்கு
ஆலிமாகவும் ஆசிரியனாகவும் தங்கள் மகன் மார்களை
செதுக்கிப் பார்க்கத்தான் சரியான ஆசை
வியாபார வாப்பாக்கள் கூடவிப்போது
டொக்டருக்குப் படி இன்ஜினியராகு என்றுதான்
தம்பிள்ளைகளைப் புத்தி சொல்கிறார்கள்.
யாரும் இதுவரை கூறவில்லை
சண்டைக்குத் தயாராகு, சந்தியில் பதுங்கிச் சுடு
ஆட்களைக் கடத்து
பக்கத்து ஊர் வீட்டுக்குள் நுழைந்து
மனிதர்களைக் கொல்லு என்ற கொடுமைகளை
தன்பாடுண்டு என்றிருக்கும் காத்தான்குடிக்காரருக்கு
துப்பாக்கி சுடும் பயிற்சி என்ன மசிருக்குத் தேவை.

எனக்குத் தெரியும்
எங்களை அழிப்பதற்கு, துரத்தியடிக்க
நீ பயன்படுத்தவிருக்கும்
உனது துப்பாக்கிகளை, வெடி குண்டுகளை
இன்னும் பலஞ் செய்கிறவொரு பெருஞ்சதிதானிதுவென்று

ஆனால்,
அமைதி விழித்துக்கொண்டு மாத்திரமே இருக்கும்
இக் காத்தான்குடிக்குள் நீ அத்துமீறி வந்து
ஒரு துப்பாக்கியால் அச்சுறுத்தி விரட்டியடிக்க எதிர்பார்க்கையில்
இரண்டு மூன்று துப்பாக்கிகளால்
உனக்குப் பதிலடி தருகிற தைரியத்தை ஏந்தி நிற்கும்
இளைஞர்கள்
இவ்வூரின் எல்லைகளில் காத்து நிற்பார்கள் சத்தியமாக.

2003.09.02
–எம்.எல்.எம். அன்ஸார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டம்பர் 11 நீறுபூத்த நெருப்பு

கடந்த செப்டம்பர் 11யையும் உலகம் அதிர்ச்சியுடனேயே கழித்தது. இத்தினத்தை உலகில் அதிகம் பேர் உச்சரிக்கத் தவறவில்லை. அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இத்தினத்தை மிக்க அதிர்ச்சியும் நடுக்கமும் கலந்த மனோநிலையில்தான் சந்தித்தன என்றால் அது மிகையல்ல.



2001 செப்டம்பர் 11ல் அமெரிக்காவில் நடந்தேறிய எதிர்பாராத தாக்குதலின் மூலம். உஸாமா அமெரிக்காவை ஆட்டி அசைத்தார் என்றால் அதற்கு எந்தவிதத்திலும் குறைவில்லாத வகையிலேயே இந்த இரண்டாவது வருடத்திலும் உஸாமா மேற்கை கதிகலங்க வைத்து விட்டார். இதுவரை அமெரிக்காவால் பரப்பப்பட்டு வந்த - ஒசாமாவை அழித்து. அஞ்சி நடுங்க வைத்து விட்டோம் என்ற பொய்ப் பிரச்சாரத்திற்கு இந்தச் செப்டம்பர் 11 தக்க பதிலை கொடுத்திருந்தது. செப்டம்பர் 11ம் திகதியை முன்னிட்டு கட்டாரிலிருந்து ஒளிபரப்பப்படும் அல் ஜெஸீரா தொலைக்காட்சியில் உஸாமாவும். அவரது முக்கிய தளபதியும் தோன்றியதும். அவர்களின் பிரகடனம் ஒலிபரப்பப்பட்டதும் - அமெரிக்காவை தோல்வியின் அவமானத்தில் தலை குப்புறச் செய்து விட்டது.

மேலும் அத்தொலைக்காட்சி உஸாமாவினதும் அவரது தளபதியான அய்மன் அல் ஜவாரியினதும் படங்களையும் ஒளிபரப்புச் செய்தன. மிகவும் வயது முதிர்ந்த தோற்றத்துடன் காணப்பட்ட உஸாமாவினது உரையில் கம்பீரமும் கர்ச்சனையும் இருந்தது. -

அவர்களது உரையில் இனி மேல்தான் அமெரிக்கா உண்மையான யுத்தத்தை எதிர்நோக்கப் போகின்றது என உறுதியுடன் தெரிவித்துள்ளனர் - இந்தச் செய்தியை அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் செப்டம்பர் 2001 தாக்குதலை விட அதிக பாதிப்புடன் எதிர் கொள்ள நேரிட்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

உஸாமாவினது உரையில் "ஈராக்கில் அடிபணியாது போராடிக் கொண்டிருக்கும் எமது சகோதரர்களே! உங்களை நாங்கள் வாழ்த்துகிறோம். கொடூரக்காரர்களை எதிர்த்து போர் புரிபவர்கள்தான் உண்மையான பெருமைக்குரியவர்கள். வீரமானவர்கள். அமெரிக்காவுடன் இனிமேல்தான் உண்மையான சண்டை தொடங்கப்போகிறது. அமெரிக்காவின் ஆதிக்கத்தின்மீது எதிர்பாராத வகையில் அதிர்ச்சியான தாக்குதல்கள் நடாத்தப்படும் என உஸாமா உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

அவரை அடுத்து உரையாற்றிய தளபதி அய்மன் அல் ஜவாயிர் தனது உரையில் இப்படித் தெரிவித்துள்ளார். "அழிவுக்கும். கொலைக்கும் ஆதரவாக நாங்கள் போரிடவில்லை. எங்கள் மீது ஆதிக்கம் செலுத்த நினைப்போரின் அடக்குமுறைக் கரங்களை இறைவனின் துணையுடன் முறியடிப்பதற்கே நாங்கள் போரிடுகிறோம். எனவே எங்களுக்கு காயம் ஏற்படுத்திய அடக்கு முறைச் சக்திகளே தண்டனையை ஏற்கத் தயாராக இருங்கள். அமெரிக்கா ஏற்படுத்திய காயம் எமது மக்கள் மனங்களில், ஆப்கானிஸ்தானிலும். ஈராக்கிலும் ஆறாமல் இருக்கிறது. இதற்கு அமெரிக்கா பதிலளித்தே ஆக வேண்டும்" என்கிறார்.

இவர்களது அல் ஜெஸீரா உரையை அடுத்து இப்போது உலகெங்கும் உள்ள மக்களில் அதிகமானோர் அமெரிக்காவின் முகமூடி கிழிந்துவிட்டதையும் உணர்கின்றனர். உஸாமாவையும் அவரது இயக்கத்தையும் அழித்தொழிப்பதற்கே ஆப்கானிஸ்தான் மீது படை எடுத்து ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்தோம் என்கிற அமெரிக்காவின் கொலைகளுக்கான நியாயம். இப்போது பொய்த்துப் போய்விட்டது. தலைகுனிவுக்கு மேல் தலை



குனிவை அமெரிக்கா இந்த செப்டம்பர் 11இல் சந்தித்தது.

அமெரிக்காவின் இன்றைய தந்திர யுத்தமான "பயங்கரவாதம் மீதான போர்" இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது மட்டுமன்றி பயங்கரவாதம் என்பது அமெரிக்காவின் செல்லப்பிள்ளைதான் என்பதையும் மெய்ப்பித்து விட்டது. அமெரிக்கா பயங்கர வாதத்தைக் கைவிடாதவரை பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கான இஸ்லாமியர்களின் தற்காப்பு யுத்தமும் தொடரத்தான் செய்யும்.

*பாதுஷா*

*பாதுஷா*

# பாரம்பரியத் தாயகம், ஆள்புல எல்லை என்ற கருத்தாக்கங்களிலுள்ள குழப்பம்.

அரசியல் பத்தி

- ஸலாமத் -

வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம் தேசியம், தமிழ்த் தேசியத்திற்கு வடக்கு கிழக்கு பொதுவான தாயகமாக உள்ளது. இந்த அரசியல் எதார்த்தம் இலங்கை அரசியலுடன் தொடர்புடைய சகல தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். அதேசமயம், ஆள்புல எல்லை என்பது இரு தேசியங்களும் தத்தமக்கென உருவாக்கிக் கொள்ளும் சுயாட்சி அலகின் புவியியல் எல்லைகளாக அமைகின்றது. இவ்விடயம் தற்போது கடுமையான தர்க்கங்களுக்கு உட்பட்ட அரசியல் மூலாதாரப் பிரச்சினையாக உள்ளது. நாம் இங்கு சுட்டிக்காட்ட முனையும் விடயம் யாதெனில், பொதுவான தாயகம் என்பதையும். ஆள்புல எல்லை என்பதையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை. குறிப்பிட்ட ஆள்புல எல்லைகள் ஒவ்வொன்றுக்கும் என ஒரு ஆட்சி முறையும். ஒரு அரசியல் சாசனமும். சட்டம் ஒழுங்கு முறைமைகளும் நடைமுறையில் இருக்கும்.

மேற்படி கருத்தாக்கங்கள் தொடர்பாக ஒரு ஆரம்பப் புரிதலைக் கொண்டிருப்பது. வடக்கு கிழக்கு பிரதேசத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம்களும் அரசியல் சமத்துவத்துடன் தத்தமக்குரிய ஆட்சி முறைகளை வகுத்துக் கொள்ளவும். அதேசமயம் இரு தரப்பிற்கும் ஏற்புடைய ஒரு பொதுவான அரசியல் ஏற்பாட்டையும் உருவாக்கிக் கொள்வதற்கும் பயன்தருவதாக அமையும்.



தாயகம். ஆள்புல எல்லை என்ற விடயங்களுக்கு வருவோம். ஏற்கனவே குறிப்பிட்டபடி. தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் பொதுவான தாயகமாக வடக்கு- கிழக்குப் பிராந்தியம் உள்ளது. அதேசமயம். இப்பொதுவான தாயகத்தில் தமிழ் மக்களுக்கு என தனியான ஆள்புல எல்லையும் முஸ்லிம்களுக்கு என தனியான ஆள்புல எல்லையும் வகுக்கப்பட வேண்டிய அரசியல் யதார்த்தத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். விரும்பியோ. விரும்பாமலோ இது நடந்தேயாக வேண்டும். ஏனெனில் வடக்கு கிழக்கு தாயகத்தின் இரு தேசிய இனங்களுக்கிடையிலான நியாயமான அதிகாரப் பகிர்வே வடக்கு கிழக்கு தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வாகும்.

தவிர்க்க முடியாத பூகோள அமைவு காரணமாகவும். வாழையடி வாழையாக அமைந்த சிக்கலான குடிப்பரம்பல் காரணமாகவும் மேற்குறிப்பிட்ட முஸ்லிம் ஆள்புல எல்லைக்குள் தமிழ் மக்கள் மிகச் சொற்ப எண்ணிக்கையில் திட்டுத்திட்டாக அமையலாம். ( அதாவது தமிழ் மக்கள் தமக்கென முற்றிலும் தனியான ஒரு கிராம சேவகர் பிரிவினைக் கொண்டிருக்க முடியாத அளவிற்கு குடிச்சிதறலாக அமையும் போது - உதாரணமாக மூதூர் நகரப் பகுதி ) அவ்வாறே. உருவாக்கப்படக் கூடிய தமிழ் ஆள்புல எல்லைக்குள் முஸ்லிம்கள் சிறு திட்டுகளாக எண்ணிக்கைச் சிறுபான்மையாக அமையலாம். (அதாவது முஸ்லிம்கள் தமக்கென தனியான ஒரு கிராம சேவகர் பிரிவினை கொண்டிருக்க முடியாத அளவிற்கு குடிச் சிதறலாக அமையும் போது- உதாரணம் திருமலை நகர்ப்புறங்களில்).

தமிழ் ஆள்புல எல்லைக்குள் முஸ்லிம்கள் எண்ணிக்கைச் சிறுபான்மையாக அமையும் போது. குறிப்பிட்ட முஸ்லிம்கள் அங்கு நிலவும் ஆட்சி முறையின் அரசியல் சாசனம். அரசியல் ஏற்பாடுகள். சட்டம் ஒழுங்கு என்பவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருக்கும். அதேபோன்று முஸ்லிம் ஆள்புல எல்லைக்குள் எண்ணிக்கைச் சிறுபான்மையாக தமிழர்கள் அமையும் போது. குறிப்பிட்ட தமிழ் மக்கள் அங்குள்ள முஸ்லிம் சுயாட்சி முறையின் அரசியல் சாசனம் அரசியல் ஏற்பாடுகள். சட்டம் ஒழுங்கு என்பவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறான ஒரு தரப்பு ஆட்சிமுறைக்குள்ளும் ஆள்புல எல்லைக்குள்ளும் எண்ணிக்கைப் பலவீனம் காரணமாக பாதிப்புறக் கூடிய வாய்ப்பு உள்ள முஸ்லிம்களோ அல்லது தமிழ் மக்களோ அவ்வாறான பாதிப்புக்களையும் அடக்குமுறைகளையும் தவிர்க்கும் விதத்தில் எல்லா வகையான சட்ட. சாசன ஏற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வது பரஸ்பர அக்கறையுடன் தனியாகப் பார்க்கப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும் என்பதையும் இது அரசியல் பேச்சுவார்த்தை மூலமாக நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள அனைத்துத் தரப்பும் கவனத்தில் கொள்ள வேண்டியது என்பதையும் இங்கு குறித்துக் கொள்வோம்.

இவை எல்லாவற்றையும் விட முக்கிய அம்சம் ஒன்று உள்ளது. ஒவ்வொரு தனித்தனி தன்னாட்சி ஆள்புல எல்லைக்குள்ளும் எண்ணிக்கைச் சிறுபான்மையினராக அமையும் மக்கள் தொகுதியின் அரசியல். ஜனநாயக மற்றும் அடிப்படை மனிதவுரிமைகள் அதற்குரிய அரசியல் சாசனத்திலும் நடைமுறை செயற்பாடுகளிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்றால். இதற்கான அரசியல் பக்குவத்தை குறிப்பிட்ட ஆள்புல எல்லைக்குள் எண்ணிக்கைப் பெரும்பான்மையாக அமையும் தேசிய சமூகம் கொண்டிருக்க வேண்டும். இது நடைபெறாத பட்சத்தில் ஒரு சிவில் யுத்தத்திற்குள் மற்றுமொரு சிவில் யுத்தம் அல்லது யுத்தங்கள் வெடிப்பது தவிர்க்க முடியாத அரசியல் விதியாகும்.

மேற்குறிப்பிட்ட அரசியல் பக்குவத்தை ஏற்படுத்தும் எந்தவித முயற்சிகளாவது. அரசு தரப்பிலும், தமிழ்த் தரப்பிலும். முஸ்லிம்கள் தரப்பிலும் இதுவரையிலும் எடுக்கப்பட்டுள்ளதா? போகட்டும். இத்தரப்புகள்தான் பகைமை மேலோங்கி ஒன்று மற்றொன்றுடன் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன. ஆனால். இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாக கூறிக் கொண்டு நேரடியாகவும் நிழல்மறைவாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளாவது மேற்படி விடயம் குறித்து கரிசனை கொண்டுள்ளார்களா? இல்லை. எனவே சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளும் இவ்விடயத்தில் கவனத்தைக் குவித்து [illegible] அரசியல் அச்சத்தைப் போக்குவதற்குப் பாடுபட வேண்டும்.

# காலம் தாழ்த்தி புத்தளத்திலிருந்து மடல் ஒன்று...

தலைவர் ரவுப் ஹக்கீம் அவர்கள்,
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்
தாருஸ்ஸலாம்,
கொழும்பு.



அன்புடையீர்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹூ

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஓர் அமைப்பை உருவாக்க வேண்டிய தேவை ஒன்று உணரப்பட்ட காலத்தில் பின்னணியில் 1976-ம் ஆண்டு புத்தளம் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவமும் இருந்ததாக கட்சியின் காலஞ்சென்ற தேசியத் தலைவர் அல்-ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் மேடை தோறும் முழங்கி வந்ததை தங்களுக்கு நினைவு காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டதையிட்டு உண்மையிலேயே வருந்துகிறேன்.

முஸ்லிம்களின் நலனைப் பேணுவதற்காக புத்தளம் பெரிய பள்ளிவாசல் படுகொலை சம்பவத்தை ஆதாரமாகக் காட்டி அமைக்கப்பட்ட ஒரு கட்சி. தனது நலனுக்காக ஏங்குகின்ற ஒரு பிரதேசத்தை கைவிட்டு பாராமுகமாக இருக்கும் கல்நெஞ்சத்தை மறைத்து இதுவரையில் போலி வேஷம் போட்டதா என்ற சந்தேகத்தை எம் மனதிலே எழுப்பியுள்ளது.

'புத்தளம் மாவட்ட முஸ்லிம்களே! எமது வழக்கை இன்னும் நீங்கள் நிராகரிக்கலாமா' என்ற பெயரில் மறைந்த தலைவர் புத்தளம் மண்ணில் நிகழ்த்திய உரையை புத்தக வடிவில் வெளியிட்டு அன்று புத்தளம் மண்ணிலே தோல்வியுற்றதற்கான காரணத்தை வினவியது. இன்று அதே கேள்வியை நாங்கள் இப்போது முன்வைக்க விரும்புகிறோம். புத்தளம் மண்ணின் முஸ்லிம்களை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கைவிட்டதேன்?

முஸ்லிம் காங்கிரஸ் எம் மண்ணில் பொது சன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும். மாகாண சபைத் தேர்தலிலும் போட்டி போட்ட போதும். நாடாளு மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டி யிட்ட போதும். நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்ட போதும் புத்தளம் மக்கள் முஸ்லிம் காங்கிரசுக்களித்த வாக்குகளை ஆராய்ந்து பார்த்தால். இம்மக்கள் முஸ்லிம் காங்கிரசில் எவ்வளவு பெரும் நம்பிக்கை வைத்திருந் தனர் என்பது உங்களுக்கு நன்கு புரியும். நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் உள்ளுணர்வோடு சுமார் 26 ஆயிரம் வாக்குகளை முஸ்லிம் காங்கிர சுக்காக அள்ளிக் கொடுத்துவிட்டு, அதன் மூலம் நீங்கள் கைகோர்த்து நின்ற ஐக்கிய தேசியக் கட்சியை வெல்ல வைத்துவிட்டு வெறுங்கையோடு வாய்பார்த்து நிற்கும் இந்த நாதியற்ற சனங்களை கைவிட்டு விட்டு இன்று போய் நாளை வா என்று சொல்லாமல் மூன்று வருடங்கள் கழித்து வா என்று சொல்லியிருக்கிறீர்கள் என அறிய வருகிறோம்.

மூன்று ஆண்டுகள் கழித்து அந்த சுகத்தை புத்தளம் மக்கள் அனுபவிப்பர் என்பதற்கு உங்களிடம் என்ன உத்தரவாதம் உண்டு? ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதை போல, கடந்த 13 வருடங்களாக ஒரு நாடாளுமன்ற பிரதிநிதிக்காக ஏங்கும் எம்முன் நீலிக் கண்ணீர் வடித்த கட்சியை புத்தள மண்ணின் மைந்தர்கள் நன்கு புரிந்து கொண்டனர்.

புத்தள மண்ணில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை கொஞ்சம் அவதானித்துப் பார்த்தால் உங்களுக்குப் புரியும். ஐந்து தொகுதிகளில் புத்தளம் தொகுதியில் மாத்திரம் தான் 17 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளை ஐக்கிய தேசிய முன்னணிக்கு அள்ளித் தந்தார்கள் மக்கள். மற்றத் தொகுதிகளில் எதிலாவது 4 ஆயிரத்திற்கு மேல் அதிகப்படியான வாக்குகள் இருந்ததா என்று சற்று ஆராய்ந்து பாருங்கள். இந்த 17 ஆயிரம் வாக்குகள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வாக்குகள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

உங்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாயிஸ் புத்தளம் மாவட்டத்தில் பெற்ற விருப்பு வாக்குகள் 26 ஆயிரம் என்பதை நினைத்துக் கூட பார்க்கவில்லையே நீங்கள். இந்த 26 ஆயிரம் மக்களும் மீண்டும் அரசியல் அநாதைகளாகி விட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஜனாப் ஹாபி அவர்களுக்கு துரோகம் செய்யப்பட்டு தோற்கடிக்கப்பட்டதாக கேள்விப்பட்டு மனந் நொந்துபோன நிலையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயவுக் கரம் நீட்டும் என்று எதிர்பார்த்து பட்டாசுகளோடும். மாலைகளோடும் மக்கள் பார்த்திருந்த வேளையில்தான் இன்று போய் மூன்றாண்டுகள் கழித்து வா என்று வெறுங்கையோடு அனுப்பிவிட்ட மற்றுமொரு துக்ககரச் செய்தி கிடைத்தது.

இப்போது புத்தளம் மக்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை ஒரு நம்பத் தகுந்த கட்சியாக தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ள பின்வாங்குகின்றனர். இறுதியாக முஸ்லிம்களுக்கென ஒரு கட்சி தேவை இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஞ்சான் உம்மா ஒரு முறை சொன்னதை நீங்கள் உறுதிப்படுத்திக் காட்டிவிட்டதாக புத்தளம் மக்கள் பேசிக்கொள்வதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம்.

வஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ.

இவ்வண்ணம்.
ஒரு முஸ்லிம் வாக்காளன்,
புத்தளம்.

*குறிப்பு*

இக்கடிதம் 2002 ஜனவரி 27 பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்தகையுடன் எழுதப்பட்டது. இக்கடிதத்தை உணர்வுகளின் சூட்டோடு என்னால் அனுப்பிவைக்க முடியவில்லை. ஆனால் அண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் "புத்தளத்திற்கு வந்து மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தருவேன்" என மக்களை ஏமாற்ற முயற்சித்ததை அடுத்து பழைய வாக்குறுதியை ஞாபகப்படுத்தவே உங்கள் பத்திரிகைக்கு அனுப்பி வைக்கிறேன். புத்தளம் மக்கள் சார்பில் இக்கடிதத்தை பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்கிறேன்.
நன்றி.

## 70 பணிப் பெண்கள் சிறைக்கூடம் போன்ற அறைகளினுள், ரியாத் நகரில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்

### - தப்பிவந்த பெண் திடுக்கிடும் தகவல்

கடுங்கொடுமைகளுக்கு மத்தியில் இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்ற 70 பெண்கள் சவூதியில் உள்ள ரியாத் நகரில் முகவர் ஒருவர் வீட்டில் மாதக் கணக்காக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒரு நாளைக்கு 1 ரொட்டியே உணவாக வழங்கப்படுகிறதாம். இவ் தாகத்திற்கு அருந்துவது மலசல கூடத்தில் உள்ள தண்ணீரைத்தானாம். இவ் அதிர்ச்சித் தகவலை இத்தடுப்புச் சிறையிலிருந்து இலங்கைக்கு தப்பிவந்த மாத்தளையைச் சேர்ந்த பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அப்பெண்மணி தற்போது மாத்தளையிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர்களில் சில பெண்கள் தாக்குதலுக்குள்ளாகிக் கொண்டிருப்பதாகவும். அவர்கள் மிகவும் வேதனைக்குள்ளாகியுள்ளதாகவும் தெரியவருகிறது. இவர்களை மீட்பதற்கு இலங்கை அரசாங்கம் உருப்படியான முயற்சிகளை மேற்கொள்ளுமா?

## வளத்தாப்பிட்டி சிங்கள மக்களின் பூமி உரிமை கோருகிறது சிங்கள ஹெல உறுமய!

சம்மாந்துறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வளத்தாப்பிட்டிக் கிராமம் சிங்கள மக்களின் பாரம்பரிய வரலாற்றுப் பூமி எனவும். இப்பிரதேசத்தில் கி.மு. 20 நூற்றாண்டுக்குரிய பௌத்த கல்வெட்டுக்கள் காணப்படுவதாகவும் கூறி சிங்கள ஹெல உறுமய இப்போது இப்பிரதேசத்தை முற்றுகையிட முன்வந்துள்ளது.

அம்பாறை மாவட்டம் ஏலவே சிங்கள குடியேற்றத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிக்கப்பட்டுள்ள சூழலில் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த சிங்கள பௌத்த வதிவிடங்களின் ஒரே அடையாளமாகவும். புராதன பௌத்த தொல்பொருள்கள் நிறைந்த இடமாகவும் இது உள்ளது என தெரிவிக்கப்படுகிறது. இப்போது இப்பிரதேசத்திற்கு மக்கள் செல்வது முற்றாக தடைசெய்யப்பட்டு சிங்கள ஹெல உறுமைக்கு இவ்விடம் திறந்து விடப்பட்டுள்ளது புதை பொருள் அகழ்வாராய்ச்சிக்காக. பொலிசாரும் அதிரடிப்படையினரும் இவர்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வாழ் நண்பனுக்கு

என் இனிய நண்பா!
நீண்ட நாட்களுக்குப் பிறகு இம்மடலின் மூலம் உன்னுடன் பேசிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். 1990 களில் நீ பிறந்து வளர்ந்த மண்ணிலிருந்து கட்டிய துணியோடு அடித்து விரட்டப்பட்ட அந்த துயரச் சம்பவத்தை என்னிடம் நீ சொல்லி அழுததை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். என்றும் நம் இதயத்தை விட்டகலாது இத்துயரத்தின்வடு.

நண்பா! நீ நிறையவே இழந்து விட்டாய், உன் உயிரைத் தவிர. அன்று நீ வடக்கில் வசப்பட்டாய். இன்று நான் கிழக்கில் அகப்பட்டிருக்கிறேன். நாளை நானும் கட்டிய துணியோடு எங்கோ ஓர் மூலைக்கு துரத்தப்படலாம். அப்போது நான் நீ பட்ட துன்ப துயரங்களை அனுபவித்துப் பார்க்கிறேன். பயங்கரவாதம் எம்மை பயமுறுத்தி அழிக்கப்பார்க்கிறது. உரிமைக்கான போராட்டம் எனக்காட்டிக் கொண்டு. அப்பாவியான என்னையும். உன்னையும், நம் சமூகத்தையும் நசுக்கிவிட்டு நாக்கை நுழைக்கிறது. எனது வாழ்க்கையின் இருப்பை அச்சுறுத்தி ஆட்டம் போடுகின்றது. அவர்கள் அவர்களது உரிமைக்காகப் போராடட்டும். நமது உரிமைக்குள் மூக்கை நுழைக்காமல்.

**ஆர். அலிக்கான்**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

நண்பா! மற்றவர்கள் நம்மை எவ்வாறு உருவாக்கி வைத்திருக்கிறார்களோ அதை தீவிரமாகவும் ஆழமாகவும் மறுப்பதன் மூலம் மட்டும்தான். நாம் நாமாக உருவாகிறோம் என்பதை நான் உனக்கு ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். ஒரு பயங்கரமான நிகழ்காலத்தின் எதிர்கால குழந்தைகள் நாம். இன்று நம்மீது அழித்தொழிப்பு நடவடிக்கைகள் முடக்கிவிடப்பட்டு நிறுவன மயப்படுத்தப்பட்டிருக்கிறது. நமது எதிர்காலம் கேள்விக் குறியாய் தொக்கி நிற்கின்றது. வன்முறையினால் அவர்கள் நம்மை அடக்கப் பார்க்கிறார்கள். ஒரு காலத்தில் இந்த உண்மை நமக்குப் புரியாத போதும் இன்று நாம் ஏமாளிகளல்ல.

போராட்டத்திலிருந்து வெகுதூரம் விலகியிருக்கும் நாம் நமது தனித்துவத்தை திருப்பிப்படைக்க போராட்டம் நம்மீது அவசியமாகின்றது. நம்மைச் சூழ்ந்திருக்கும் பயங்கரவாத இருளை அழிக்க வேண்டுமானால் அமைதியாக இருந்து ஆகப்போவது ஒன்றுமில்லை.

நண்பா! இன்னும் நீ போலி இருத்தலின் சிதைவுகளில் தஞ்சம் புகுவாயானால் உன் பிறப்புரிமையை பெருச்சாளிகள் சிதைத்து விடுவார்கள். உன் தேசிய மண்ணை காதலிப்பாயானால் உன் காதல் ஜெயிக்க போராடித்தான் ஆக வேண்டும். நண்பா! உனக்கும் எனக்கும் தன்னெழுச்சி என்ற மனப்பாண்மை வர வேண்டும்.

அப்போதுதான் நமது தேசியத்தின் இருப்பைப் பாதுகாக்க முடியும். நாம் அடைய வேண்டிய இலக்கு, அடக்கு முறையிலிருந்து விடுதலையே. நம்மில் தொலை நோக்குப் பார்வை கொண்டோர் கடைசிப்பட்சமாக மேற்சொன்ன இலக்கை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்கள்.

முஸ்லிம்களுக்கு நடந்து கொண்டிருக்கும் கொடுமைகளையும், சித்திரவதைகளையும் பார்த்துக்கொண்டு நமது அரசியல் தலைவர்கள் என்ன செய்கிறார்கள்? என நீ கேட்பது எனக்கு விளங்குகின்றது. அவர்கள் தொடங்கு முன்பே தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கிறார்கள். *நமது அரசியல் தலைமைத்துவச் சமூகம் தமக்குத்தாமே பேயோட்டிக்கொண்டும் தமக்குத்தாமே விளக்கமளித்துக் கொண்டுமிருக்கின்றது. பேய் பிடித்தலும் பேய் விரட்டலும்தான் நம் அரசியல் தலைவர்களின் சாதனைகள். இப்போது அருவருப்பான கொள்கைகளை முன்வைப்பதும் அதே சமயத்தில் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்காமல் விலகிநிற்பதும் குறிப்பிட்ட அரசியல் தலைவர்களின் தனிச்சிறப்பான பண்புகளாக இருக்கின்றன.*

அரசியல் தலைவர்கள் தங்கள் உரைகளில் முஸ்லிம் தேசத்துக்கு ஒரு பெயரை வழங்குகிறார்கள். இருப்பினும் இந்த உரைகளில் தெளிவான பொருளோ, அரசியல் சமூக வேலைத் திட்டங்களோ இருப்பதில்லை. மேடைப் பேச்சுக்களின் மூலமும், தேசிய பத்திரிகைகளில் எழுதுவதன் மூலமும் அரசியல்வாதிகள் மக்களை கனவு காணவைக்கிறார்கள். நமது தேசியத் தலைவர்கள் நெருப்போடு விளையாடுகிறார்கள்.

சுதந்திரத்தை அனுபவிக்கும் தலைவர்கள் நமது போராட்டத்தில் பங்கேற்காமல் ஒதுங்கியிருக்கிறார்கள். அதிகார வர்க்க ஆதரவும், மிதவாத கோரிக்கைகளும் கொண்ட இந்தத் தலைவர்கள் திடீரென்று பயனற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். நடக்கும் நிகழ்ச்சிகளிலிருந்து அவர்கள் வெகுதூரம் விலகியிருப்பதை நாம் காண்கிறோம். இருந்தாலும் இந்த மோசடிகளுக்கு சிகரம் வைக்கும் முயற்சியாக அவர்கள் மௌனமாக்கப்பட்ட நமது தேசத்துக்காக பேசுவதாக சொல்கிறார்கள்.

நண்பா! இன்று நாம் நிராயுதபாணியாக்கப்பட்டிருக்கிறோம். ஆயுதபாணிகள் நம்மை ஆட்டிப்படைக்கிறார்கள். இடைக்கால நிருவாகத்தின் உள்ளடக்க பொருளும் இதுவாகத்தான் இருக்கப் போகிறது. அவர்கள் காற்றை விதைத்தார்கள். இன்று அது சூறாவளியாக மாறிக் கொண்டிருக்கிறது. நாம் சிந்திப்பவர்களாக இருந்தால் நம்மில் ஒவ்வொருவரும் நமக்காக சிந்திக்க வேண்டியிருக்கும்.

நண்பா! நானும் நீயும் தண்டனையை நிறைவேற்றுபவர்களுமல்ல அதற்குப் பலியாகுபவர்களுமல்ல. உன்செயலின்மை உன்னை ஒடுக்கப்படுவோரின் அணியில் இடம்பெற வைக்கும் பணியையே செய்து கொண்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக்கொள். நண்பா! வெறியும், பயமும் என்முன் முனைப்போடு ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் நீ ஏன்? வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்? என்ன கேவலம் இது? உன் மௌனத்தால் எந்தப் பயனும் இல்லை. இன்று சித்திரவதையின் சுட்டெரிக்கும் சூரியன் அதன் உச்சத்தில் உள்ளது. நாம் மீண்டெழுவோமா? அல்லது நாம் கைகால்கள் கட்டப்பட்டு அச்சத்தாலும், அவமானத்தாலும் பீடிக்கப்பட்டிருக்கிறோமா? நண்பா! இதற்குக் கீழும் நாம் விழமுடியாது. வரலாற்றை உருவாக்குவோரின் அணியில் சேர்ந்து கொள்வது எப்போது? சொல். ஆக்கிரமிப்புக்கெதிரான தேசப் போராட்டத்திற்கு தயாராக இருக்க வேண்டிய தருணம் இப்போது நம் முன்னிலையில் இருக்கின்றது. பயங்கரவாதிகளால் நம்மீது தொடங்கி வைத்த சுதந்திர வாழ்முறையின் தேக்கநிலைக்கு ஒரு முடிவைக் கொண்டுவரவும், புது வரலாற்றை உருவாக்கவும் நாம் முன்னோக்கிச் செல்லத் தயாராகிவிட்டோம் என்பதற்கு எந்த நிரூபணமும் இல்லை.

ஒரு புதிய தேசம் உதித்தெழுவதற்கும், காலணிய கட்டுமானங்கள் உடைத்தெறியப்படுவதற்கும் நாம் முன்னெடுக்க வேண்டிய போராட்ட வழிமுறைகள் என்ன? நம்மை சுற்றிச் சூழ்ந்திருக்கும் வன்முறைச் சூழலுக்கு நாம் மீண்டும் பலியாகிவிடக் கூடாது. நமது முதல்தேவை நமது எதிரியை இனம்கண்டு கொள்வதுடன், நமக்கிருக்கும் எல்லா துரதிஷ்டங்களையும் புரிந்துகொள்வதுதான். பயங்கரவாதிகள் வீசும் காற்றில் புயலின் அறிகுறிகள் இருப்பதைக் கண்டு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

நண்பா! நம்மை அச்சம் ஆட்சிபுரிகின்றது. என்ன கேவலம் இது? நாம் அஞ்சவேண்டிய ஒருத்தன் அல்லாஹ்தான் என்பதை மறந்துவிட்டதனால்தான் இன்றுசில புல்லுருவிகளுக்கெல்லாம் அச்சம் கொள்ள வேண்டியிருக்கிறது.

நண்பா! உண்மையில் நாம் வேட்டைப்பொருளாக இருப்பதில் இருந்து வேட்டைக்காரர்களாக மாறுவதற்கு எந்தவொரு தருணத்திலும் தயாராக இருக்க வேண்டும். நமது கோபம் தணிந்து போவதை தடுப்பதாகவே காலணியவாதிகளின் அண்மையில் நடந்து முடிந்த ஒவ்வொரு செயலும் அமைந்திருந்தன. நினைவில் ஆழப்புதைந்த பழைய பகைமை உணர்வுகளை நீடிக்கச் செய்யும் பணியை மட்டுமே அவர்களின் செயல்கள் செய்துவருகின்றன. இதனால் வெளியே செல்லவும், சிறு நீர் கழிக்கவும், எச்சில் துப்பவும் பலமுறை யோசிக்க வேண்டியிருக்கிறது. நீ நீண்ட உறக்கத்தில் ஆழ்வதற்கும் எல்லாவற்றையும் மறப்பதற்கும் நாட்டம் கொள்ளக்கூடாது. நாம் சிற்றின்ப நுகர்வில் நிறைவுகாண வந்தவர்களல்ல. வட்டத்தினுள்ளே எல்லைகளில்லை. நமது வட்டம் இவ்வுலகம் போன்றது மறந்துவிடாதே!

நண்பா! நான் சுவரோடு ஒட்டி நிறுத்தப்பட்டிருக்கிறேன். எனது கழுத்தில் கத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் நான் எனது கனவுகளைத் தேடிச்செல்ல முடியாது. நமது அழுகும் பிணத்திலிருந்துதான் பயங்கரவாதிகளின் வாழ்வு துளிர்ப்பதாக அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நம்மத்தியில் அழித்தொழிப்பு பணியோடு இன்று சூறையாடும் பணியும் சேர்க்கப்பட்டுள்ளது. அன்றாட பணிகளாக இருந்து வந்த கொலைகளோடு இன்று திட்டமிட்ட கொலைகளும் சேர்க்கப்பட்டுவிட்டன. வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்ட படுகொலைகள் ஒவ்வொன்றுக்குப் பிறகும் நாம் நமது தன்னுணர்வை கட்டமைத்து எதிர்ப்புப் போராட்டத்தை உறுதிப்படுத்தாமல் விட்டால், நமது எதிர்கால சுவாசக்காற்றுக்கள் திசைமாற்றப்படலாம். ஏனெனில் பாசிசத்தின் நச்சுக் கதிர்கள் அவ்வளவு வலிமையானது.

நண்பா! மற்றவர்களிடம் நீ எந்தவித எதிர்பார்ப்பையும் வைத்துக் கொள்ளாதே. உனது முயற்சியும் உனது எழுச்சியும் தான் மற்றவர்களின் எதிர்பார்ப்பாக இருக்க வேண்டும். நமது மக்களை தாழ்வு மனப்பாண்மையிலிருந்தும்.



விரக்தியிலிருந்தும், செயலின்மையிலிருந்தும் விடுவித்து அவர்களுக்கு துணிச்சலை அளித்து அவர்களது சுய மரியாதையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்மிடம்தான் இருக்கின்றது.

இன்று விடுதலை என்பது அனைவருக்குமான விஷயமாக மாறிவருவதை நீ அறிவாய். விடுதலைக்கான போராட்டம்தான் சிதைந்து போன எமது எதிர்கால எழுச்சியை நிர்ணயிக்கப்போகிறது. விடுதலைப் போராட்டத்தில் நாம் வன்முறையை கையாளப்போவதில்லை. வன்முறையினால் சாதிக்க முடியாததை அஹிம்சை வழிமுறைகளினால் சாதிக்க முடியும் என்பது வரலாற்றுப் பாடங்களாகும். நமது நாட்டில் நிலவும் வன்முறை கலாசாரம் அப்பாவி உயிர்களையும், அவர்களது சொத்துச் செல்வங்களையும் சூறையாடி நாட்டை இன்று சர்வதேச மட்டத்தில் கைநீட்டி பிச்சை கேட்கும் நிலைக்கு நிறுத்தியிருக்கின்றது. அவர்கள் செய்த தவறை இனிமேல் நாமும் தொடரப்போவதில்லை. நமக்கென்று ஒரு மார்க்கம், நம்பிக்கை, கோட்பாடுகள் இருக்கின்றன. நாம் அழிக்க வந்தவர்களல்ல ஆக்க வந்தவர்கள்.

நண்பனே! பதின்மூன்று (13) ஆண்டுகளாக ஆறாமல் இருக்கும் காயங்கள் எப்போதையும் விட ஆழமாகவும், பெரிதாகவும் இப்போதுமாறிவிட்டது. நம் அனைவரையும் திட்டமிட்டு அடிமைத்தனத்தில் ஆழ்த்தும் எளிய வடிவம்தானே அவர்களது காலனியாதிக்கம். நமது போராட்டம், படுகுழியில் தள்ளப்படுவதையும் அடிமைத்தனத்தில் ஆழ்த்தப்படுவதையும் எதிர்க்கும் ஒன்றுதான். நம்மை ஆக்கிரமித்திருக்கும் பாசிசவாதிகளிடம் பேச முனைவதெல்லாம் இதுதான் "இரத்தம் ஒழுகும் எங்கள் சதைகளிலிருந்து உங்கள் நச்சுப்பற்களை வெளியிலெடுங்கள். எங்களை வாழ விடுங்கள்"

நண்பா! பாசிசவாதிகளின் அடக்குமுறை வாயில்களை அடைக்கும் பணி தொடராமல் விடப்படுமானால் நமது எதிர்காலத்தின் கதவு சாத்தப்படும் என்பதே நானும், நீயும், நமது சமூகமும் அவசியம் புரிந்து கொள்ள வேண்டும். மீண்டும் சந்திப்போம்.

# முஸ்லிம்களின் தலைமைத்துவ வெற்றிடத்தை ஈடுசெய்ய முயன்ற மர்ஹூம் அஷ்ரஃப்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முஸ் லிம் சமுகத்தை அடையாளப்படுத்த முனை ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசி யத் தலைவர் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியா தது. அவரது மறைவு முஸ்லிம் சமுகத் திற்கு மாத்திரமல்ல முழு நாட்டிற்குமே பேரிழப்பாகும்.

**டாக்டர் கே.எல். நக்பர்**
**அட்டாளைச்சேனை**

கடந்த தசாப்தத்தில் இலங்கையின் அரசி யலில் முக்கிய சக்தியாக விளங்கி, முஸ் லிம் சமுகத்தின் அரசியல் இருப்பை உல கெல்லாம் அறியச் செய்தவர். இலங்கை முஸ்லிம்களின் அரசியல் விடுதலையோடு சமுக, பொருளாதார, கல்வி ரீதியான சீர்திருத்தங்களை சாதித்தவர் இவர். ஆனால், இன்று அதன் அறுவடையைக் காணக்கூடிய சூழ்நிலையில் அவர் நம் மை விட்டுப் பிரிந்திருக்கின்றார். இத்த கையதொரு பணிக்காக நாம் ஒன்று சேர்வதே அவருக்கு நாம் செய்ய வேண் டிய மிகப்பெரிய கடமையாகும்.

எதிர்பாராத இழப்புகள் ஏற்படுகையில் திடீரெனத் திகைத்து நிற்கின்ற தருணங் கள் வரலாற்றிற்கு ஒன்றும் புதிதல்ல. ஆனால் இது நமக்கு நிகழ்ந்து விடும் போதுதான் அதிர்ச்சிக்கும் வேதனைக் கும் ஆளாகிறோம். அவரது மரணம் ஒரு தனிமனிதனின் மறைவு அல்ல. அது ஒரு யுகத்தின் முடிவு. அந்த இழப்பு முஸ்லிம்க ளின் தேசிய அரசியலுக்கு பாரிய இழப் பாகும். இதுதான் அவ்விழப்பின் கன தியை மேலும் ஆழமாக்குகிறது.

அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் முஸ்லிம் இனத்தின் தலைமைத்துவ வெற்றிடத்தை எல்லாவகையிலும் ஈடுசெய்ய முயன்ற ஒருவர். ஒட்டுமொத்தமாக முஸ்லிம் சமுக த்தையும் அரசியல் மயப்படுத்தும் பாரிய சவாலை மனம் தளராது முன்னெடுத்துச் சென்றவர். சிங்கள, தமிழ் பிரச்சினையா கவே பார்க்கப்பட்ட தேசிய இனப்பிரச்சி னையை சிங்கள, முஸ்லிம், தமிழ் (மூவின) பிரச்சினையாகப் பார்க்கவேண்டிய கட் டாயத்தை அவர் ஏற்ப டுத்தினார்.



தேசிய அரசியல் நீரோ ட்டத்தில் முஸ்லிம்களின் அடையாளத்தை ஊன் றிப் பதிக்க ஆற்றிய பணி மிகவும் மகத்தா னது. முஸ்லிம் பெரும்பான்மை அதிகார அலகொன்றை வென்றெடுப்பதன் ஊடாக மட்டுமே எமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பதை அவர் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார். இதற்காகவே இறுதி மூச்சுவரை அமைதியாக போராடி னார். அவரது அரசியல் நடவடிக்கைகள் குறித்து அவ்வப்போது நமக்கு விமர்சனங் கள் இருந்தாலும் அவர் ஆற்றிய பணி களை நாம் நிறைந்த நெஞ்சுடன் மனம் கொள்கிறோம்.

இந்த இக்கட்டான சூழலில் சகல அரசியல் கருத்து வேறுபாடுகளையும் மறந்து ஓரணி யில் ஒன்று சேர்வதன் மூலம் முஸ்லிம்களது தேசிய அரசியல் இயக்கத்தை பலப்படுத்தி எமது தனித்துவக் குரலை ஓங்கி ஒலிக் குமாறு முஸ்லிம்களது அரசியல் எதிர்கா லம் குறித்து அக்கறையுள்ள அனைவருக் கும் நாம் ஒன்று சேர்ந்து பகிரங்க அழைப் பை விடுப்பது அவருக்கு நாம் செய்யும் பணி. தன்வாழ் நாளில் தான் செய்த உன் னத பணியாக தென்கிழக்கு பல்கலைக்கழ கம், ஒலுவில் துறைமுகம் மகாபொல பயிற்சி நிலையம் போன்றவற்றை விஷேடமாக குறிப்பிட முடியும்.

தியாகம், அர்ப்பணிப்பு, பொறுமை போன்ற மனித நல உணர்வுகளின் உறைவிடம் மூவின மக்களும் போற்றுகின்ற மறைந்த மாமனிதர் மர்ஹூம் அஷ்ரஃப் என்றால் மிகையாகாது.

### சமூகம் உதவ வேண்டும்

முஸ்லிம்களின் தனி குரலாக நீ எதிரொலிப்பதோடு நாளிதழாகவும் பரிமாணம் பெற்று கொள்வதற்கு நமது சமூகம் தன்னாலான பங்களிப்புக்களை வழங்க முன் வரவேண்டும்.

ப.அரபாத், மருதூர் 01.

# கல்முனை அல் ஹாமியா அரபுக் கல்லூரியில் நடந்தது கருத்தரங்கா? அல்லது சுயநல அரங்கா?

மௌலவி எஸ்.எச்.எம். ஆதம்பாவா ஸர்கி யின் தலைமையில் 10.09.2003 இல் கல் முனை அல் ஹாமியா அரபுக் கல்லூரியில் நடந்த சுயநல அரங்கு. அவருக்கும் அவ ரின் சில சஹாக்களுக்கும் பெரும் இலா பத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது.

இந்தக் கூட்டத்தில் எம்.பி. ஹரீஸ் அவர்கள் பேசிய அனைத்து விடயங்களும் முத் தான விடயங்களாக அமைந்தன. மேலும் மௌலவி ஏ.ஸி.எம். புகாரி அவர்கள் பெரும் ஒரு வேண்டுகோளை அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கோரினார். அதுதான் அனைத்து பிளவுபட்டிருக்கும் முஸ்லிம் அமைச்சர்களையும் எம்.பிக்களையும் எவ் வளவு கஷ்டப்பட்டாவது ஒன்று சேர்க்க வேண்டும் என்பதாக.

கடைசியில் சில உலமாக்கள் பல கேள்வி களை முன்வைத்தனர். ஹக்கீம் அவை ஒன்றுக்கும் திருப்திகரமான பதிலளிக்க வில்லை. அதில் ஒரு கேள்விதான் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃபுடைய மரணம் சம்பந்தமாக என்ன கூறுகிறீர் கள்? இதற்கு அவர் எந்த விடையையும் கூறவில்லை. மேலும் மௌலவி ஏ.ஸி.எம். புகாரியின் வேண்டுகோளுக்கு எந்த விடையையும் அளிக்கவில்லை. கடை சியாக கூட்டம் ஆதம்பாவா (ஸர்கி)யின் சஹாக்களுக்கு திருப்திகரமாகவும் ஏ னையோருக்கு திருப்தியற்ற முறையிலும் முடிவடைந்தது. கூட்டம் முடிவடைந்து திரும்பும்போது ஒருவர்மற்றவரைப் பார்த்து ரவூப் ஹக்கீம் என்ன பேசினார்? என வினவ, கேட்ட கேள்விகளுக்கு பதில் தராமல் மழுப்பி விட்டாரே! என்ற முணு முணுப்புடன் நடந்தார்.

அஸர் தொழுகையை அடுத்து அம் பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபை தெரிவு நடந்தது. அதில் ஆதம்பாவா (ஸர்கி) அவர்கள் தனது கைவரிசை யைக் காட்டினார். அதிகமான தனது சஹாக்களையும் அதற்குள் நுழைக்க அரு ம்பாடுபட்டார். கடைசியாக அது குழப்பத் திலே முடிந்தது. முகத்தில் தாடியைக்கூட வைக்க விரும்பாத உல(க)மாக்கள் அம் பாறை மாவட்ட ஜம் இய்யத்துல் உல மாவின் அங்கத்தவர்களாக ஆக்கப்பட் டதை என்னவென்பது.

**மௌலவி ஸைபுத்தீன் அஹ்மத்**
**கல்முனை**

இப்படிப்பட்ட ஒரு சுய நல அரங்கு தே வைதானா? அந்தக் கூட்டத்தில் முக்கிய விடயமாக ஒரு மௌலவி பாதுகாப்பு சம்ப ந்தமாக கேள்வி கேட்டு கடைசியாக நம் இளைஞர்கள் ஆயுதம் தூக்கும் இளைஞர்களாக மாறுவா, அவர்கள் முதல் பதம் பார்ப்பது முஸ்லிம் அமைச்சர்களைத் தான் என்று கூறியதும் அமைச்சர் ரவூப் ஹகீமுக்கு சினத்தை உண்டாக்கியது.

அவர் பலதடவை தனது பேச்சில் என்னை மிரட்டுகிறீர்களா? நான் ஒரு கைதியா? என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அல்லாஹ் நம்மனைவரையும் இப்படிப்பட் டவர்களை விட்டும் பாதுகாப்பானாக!!

# பொத்துவிலில் ஏழைகளின் 15 வண்டிகள் எரிப்பு

நாளாந்தம் உழைத்து வயிறு கழுவும் 15 ஏழை முஸ்லிம்கள் விறகு எடுப்பதற்காக தாறாம்பளை-துக் கொள்ளை எனும் காட்டுக்கு வண்டில் மாட்டுடன் சென்றபோது, காட்டினுள் வைத்து 15 வண்டில்களையும் வழிமறித்து புலிப்படையினர் எதுவித ஈவிரக்கமுமின்றி 15 வண்டில் களையும் காட்டினுள் வைத்து எரித்துள்ளனர். இதன் காரணமாக இப் 15 வண்டி தொழிலில், தங்கி வாழுகின்ற ஏறத்தாழ 150 பேர் தவியாய்த் தவிக்கின்றனர். இந்த ஏழை வண்டில் சொந்தக்காரர்கள் புலிப்படையினருக்குச் செய்த தீங்குதான் என்ன? எதுவுமே இல்லை. ஆனால் புலிப்படையினருக்கு ஏற்கனவே கப்பம் செலுத்தி றிசீட் பெற்றிரு க்கவில்லை. கப்பம் கட்டி றிசீட் பெற்றிருந்தால் இந்த ஏழைகளுக்கு இந்த துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்காது. கோமாரியிலுள்ள புலிகள் இயக்க காரியாலயத்தில் பணம் கட்டி றிசீட் பெறும் நடைமுறை இருந்து வருகிறது. இந்த ஏழை முஸ்லிம்களின் வண்டிகள் காட்டில் எரிக்கப்பட்டதற்காக பாதுகாப்புப்படையினர், பொலிஸ் படையினர் எடுத்த நடவடிக்கை என்ன? கிழக்கில் போலி அரசாங்கம்தான் நடைமுறை யிலுள்ளதா என பொது மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

**அபூ அப்துல்லா பொத்துவில்.**



மருதமுனையின் வடக்குப் பிரதேசமான பெரிய நீலாவணை முஸ்லிம் பிரிவின் வர்த்தகப் பகுதியின் மையத்தில் பள்ளிவாசல் அமைக்கும் திட்டத்திற்க மருதமுனை வர்த்தகர்களான ஜே.எம். கனீபா, ஏ.சைபுல்லா, பி.எம். நஸ்ருத்தீன், எம்.எச். றிஸ்வி இஸ்மா, ஏ.நௌசாத் ஆகியோரால் வழங்கப்பட்ட காணியில் அண்மையில் (2003.08.29) அடிக்கல் நாட்டு வைபவம் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட ஜமியத்துல் உலமா சபைச் செயலாளர் அல்-ஹாஜ். அஷ்-ஷேய்க் ஏ.அபூ உபைதா செயலாளர் அல்-ஹாஜ். அஷ் - ஷேய்க் ஏ.அபூ உபைதா அடிக்கல் நடுவதையும், அருகில் காணி வழங்கியோர் நிற்பதையும் காணலாம்.
(படமும் தகவலும்: மருதமுனை மாஹிர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணம் தனியாக இருக்க வேண்டும்!

கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் என்ற கருத்து அண்மைக் காலமாக, சிலரால் பிரயோகிக்கப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இக்கருத்தானது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு வருடத்திற்குள் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் நிரந்தரமாக சேர்க்கப்படும் அல்லது பிரிக்கப்படும் என்ற நிபந்தனை நிறைவேற்றப்படாமல் விடப்பட்ட நாட்களிலிருந்தே வலியுறுத்தப்பட்டிருக்க வேண்டும். அல்லது வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தமிழ்ப்பாசிசப் புலிகளால் அப்பாவி முஸ்லிம்கள் குதறப்பட்ட காலங்களிலிருந்தே வலியுறுத்தப்பட்டிருக்க வேண்டும். தற்போது காலங்கடந்தாவது வலியுறுத்தப்படுவது வரவேற்கத்தக்கதே.

இக்கருத்தினை வலியுறுத்துவதற்கு நிலையான காரணம் உள்ளன. மட்டக்களப்பு மாவட்ட மொத்த காணிப்பரப்பு 2464 சதுரகிலோ மீற்றர்களாகும். முஸ்லிம்களின் விகிதாசாரம் 26 சதவீதமாகும். இதன்படி முஸ்லிம்களுக்கு உரித்துடைய விகிதாசாரத்தின்படி கிடைக்க வேண்டிய காணிப் பரப்பளவு 624 சதுர கிலோ மீற்றராகும். ஆனால் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள் 31 சதுரகிலோ மீற்றருக்குள் சுருக்கப்பட்டு நசுக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் தற்போது இக்குறுகிய பிரதேசங்கள் கூட ஆதாரமற்ற முறையில் உரிமை கொண்டாடப்படுகின்றன. அநேக வயற்காணிகள் பல்வேறு நெருக்குதல்கள் காரணமாக விற்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் முஸ்லிம்களின் விகிதாசாரத்திற்கேற்ப அவர்களின் காணிப் பிரச்சினை எவ்வாறு கையாளப்படும்?

இலங்கைக்கு போர்த்துக்கேயர் வருவதற்கு முற்பட்ட வரலாற்றுக்காலத்திலேயே முஸ்லிம்கள், கிழக்கில் குடியேறிவிட்டனர். என்பதற்கு எத்தனையோ வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இதில் கண்டி மன்னன் செனரதனால் குடியேற்றப்பட்ட முஸ்லிம்கள் வேறு; இவ்வாறு பாரம்பரிய வாழ்விடங்களைக் கொண்டு குடியிருக்கும் எமது முஸ்லிம்கள் இம்மண்ணுக்குரியவர்களே! இங்கு ஏனைய இனத்தவர்களுக்கு என்னென்ன உரிமைகள் உண்டோ அத்தனை உரிமைகளும் முஸ்லிம்களுக்கும் உண்டு என்பதை எவராலும் மறுக்க முடியாது.

கிழக்கின் அநேக முஸ்லிம் பிரதேசங்கள் தங்களைப் பெருப்பித்துக் கொள்ள முடியாமல் தமிழ்ப் பிரதேசங்களால் அரணிடப்பட்டுள்ளன. உதாரணமாக இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் காத்தான்குடி தோன்றியதென்றால் அது இன்னும் அந்தப் பரப்புக்குள்ளேயே சன அடர்த்தி கொண்டதாக சுருக்கப்பட்டுக் காணப்படுகின்றது. அது இந்த 2003 ஆம் ஆண்டு எவ்வளவோ விஸ்தரிக்கப்பட்டிருக்க வேண்டும். அதுதான் முடியவில்லை. அவ்வளவிற்கு அதன் குடியேறக் கூடிய இரண்டு புறங்களிலும் தமிழ் குடியிருப்புகள் அரணமைத்தாற் போல் உள்ளன. இவ்வாறே ஏறாவூர் வாழைச்சேனை, போன்ற மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்கள் அனைத்தும். இவ்வாறான நிலையில் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் எமது காணிப்பிரச்சினைக்கெல்லாம் தீர்வு என்ன?

கரையோர மாவட்டம் கேட்டு ஒரு அரசாங்கத்தைக் கவிழ்த்து பல உயிரிழப்புக்களை ஏற்படுத்தி இன்னொரு அரசாங்கத்தைக் கொண்டு வந்தோம். தற்போதைய எம் தலைமையால் அக்கரையோர மாவட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்ததா?

கிழக்குப் பிரிக்கப்பட வேண்டும் என்ற வாதத்தினுள், நாம் கிட்டத்தட்ட சமபலத்துடன் ஏனைய இனங்களுடன் இணைந்து சமாதானமாகவும், ஐக்கியமாகவும் வாழவிரும்பும் ஒரு இனம் என்பதை இனங்காட்ட முடியும். நாம் எங்களுக்கென்று எதையும் பிரித்து தனியாகக் கேட்கவில்லை. இப்பிரதேசத்தில் வாழும் ஏனைய இனங்களுடன் இணைந்து வாழவே விரும்புகின்றோம் என்பதை வலியுறுத்த முடியும். கிழக்கின் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் சனத்தொகை விகிதாசாரத்தில் நாமே அதிகம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே சிறுபான்மையாக இருக்கின்றோம். அப்படி இருக்கும் போது எம்மை ஏன் வடக்கிற்கு தாரைவார்த்துக் கொடுக்க வேண்டும்.

அம்பாறையில் ஒரு கரையோர மாவட்டம் அங்கு வாழும் எல்லா இனமக்களுக்குமாக அமைய வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் குரல் கொடுக்கும் போது அம்மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் தமிழர் மகா சங்கம், ஏனைய அனைத்துச் சங்கங்கள் இயக்கங்கள் ஏனைய பிரதேச தமிழ் தலைமைகள் எல்லாம் முஸ்லிம்கள் ஏதோ தனிநாடுகோருவதைப் போல் அதனை எதிர்க்கின்றனர். முஸ்லிம் அலகு சம்பந்தமாக முன்னைய தமிழ்த் தலைமைகள் அளித்திருந்த வாக்குறுதிகளை அதெல்லாம் அப்போதைய சந்தர்ப்பத்தில் கூறப்பட்டவை. அப்படி எதுவும் தற்போது தரமுடியாது என்கின்றனர். ஆனால், முஸ்லிம் வாக்குகளால் முஸ்லிம்களின் உரிமைகளை நிலைநாட்டச் சென்ற எமது பிரதிநிதிகள் தமது கடமைகளை மறந்து அவர்களுக்கு வக்காலத்து வாங்குகின்றனர்.

வடக்குடன் கிழக்கு இணைக்கப்பட்டு புலிகளிடம் நிர்வாகம் கையளிக்கப்படும் போது கடந்தகால சிங்கள அரசாங்கங்கள் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியது போலவும் சிங்களப் பிரதேசங்களை கிழக்குடன் இணைத்தது போலவும் வடக்கிலுள்ள தமிழர்களை கிழக்கில் குடியேற்றியும் வடக்கின் பிரதேசங்களை கிழக்குடன் இணைத்தும் கிழக்கின் சனத்தொகை விகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினால், தற்போதுள்ள முஸ்லிம் பிரதிநிதிகளினால் என்ன செய்ய முடியும்? ஏன் இப்போதே முஸ்லிம்கள் உரிமை கொண்டாடலாம் அல்லது எதிர்காலத்தில் குடியேறலாம் என்று எதிர்பார்க்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் புலிகள் தமிழர்களைக் குடியேற்றி வருவது பற்றி எமது பிரதிநிதிகள் என்ன கூறுகின்றனர்?

தமிழர் போராட்டம் தொடங்கியது முதல் இன்று வரை முஸ்லிம்கள் தமிழ் ஆயுதக் குழுக்களால் சந்தித்த இழப்புகளே அதிகம். இவ்வாறு பாரியளவில் முஸ்லிம்கள் உயிர், உடமைகளை இழந்த போதும், தமிழ்ப் பேரினவாதிகள் கேட்பதெல்லாம் என்ன? என்ன தியாகம் செய்தார்கள் முஸ்லிம்கள். தமிழர்களுக்குரிய சகல அபிவிருத்திப் பணிகளையும் முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதிகள் காட்டிக் கொடுத்தார்கள். சுருட்டிக் கொண்டார்கள் என்று அவர்கள் எழுதும் போது எமது பிரதிநிதிகள் மௌனித்திருக்கிறார்களே இது ஏன்? முஸ்லிம் பிரதேசங்களில் எங்காவது ஒரு மண்டபத்தில் வீரவசனம் பேசும் எமது பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் எமக்கு நடக்கும் அநீதிகளைப் பற்றி பேசுவதில் பின்நிற்கின்றனர். ஜே.வி.பி கூட தமது கொள்கைகளை பத்திரிகையாளர் மாநாடுகள் மூலம் அடிக்கடி வெளிப்படுத்துகின்றது. ஆனால் எமக்கு தொடர்ந்து நடக்கும் அழிவுகள், இழப்புகள் மற்றும் எமது கோரிக்கைகள் பற்றி பத்திரிகையாளர் மாநாடுகள் நடாத்தப்படுகின்றதா? வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளிக்கப்படுகின்றதா? என்றால் இல்லை. எத்தனையோ சந்தர்ப்பம் இருந்தும் எமது பிரச்சினைகள் சர்வதேசமயப்படுத்தப்படவில்லை. இவை எல்லாவற்றையும் செய்ய வேண்டியவர்கள் மு.கா. வினர்தான் என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது. தமது சமூக நலன் என்றுவரும் போது மேல் கொத்மலைத் திட்டமும் அமைச்சர் ஆறுமுகமும் எமது தலைவர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாகும்.

*முஸ்லிம்களின் இருப்பை உறுதிப்படுத்தும் எவ்விடயத்திலும் போட்டி அரசியலுக்கும் பிரதேசவாதங்களுக்கும் இடங்கொடாது செயற்பட*

**எம்.எல். மஹ்மூத்,**
**வாழைச்சேனை**


*வேண்டியது முஸ்லிம் அரசியல்வாதிகளின் கடமையாகும்.*

கிழக்கைப் பிரித்து அண்மையில் கிழக்குடன் இணைக்கப்பட்ட சிங்களப் பிரதேசங்களையும் பிரித்து கிழக்கின் இனவிகிதாசாரத்தின் படி இம்மாகாணத்தின் சகல விடயங்களையும் உறுதிப்படுத்தி ஏற்படுத்தப்படும் மாகாண நிர்வாகம் கிழக்கு மாகாணத்தில் நிரந்தர சமாதானத்தையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்தும். இது சகல இனங்களும் சமபலத்துடன் சேர்ந்து வாழும் ஐக்கிய மாகாணமாக இருக்கும்.

இதனை விடுத்து இனரீதியில் தென்கிழக்கலகு பிரிப்பதோ அல்லது தமிழ்ப் பேரினவாத சிந்தனை உள்ளவர்களிடம் கிழக்கில் வாழும் மக்களின் ஒப்புதல் பெறாமல் வடக்கு கிழக்கை இணைத்து ஒப்படைப்பதோ இங்கு எதிர்காலத்தில் சமாதான ஐக்கிய வாழ்வைச் சிதைத்து விடும். கிழக்கைப் பிரிக்கக் கோருவது கிழக்கு மக்களுக்கே என்பதுடன், பிரிவினை மறந்து இனவாதம் களைந்து ஏனைய மக்களுடன் ஐக்கியமாக வாழ விரும்பும் இனமேலாதிக்கத்தை விரும்பாத மக்களின் கோரிக்கையாகவே இதுபார்க்கப்படல் வேண்டும்.

---

## இது பள்ளிவாசல் அல்ல!



உண்மையில் இது பள்ளிவாசல் அல்ல! 151 ஆண்டுகளை நிறைவு செய்து விட்டு கம்பீரமாக காட்சியளிக்கும் ஓர் அரசு அருங்காட்சியகம் (மியூசியம்). எங்கே? எந்த இடத்தில்? சென்னையில் எழும்பூரில்! நிச்சயமாக ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு முஸ்லிமின் கைபடாமல் இப்படியொரு வடிவமைப்பு ஏற்பட்டே இருக்க முடியாது! மிகச் சமீபத்தில் ரூபாய் 4 கோடியில் புத்துயிர் பெற்று, பாரத ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது!

## ஒரு தாயும் தனயனும் "முரசு" கொட்டுகிறார்கள்!



உண்மை! ஒலிக்கிறது. தமிழகத்தில் மாதம் ஒரு தடவை! வெறும் முரசும் அல்ல. முஸ்லிம் "முரசு!" பெயரைக் கேட்டது போல் இருக்குமே!

அதுவும் உண்மை! 56 ஆண்டுகளுக்கு முன் ஒலிக்க ஆரம்பித்த முஸ்லிம் சஞ்சிகை, இன்றைக்கும் இப்பொழுதும் துணிவோடு கொட்டிக் கொண்டிருப்பவர்கள் ஓர் அன்னையாரும், அவர்தம் அருமந்தப் புதல்வரும்.

தமிழ் பேசுவோரின் மூத்த சஞ்சிகையாகத் திகழும் முஸ்லிம் "முரசு"வின் ஆரம்பகால நிறுவனர் எஸ்ஏ. ரஹீம். பல்லாண்டு பல்லாண்டு பத்திரிகை ஆசிரியராக விளங்கியவர். சிந்து நதிக்கரையினிலே 'ஹஸன்', சையது முகம்மது அவர்கள். கௌரவ ஆசிரியராக ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார், திருநாரியைப் பூர்வீகமாகக் கொண்ட இலங்கை திடீட்டர் ஹாஜி வ.மி. சம்சுத்தீன் ஸாஹிப்.

ஒரு கால கட்டத்தில், "பிறை" சஞ்சிகையில் புடம் போடப்பட்ட எழுத்துத் தங்கமான ஜலால் முஸ்லிம் முரசு வின் முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டு, அந்தத் திருவல்லிக் கேணி, யூசுப் லெப்பை லேனில் தன்னந்தனியனாகத் துணைவியார் மும்தாஜுடனும், சிறு மதலைச் தாஜுதீனுடனும் முரசு ஒலிக்க முயன்ற போது பக்கம் நின்று பரவசப்பட்ட எழுத்தாளர்களுள் நானும் ஒருவன். அன்று அவர் எதிர்கொண்ட பிரச்சினைகள், தடைக் கற்கள், ஆக்கிரமிப்புகள் அவர் மறைந்த பின்னும் மறையாமல் மனைவியையும், மகனையும் தொற்றிக் கொண்டன.

முரசுவின் ஒலி இன்றோ நாளையோ என என் போன்றவர்கள் ஆதங்கப்பட்டுக் கொண்டனர். அவர்கள் காத்த பொறுமை, அமைதி யாருக்கும் கைவசப் பெறாத ஒன்றென்பேன்.

முரசுவின் ஒலி இன்றோ நாளையோ ஓயலாம் என எதிர்பார்த்த தீயசக்திகளுக்குத் தீச்சுவாலைகளாக அந்தத் தாயும் தனயனும் வாழ்ந்து காட்டி, வளமான ஒரு முஸ்லிம் சஞ்சிகைக்கு வாழ்வளித்துக் கொண்டு வருகிறார்கள். கடந்த ஜுலை மாதத்திலிருந்து சில்லறைத் தனமான ஒரு பக்கச் சார்பான அரசியல் பக்கங்களுக்கு இடங்கொடுக்காமல் முற்றிலும் புதிய கோணத்தில் முஸ்லிம் முரசு வெளிவரத் தொடங்கியிருப்பது மிகவும் மகிழ்வு தரும் தகவல்.

56 ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ள சஞ்சிகைக்கு மட்டுமல்ல, துணிவோடு துணைவர் ஜலால் பெயர் சொல்ல இதனை நடத்தும் திருமதி மும்தாஜ் அவர்களுக் கும், செல்வன் தாஜுதீன் ஜலால் அவர்களுக் கும் இலங்கையர் பாராட்டுக்கள் உரித்தாக வேண்டும். அவர்களால் (கன்னியா) குமரி மாவட்டத்துக் குக்கிராமமான ஆளுர் வரலாற்றில் பெருமை பெற்று விட்டது.

வாழ்க, வாழ்க! வெல்க, வெல்க!

## ஒரு கடிதம்

தாய்ப்பால் இன்றி குழந்தை வளர்ச்சி இல்லை. தாய்ப்பால் போன்ற தாய்மொழிப் பயிற்சியின்றி வாழ்வில் உயிரோட்டம் இல்லை. வசதியுள்ளவர்கள் ஆங்கிலம் கற்கிறார்கள். வசதிக்கான கல்வி ஆங்கிலம், வாழ்வுக்கான கல்வி தாய்மொழி.

கைமண் அளவாயினும் கற்க வேண்டிய தாய்மொழியைப் புறக்கணித்து ஆங்கிலம் அரைகுறையாகக் கற்று உலகளவு கற்றுவிட்டதாக பெருமை அடித்துக் கொள்வது பேதமை.

தாய்மொழிக்கே வறுமை வந்துவிட்ட பிறகு, நமது வாழ்க்கையில் வறுமை வருவதென்பது தவிர்க்க முடியாது. தாய்மொழியை வறுமையில் தள்ளிவிட்டு, ஆங்கில மோக லாகிரியை சுவைத்தவர்களாக மயங்கிக் கிடக்கிறோம். அம்மயக்கம் தெளிய, தாய்மொழிக் கல்வியே மருந்து.

சீனர்களும் ஜப்பானியர்களும் ஜேர்மன் நாட்டவரும் தங்கள் வாழ்க்கையில் அனைத்து நிலைகளிலும் மேம்பட்டுள்ளதற்குக் காரணமே, அவர்கள் கொண்டுள்ள உண்மையான மொழிப் பற்றும் உறுதியான தாய்மொழிக் கல்வியும்தான்.

–வி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,
வரட்டணப்பள்ளி.

(தமிழக தினமணி நாளேட்டிற்கு அனுப்பியது)

## 'கா.:பிர்' - சரியான பொருள் என்ன?

காபிர் என்ற வார்த்தைக்கு "ஒரு விஷயத்தை மறுக்கிறவர்" என்றுதான் பொருள்! நான் உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். நீங்கள் அதனை நம்பவில்லை என்றால், அந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் நீங்கள் எனக்குக் கா.:.பிர். அது திட்டும் வார்த்தை அல்ல. அது ஒரு விஷயத்தை விளக்கும் வார்த்தை. நீங்கள் இந்துக்களின் மறுபிறப்புக் கொள்கையை நம்பினீர்கள் என்றால், நான் அதனை மறுத்தேன் என்றால், அந்தக் கொள்கையைப் பொறுத்தமட்டில் நான் கா.:.பிர்.

–மவ்லானா
வஹீதுத்தீன்கான்
ஒரு நேர் காணலில்.

## மானா மக்கீன் தருவது



## ஆமை புகுந்தால் சிக்கல்!

"ஆமை புகுந்த வீடு உருப்படாது" என்று சொல்லுவார்கள். சில நேரங்களில் "ஆமை" புகுவதால் பல சிக்கல்கள் உருவாகும். என்ன ஆமைகள் என்று பார்க்கலாமா?

கல்லாமை
அறியாமை
படியாமை
கீழ்ப்படியாமை
கேளாமை
சொல்லாமை
புரியாமை
தெரியாமை
கொடாமை
பெறாமை
பொறாமை
இயலாமை
முயலாமை
செயல்படாமை
முடியாமை

இந்த "ஆமைகள்" நம்மிடமிருந்தாலும் சரி, நம்மைச் சுற்றியிருப்பவர்களிடமும், நம்மோடு தொடர்பு கொண்டவர்களிடமிருந்தாலும் சரி, சிக்கல்கள் நிச்சயம்!

நன்றி:
சிந்தனைச் சரம் [illegible] வரும் முஸ்லி[illegible]

## அடுக்கு பஸ்!



இரட்டைத் தட்டு பஸ் இலங்கையில் ஓடிய காலம் உண்டு. இங்கிலாத்தில் (லண்டன்) இன்னும் ஓட்டம்!

ஜப்பான், கொரியா போன்ற கிழக்காசிய நாடுகளில் அடுக்கு மாடி பஸ்களெல்லாம் சர்வசாதாரணம்!

ஏறி இறங்குவதற்குள் பேசுக வேண்டிய இடம் போனாலும் போகும். மேல் தட்டுக்குப் போக வி[illegible]

## சொன்னத்த கேட்கிறார்கள்!



கடந்த 10.09.2003 அன்று கல்முனையில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட உலமாசபை வருடாந்த மாநாட்டின் போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் மதீனா இணைப்பாளரும் பிஸ்மில்லாஹ் நலன்புரி சங்கத்தின் தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் மௌலவி அவர்களினால் மு.கா. தலைவர் முன்பு முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன. இவற்றுக்கு மு.கா. தலைவரால் பதிலளிக்க முடியாமல் போனது என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் ஒட்டு மொத்தமாய் விற்கப்பட்டு விட்டதொரு சூழ்நிலையில் இங்கு நாம் கூடியுள்ளோம். முஸ்லிம்களின் எதிர்காலம் என்பது இருண்டதாக தெரிகின்ற நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி கலந்துரையாடுவது வெட்கப்பட வேண்டிய ஒன்றுதான். இனப்பிரச்சினையில் முஸ்லிம்களுக்கு என்ன தீர்வு என்று நாம் இப்போது ஆராய்வது என்பது தலைக்கு மேலால் வெள்ளம் போய்விட்ட நிலையில் முக்காடு பற்றி கவலைப்படுவது போன்றுதான் உள்ளது. நமது அரசியல்வாதிகளால் முற்றாக ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பது நன்றாகவே தெரிகிறது. இருந்த போதும் நமது தலைமையின் முன்பாக சிலகேள்விகளை முன் வைக்கிறோம்.

01. பேச்சு வார்த்தையில் தனித்தரப்பாக பங்கு பற்றும் சந்தர்ப்பம் முஸ்லிம்களுக்குக் கிடைக்கும் என்று இன்னமும் நம்புகிறீர்களா?

02. முஸ்லிம் தேசத்தின் நிர்வாகம் முஸ்லிம்களிடம் ஒப்படைக்கப்படாவிட்டால் அடுத்த திட்டம் என்று ஏதாவது உங்களிடம் உள்ளதா?

03. எதிர்காலத்தில் அடிமைகளாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும், புலிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டால் அரசு யாருக்கு ஆதரவளிக்கும் என்பதற்கு உங்களிடம் பதில் உள்ளதா?


**Muslim Kural News Paper**
முஸ்லிம் குரல் பத்திரிகை
181/1, Ananda Mawatha, Colombo -10
**Advertisement Rates**
விளம்பரக் கட்டண விபரம்

| Page Size பக்க அளவு | Colour or Black & White கலர் அல்லது கறுப்பு வெள்ளை | Rate கட்டணம் |
|---|---|---|
| Full Page முழுப் பக்கம் | 4 Colour (4 கலர்) | Rs. 60,000/- |
| | 2 Colour (2 கலர்) | Rs. 40,000/- |
| | Black & White (கறுப்பு வெள்ளை) | Rs. 30,000/- |
| Half Page அரைப் பக்கம் | 4 Colour | Rs. 30,000/- |
| | 2 Colour | Rs. 20,000/- |
| | Black & White | Rs. 15,000/- |
| Quarter Page கால் பக்கம் | 4 Colour | Rs. 15,000/- |
| | 2 Colour | Rs. 10,000/- |
| | Black & White | Rs. 7,500/- |
| Half - Quarter Page அரைக்கால் பக்கம் | 4 Colour | Rs. 7,500/- |
| | 2 Colour | Rs. 5,000/- |
| | Black & White | Rs. 4,000/- |
| 1 Column x cm 1 கலம் x செ.மீ. 1 கலம் = 3 செ.மீ. 1 Column = 3 cm | 4 Colour | Rs. 150/- |
| | 2 Colour | Rs. 100/- |
| | Black & White | Rs. 75/- |

Front Page - Extra 30%
முன் பக்கம் - மேலதிகம் 30%
Premium Page - Extra 20%
விருப்பத்திற்குரிய பக்கம் - மேலதிகம் 20%

சிறு விளம்பரங்கள் - **Classified Advertisements**
முதல் 20 சொற்களுக்கு Rs. 200/-
First 20 words Rs. 200/-
மேலதிக சொல் ஒன்றுக்கு Rs. 10/-
Per Additional word Rs. 10/-

விளம்பர முகாமையாளர், முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்
Advertisement Manager, Muslim Kural Publication


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் சமாதான முன்னெடுப்பு, பின்னடைவுக்கு முஸ்லிம் அரசியல் தலைமைகளின் தளர்வும் ஒரு காரணம்

நம் நாட்டை சில ஆண்டு காலமாக சீரழி த்து வருவது இனப்பிரச்சினையே! இத னால் இன முரண்பாடுகள் களைந்து, இனங்களிடையே புரிந்துணர்வு, ஒற்றுமை யை ஏற்படுத்துவதன் மூலமே சமாதானத் தை கட்டிக் காக்க முடியும்.

தற்கால சமாதான பேச்சுவார்த்தைச் சூழ லில் எங்கு முஸ்லிம்களுக்கு இடம் கிடை க்காமல் போய் விடுமோ? என்ற அவல நிலை இப்போது காணப்படுகின்றது. இதனால் "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" எனும் சந்தர்ப்பத்திற்கமைய முஸ்லிம்கள் தம் பங்கை பெற்றுக் கொள் வதில் உறுதியாக இருக்க வேண்டும்.

அவ்வாறு பெறாவிட்டால் எதிர்கால சந்த திகளின் சாபத்திற்குள்ளாக வேண்டி யிருக்கும். இதனால் நிகழ்கால அரசியல் வாதிகளும் புத்திஜீவிகளும் தம் பங்கை சரிவர நிறை வேற்ற வேண்டும்.

இதில் முதற் பங்கை முஸ்லிம் காங்கிரஸ் வகிக்கின்றது. ஏனெனில் எல்லோராலும் முஸ்லிம்கள் சார்பாக குரல் கொடுக்கும் ஒரு கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் விளங்கு வதே ஆகும். இலங்கையில் கடந்த 20 வருட காலமாக ஆயுத பாணியில் தமிழர்களின் உரிமைப்போராட்டம், உரிமைகளைப் பெற்றுக் கொள்ள பிரிந்து செயல்பட்ட போது, மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ர.்.ப் முஸ்லிம் மக்களை ஒரு கட்சியின் கீழ் ஒன்று சேர்த்து ஜனநாயக நீரோட்டத்தில் உரி மைகளை வென்றெடுக்க வேண்டும் என்று கட்டி எழுப்பப்பட்ட கட்சியே முஸ் லிம் காங்கிரஸ் ஆகும்.

முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபக தலைவரின் அரசியல் நகர்வுடன் தோற்றம் பெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணி. ஆட்சி யின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம் சமூகம். குறிப்பாக நேரடிப் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பெற்றுக் கொண்ட நலன்களும். அபிவி ருத்திப் பணிகளும் ஐ. தே. முன்னணி ஆட்சிக்காலத்தை விட அதிகம். அந்த ஆட்சிக்காலத்திலே கிடைக்கப் பெற்றவை கள்தான் தென்கிழக்கு பல்கலைக்கழக மும் ஒலுவில் துறைமுகமும், மற்றும் அதிக ளவான முஸ்லிம் இளைஞர்களுக்கான துறைமுக அதிகார சபை தொழில் வாய்ப் புக்களும், மீள்குடியமர்வு இழப்பீட்டிற்கான நிவாரண உதவித் தொகைகள் என்பவை களும். ஆனால் தற்போதைய ஐ.தே. முன் னணியில் முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்படு கின்றனர்.

ஐ.தே. முன்னணியுடன் இணைந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய அவசிய முன்னெடுப்பு அஷ்ர.்.ப் அவர் களுக்கு ஏற்பட்டிருந்தால் அது மேலோட டமானதொரு இணைவாக மாத்திரம் இருந்திருக்க மாட்டாது. இன்றைய அரசு - விடுதலைப்புலிகள் உடன்படிக்கைத் தயாரிப்பு வேலைகளுடன். முஸ்லிம்கள் சார்பாகக் குரல் கொடுக்கவல்ல தலை மைப் பொறுப்பில் நிச்சயம் அவர் கைகளே ஓங்கியிருக்கும்.

பொ. ஐ. முன்னணி ஆட்சிக்காலத்தில் தனித்துவக் கட்சிக்கு எதிரான வாதங் கள் மற்றையவர்களினாலேயே ஏற்கப்பட் டது. அதிகளவில் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களினால் தோற்றுவிக்கப்படாது இருந்தாலும் பொது ஜன ஐக்கிய முன்ன ணியில் முக்கிய பொறுப்பிலிருந்த கௌரவ ஏ. எச். எம். பௌசி அவர்களின் எதிர்ப்புக் கள் ஜனாதிபதி அவர்களினால் கட்டுப் படுத்தப்பட்டதொரு நிலைமையில் இருந்த துடன் ஜனாதிபதி அவர்களின் உறுதி யான ஆதரவுப்பலமும் அஷ்ர.்.ப் அவர் களின் அவசியத் தேவை கருதி அவர் பக்கமே மிகைத்திருந்தது.

இன்றைய முஸ்லிம் காங்கிரஸின் உட் கட்சிப்பூசல்கள் மற்றும் பிளவுகள் வேத னை தரக்கூடியதாகவே காணப்படு கின்றது. முஸ்லிம் காங்கிரசின் எழுச்சிப் பாதையில் ஏற்படும் ஒவ்வொரு தடைக் கற்களையும் அவதானிக்கும் போது மாமே தை அஷ்ர.்.ப் என்ற சக்தியின் வெற்றிடம் நிரப்பப்பட வேண்டி இருப்பது அவசியமும் அவசரமானதும் ஒன்றாகும். "தானாக வந்தது பாதி தன்னால் வந்தது மீதி" என்ற சறுக்கு நிலையில் இன்றைய அரசியற் களத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது. அது மாத்திரமன்றி அது மூன்று கோணங்களில் பிரிந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனால் மூன்றா வது அரசியல் சக்தியாக முஸ்லிம்களுக் கென்று குரல் கொடுக்கும் கட்சியாக எல்லோராலும் கருதப்படும் முஸ்லிம் காங் கிரஸ் எங்கு தனது முஸ்லிம்களின் அபி



லாஷைகளையும் உரிமைகளையும் வென் றெடுப்பதில் தோற்றிவிடுமோ? என்ற அபாய நிலை மக்கள் மத்தியில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பொது. ஐ. முன்னணி ஆட்சிக்காலத்தில் மறைந்த தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் பொ.ஐ. முன்னணியுடன் கூட்டுக்கட்சி யாக இருந்து தனது பங்கைப் பெற்றது போன்று. தற்போது ஐ. தே. முன்னணியு டன் கூட்டுச் சேர்ந்துள்ள முஸ்லிம் காங் கிரஸ் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. ஏனெனில் பொ.ஐ. முன்னணி ஆட்சி பீட த்தில் ஏறுவதற்கு மூன்றாவது அரசியல் சக்தியாக விளங்கிய முஸ்லிம் காங்கி ரஸே முழு முதற் காரணமாக இருந்தது. இதனால் எங்கு அதன் பங்கையும், தனித் துவத்தையும் கொடுக்கா விட்டால் தம் ஆட்சி கவிழ்ந்து விடுமோ என்ற பயம், ஆனால் தற்போது ஐ.தே. முன்னணியு டன் கூட்டுச்சேர்ந்துள்ள மு. காங்கிரஸின் நிலை அவ்வாறல்ல. இதற்குக் காரணம் தற்போதுள்ள முஸ்லிம் காங்கிரஸின் தளர்வு நிலையேயாகும். இந்த முஸ்லிம் காங்கிரஸின் தளர்வினால், சமூகங்கள் மத்தியில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்தோடு முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவம் களங்கப்படுத்தப் படுவது மாத்திரமன்றி தனது உரிமைக ளையும் முன்னின்று வென்றெடுக்க முடி யாதுள்ளது. மேலும் முஸ்லிம் காங்கிரஸின் நிலைமை சமாதானத்திற்கு முன்னுரிமை கொடுப்பதா? தமது கட்சிக்குள் இடம் பெறும் உட்கட்சிப்பூசல்களுக்கு முன்னு ரிமை கொடுப்பதா? என்ற நிலைமை கா ணப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸிற்குள் ஏற்பட்ட உட்கட்சிப்பூசல்களால் ஒரு சொற்ப கால த்துக்குள் முஸ்லிம் காங்கிரஸ் என்னும் ஒரு குடையின் கீழ் ஒன்று சேர்ந்த மக்கள் மூன்று பிரிவுகளாக தற்போது பிரிந்து செயற்படுகின்றனர். இதனால் அக்கட்சியின் தலைவர்களிடையே முரண்பட்ட கருத்துக்களும் வாக்குவாதங் களும் நிலவுவதோடு மட்டும் நின்று விடாமல் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக் கின்றன. இந்த சூழ்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித் தரப்பாக கலந்து கொள்வதற்கான எந்த விதமான தீர்க்கமான முடிவும் எடுக்க முடியாதுள்ளது.

இதனால் முஸ்லிம் காங்கிரஸின் மூன்று மாற்றுக் கட்சிகளும் ஒன்றிணைந்து தனது முரண்பாடுகளை களைந்து "முஸ்லிம்களின் உரிமைகளையும் அபிலா ஷைகளையும் வென்றெடுப்போம்" என்ற ஒரு இலக்கோடு செயற்படும் போதே சமாதான முன்னெடுப்புக்கான முஸ்லிம்க ளின் சார்பாக உரிய தீர்வை காணலாம் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

மேலும் வேறு கட்சியிலுள்ள முஸ்லிம் அரசியல் வாதிகளும் முஸ்லிம் காங்கிரஸ் உடன் ஒன்றிணைந்து பிரதேச, கட்சி வேறுபாடுகளை மறந்து முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு முன் வர வேண்டும். இவ்வாறு எல்லா அரசியல் வாதிகளும் தனது கட்சி பிரதேச வேறுபா டுகளை மறந்து மத அடிப்படையில் ஒன்று சேர்வதன் மூலமே தங்கள் உரிமைகளை வென்றெடுக்க முடியும். அதற்கு மாறாக தங்களது பதவி ஆசையின் காரணமாக அக்கட்சிக்குள் உள்வாங்கப்பட்டு அதன் அடிமைகளாக செயல்பட்டு முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து முஸ்லிம்களின் உரிமைகளை வெல்லுவதற்கான எவ்வித குரல்களும் கொடுக்காமல் இருப்பார்க ளேயானால் பின்னர் அவர்களே கைசேத ப்பட வேண்டும் என்பதை அவர்கள் அறி யாதிருக்க நியாயமில்லை. அதுமட்டும ன்றி, மு. காங்கிரஸ் களங்கப்படுத்தப்படும் போது அதனைப்பார்த்து கைகொட்டி சிரிப்பார்களேயானால் இவ்வரசியல்வாதி களே சாபத்திற்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படும். அத்தோடு முஸ்லிம்கள் இவர்க ளுக்கு வாக்கு அளித்ததில் எந்த வித பிரயோஜனமும் இல்லாமல் போய்விடும்.

மற்றும் அரசியல் வாதிகள் சமாதான முன்னெடுப்புக்கான் தீர்வை காண்பதில் தாங்களாகவே முடிவெடுக்காமல் முஸ் லிம் புத்தி ஜீவிகள், மார்க்க அறிஞர்கள் போன்றோரையும் ஒன்றிணைத்து முஸ்லி ம்கள் சார்பாக குரல் கொடுக்க முன்வர வேண்டும். இல்லாவிடில் போன பஸ்ஸிற்கு கை காட்டும் நிலையே ஏற்படும்.

**ஹரி,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் பல கட்டங்களாக முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில் முஸ்லிம்கள் சம்மந்தமாக எத்தகைய உருப்படியான தீர்வுகளும் கணக்கில் எடுக்கப்படாத நிலையே காணப்படுகிறது. இந்நிலை நீடித்து பேச்சுவார்த்தை வெற்றி க்கு வரும் பட்சத்தில், நிச்சயமாக முஸ்லிம் களுக்கென தனி அலகோ, சுயாட்சியோ எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பது மிகவும் நிச்சயமான ஒன்று.

எந்தவோர் இனமாக இருந்தாலும் சரி இருக்கும் இடத்தில் சர்வ சுதந்திரம் மிக்கவர்களாக வாழும் நிலைப்பாடு அத்தி யவசியமானதாகும். தனது ஆன்மாவை தானே வளர்த்துக்கொள்ளும் நிலை இல் லாத விடத்து எவரது வாழ்வும் வளம் பெறாது.

இன்று தோன்றியுள்ள அமைதியில் தமிழர் சமுதாயம் எதனை வேண்டுகிறதோ அத னையே முஸ்லிம்களும் பெற வேண்டும் என்பதுவே முஸ்லிம்களின் நிலைப்பா டாகும்.

# வரலாறு தொல்பொருள் ஆய்வுகளை இஸ்லாம் மறுக்கின்றதா? 2

*"எத்தனையோ ஊ(ரா)ர்களை அவை அநியாயம் செய்து கொண்டிருக்க அவற்றை நாம் அழித்துள்ளோம்: அவை அவற்றுடைய முகடுகளின் மீது வீழ்ந்துவிட்டன. (புழக்கமின்றி) பாழான எத்தனையோ கிணறுகளும், உறுதியான உயர்ந்த எத்தனையோ மாளிகைகளும் (அழிக்கப்பட்டுவிட்டன) (குர்ஆன் - 22:45)*

*"பூமியில் இவர்கள் பிரயாணம் செய்து, தமக்கு முன்னிருந்தோரின் முடிவு எவ்வாறு ஆனது என்பதை கவனிக்கவில்லையா? இவர்களைவிட (எண்ணிக்கையில்) மிகுத மானவர்களாகவும், சக்தியாலும் பூமியில் (விட்டுச் சென்ற) அடையாளச் சின்னங் களாலும், வலுவானவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்த எதுவும் அவர்களுக்குப் பயனளிக்கவில்லை" (குர்ஆன் - 40:82)*

மேற்படிஅல்லாஹ்வின் திருமறைவசனங்கள் மிகத் தெளிவாக வரலாறு, தொல் பொருள் ஆய்வுகளை மேற்கொள்வதையும், அதன்மூலம் அடையக்கூடிய பயன்களை யும் எந்த வரையறையில் நின்று இவைகளை மேற்கொள்ள வேண்டும் என்பத னையுமே மிகத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன.

## வரலாறு, தொல்பொருள் ஆய்வுகளும், இஸ்லாமியக் கண்ணோட்டமும்

வரலாறு தொல்பொருள் ஆய்வுகள் பற்றி இஸ்லாத்திற்கென்றொரு கண்ணோட்டம் இருக்கின்றது. அவற்றினைப் பின்வருமாறு வகைப்படுத்தி விளங்கலாம். அதுவே இஸ் லாத்தின் வழிமுறையாகவும் உள்ளன.

01. இஸ்லாமிய நோக்கில் வரலாறு, தொல்பொருள் ஆய்வுகள் என்பனவற்றினால் வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்கள் மூலம் படிப்பினை எனும் அறிவியலையே - பாடத்தையே தனது முதல் நோக்கமாகக் கொண்டுள்ளது. உதாரணமாக, "நபிமார் களினதும், அவர்களது சமூகத்தினர்களினதும் தன்மைகளை விபரிப்பதும், நபித்துவங் களை நிராகரித்தோர்கள் அடைந்த வேதனைப் பெறுபேறுகளையும் விளம்பரப்ப டுத்துகின்றது".

**எம்.எம்.எம். நூறுல்ஹக்**
**சாய்ந்தமருது 05.**

இப்படியான நிகழ்வு கள் "எப்போது, எங்கு நடைபெற் றிருக்கின்றன" என்பதை விளக்குவ தில் பெரும்பாலும் கரிசனை கொள்ளாது "ஏன் இந்த நிலை ஏற்பட்டது" என்பதைக் குறித்துரைப்பதில் பெரிதும் அக்கறை செலுத்தியிருப்பதை இஸ்லாமிய மூலாதாரங்களான குர்ஆன், ஹதீஸ், இஜ்மா.்., கியாஸ் ஆகியவற்றின் மூலம் அறியக்கூடியனவாயுள்ளன.

எனவே வரலாறு, தொல்பொருள், ஆய்வுகள் மூலம் தெரியவரக்கூடிய நிகழ்வுகளின் மூலம் "அறிவுரைகள் பகர்வதையும், அதனை ஏற்றுத் திருத்தங்களை மக்கள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்" என்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பின் அடிப்படையாகும்.

02. வரலாறு, தொல்பொருள் ஆய்வுகள் என்பனவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் "இஸ்லாமிய அடிப்படைச் சட்டமூலாதாரங்கள் முன்வைக்கும் கருத்துக் களை அப்படியே நம்ப வேண்டும்" என்ற எதிர்பார்ப்பையே இஸ்லாம் கொண்டுள்ளது.

இதனால்தான் இஸ்லாமிய மூலாதாரங்கள் குறிப்பிடும் விடயங்கள் மனிதனின் "பகுத்தறிவு, புலனறிவு என்பவற்றுடன் உட்பட்டிருந்தாலும், உட்படாமலிருந்தாலும்சரி நம்பிக்கை கொள்ளல் வேண்டும்" என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இதற்குப் பின்வருவனவைகளைச்சில உதாரணங்களாகக் கொள்ளமுடியும்.

"மறுமைக் கோட்பாடு, நபிமார்களும் - அவர்களது சமூகங்களுக்கிடையில் நடைபெற்ற நிகழ்வுகள், சரித்திரகாலத்துக்கு முற்பட்ட, பிற்பட்ட நிகழ்வுகள் - சம்பவங்களை" இஸ்லாமிய மூலாதாரங்கள் முன்வைக்கும் அமைப்பில்" அப்படியே ஏற்றுக்கொள்ளல் வேண்டுமே தவிர, அவற்றுக்கான பௌதீக ஆதாரங்கள் கிடைத்தாலும் சரி, கிடைக் காவிட்டாலும் சரி, குறிப்பாக "மறைவான பலவற்றை கேள்விக்குட்படுத்தாது ஏற்றுக் கொள்ளல்" வேண்டும் என்ற தன்மையினை இது வெளிப்படுத்துகின்றது.

03. இஸ்லாமிய மூலாதாரங்கள் முன்வைக்கும் கருத்துக்களை குறிப்பாக "வரலாற்று ரீதியானதும், தொல்பொருள் ஆய்வு ரீதியானதுமான விடயங்கள், தொடர்பிலான சம்பவங்களுடையவற்றில் இஸ்லாமிய மூலாதாரங்கள் உறுதிப்படுத்துபவைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளலாம்" என்பதாகும். இதற்குப் பின்வருவனவைகளைச் சில உதாரணங்களாகக் கொள்ள முடியும்.

*"அ(வ்விறை)வன்தான் இரு கடல்களையும் ஒன்று சேர்த்தான், ஒன்று மிக்க இனிமையும், சுவையுமுள்ளது. மற்றொன்று உப்பும், கசப்புமானது. இவ்விரண்டுக் குமிடையே வரம்பையும் மீறமுடியாத ஒரு தடையையும் ஏற்படுத்தியிருக்கிறான்". (குர்ஆன் - 25:53)*

*இரண்டு கடல்களும் சமமாகமாட்டா. (இரண்டில்) இது மிக்க இனிமையானதா கவும், தாகம் தீர்க்கிறதா)கவும், அதனை அருந்துவதற்கு இலேசானதாகவும் இருக் கிறது. இ(ன்னும் - மற்றது) உவப்பானதாகவும்) இருக்கின்றது" (குர்ஆன் - 35:12)*

(இன்னும் வரும்)

## முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும், நஷ்டஈட்டுக் கோரிக்கைகளுக்குமான மாதிரி விண்ணப்பப்

**முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்**
181/1, Maligakanda Road,
(White Park)
Colombo - 10
Phone : 0777 389127

(A)01. விண்ணப்பதாரியின் பெயர் :....................
02. முகவரி :....................
03. அடையாள அட்டை இல :.................... 04. தொலை பேசி இல :....................
05. விண்ணப்பதாரிக்கும் (மௌத்தானவருக்கும் / காணாமல் போனவருக்கும் / அங்கவீனமுற்றவருக்கும்) இடையிலான உறவு முறை :....................
மௌத்தானவர்கள் / காணாமல் போனவர்கள் / அங்கவீனமுற்றவர்கள் பற்றிய விபரம் :
(B)01. முழுப் பெயரும் முகவரியும், சம்பவம் இடம்பெற்ற, இடமும், திகதியும்:
02. கிராம சேவையாளர் பிரிவு :.................... 03. தேர்தல் தொகுதி :....................
04. பிரதேச செயலாளர் பிரிவு :.................... 05. மாவட்டம் :....................
06. பிறந்த திகதி :.................... 07. அடையாள அட்டை இல....................
08. சம்பவம் யாரால் நிகழ்த்தப்பட்டது :....................
09. மரண அத்தாட்சிப்பத்திர இல :....................
10. மரண அத்தாட்சிப்பத்திரம் இல்லையாயின் காரணம் :....................
11. அங்கவீனமாயின் அங்கவீனத்தின் தன்மை :....................
12. காணமல் போனவரின் தற்போதைய நிலவரம் :....................
13. கல்வித் தகைமை :....................
14. தங்கிருப்போர் தொகை :.................... ஆண்:.................... பெண்:....................
15. இதுவரையில் பெற்றுக் கொண்ட நஷ்டஈட்டுத் தொகை ரூபாவில் :....................
16. உருவ புகைப்படப் பிரதி ஒன்றையும் மரண அத்தாட்சிப்பத்திரத்தின் போட்டோ பிரதி ஒன்றையும் இணைக்கவும்.

....................
விண்ணப்பதாரியின் கையொப்பம். திகதி:....................

## கவனத்திற்கு

அன்பார்ந்த நமது மக்களே! முஸ்லிம் குரல் இதழ் 18இல் இணைக்கப்பட்ட 'மாதிரி விண்ணப்பப் படிவம்' தொடர்பாக நமது மக்களின் பெரும்பாலானோர் விண்ணப்பப்படிவம் கேட்டு எம்மைத் தொடர்பு கொள்கின்றனர். அவ்விண்ணப்பப் படிவமானது மாதிரி விண்ணப்பப்படிவம்தான் என்பதை கவனத்தில் கொள்க. அவ்விண்ணப்பப் படிவத்தை மாதிரியாகக் கொண்டு நீங்களே விண்ணப்பப் படிவங்களை தயாரித்து எமக்கு விபரங்களை அனுப்பி வைக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## முஸ்லிம் குரலை வளர்ப்பது ஒவ்வொரு முஸ்லிமினின் கட்டாயக் கடமை

யுகமெங்கும் நகம் கொண்டு முஸ்லிம்களின் குரல் நசுக்கப்பட்ட இன்றைய பொழுதுகளில் அஞ்சா நெஞ்சத்துடன் மூடி மறைத்த எலும்பு களைக் கூட தோண்டியெடுத்து உண்மையால் துலங்க வைக்கும் "முஸ்லிம் [illegible] பள்ளத்தின் நஞ் சோடு, நுனிநாக்கில் தேன்பூசி [illegible] ஆணிவேரை துளைத்து தீத்தூள் வைக்கும் "முஸ்லிம் குரல்" லை வளர்ப்பது ஒவ்வொரு முஸ்லிமின் இன்றைய கட்டாயக் கடமை என்றால்கூட தவறில்லை.. வாரவசந்தமாக வரும் முஸ்லிம் குரல் வெற்றிக் குடை பிடித்து வீர நடையுடன் தினசரி பத்திரிகையாய் மிளிர வாழ்த்துகிறேன்.

பஷீர் அலி, கிண்ணியா.

## அமைதி தேடும் ஆயுதங்கள்!

ஆம் அவர்கள்...
போராடுகிறார்கள் -
உயிரை இழப்பதற்கு
மட்டுமல்ல - நாம்
உயிரைக் கையில்
பிடித்துக் கொண்டு
ஓடுவதற்கும்தான்!

ஆம் அவர்கள்...
போராடுகிறார்கள் -
நாட்டுக்கு மட்டுமல்ல
நம் நாசத்திற்கும்தான்!

ஆம் அவர்கள்...
போராடுகிறார்கள்
மொழிக்கு மட்டுமல்ல -
நமது மொழியும்
உரிமையையும்
மறுப்பதற்கும்தான்

ஆம் அவர்கள்...
போராடுகிறார்கள்
தாயகத்திற்கு மட்டுமல்ல -
நாம் தாயகம் பிரிந்து
ஓடுவதற்கும்தான்!

ஆம் அவர்கள்...
போராடுகிறார்கள்
வீரத்திற்கு மட்டுமல்ல -
நாம் விடிழந்து - அகதியாய்
அலைவதற்கும்தான்!

ஆம் அவர்கள்...
போராடுகிறார்கள் -
சமாதானத்திற்கு மட்டுமல்ல-
சமாதிகள் கட்டி -
வெற்றிவாகை சூடத்தான்!

ஏ.எல்.ஏ.முஹம்மத்,
பொத்துவில்.

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சம்பிக்க ரணவக்க அறிவாரா?



"முஸ்லிம்கள் இப்போது சர்வதேச பயங்கரவாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நாட்டைக் கைப்பற்ற முயற்சி செய்கின்றனர். தற்போது இலங்கையில் சர்வதேச முஸ்லிம் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது" இது சிஹல உறுமய சம்பிக்க ரணவக்கவின் கூற்று.

சம்பிக்க ஒன்றுமறியாத பாலகர் அல்ல. வரலாறு அறியாதவரும் அல்ல. எல்லாம் அரசியல் வியாபாரம்தான். எல்லா அரசியல்வாதிகளும் குதிரையைப் பிடிக்க போகும் குறுக்கு வழித்திட்டங்களில் இதுவும் ஒன்றுதான். இன.மத.மொழி வெறிகளைத்தூண்டி அரசியல் இலாபம் பெறும் நோக்கம்தான். ஆனால் இவ்வழிகளில் சென்ற அனைவரும் குறுகிய காலமே பிரகாசித்தனர் என்பது வரலாறு காட்டும் பாடம்.

கிழக்கு நோக்கிப் புறப்பட்ட முஹம்மது கோரி, கஜின் முஹம்மது போன்றவர்கள் சில நூறு போர் வீரர்களுடன்தான் இந்தியா போன்ற பெரிய நாடுகளை கைப்பற்றினர். ஏறக்குறைய 900 ஆண்டுகள் பரந்த சாம்ராஜ்சியத்தின் அதிபதிகளாக ஆட்சி செய்தனர். மேற்கு நோக்கிச் சென்ற முஹம்மது பின் காஸிமின் படைகள் அத்திலாந்திக் சமுத்திரம் வரை சென்று "இறைவா! இச்சமுத்திரம் தென்படாமல் இருக்காதிருந்தால் இதற்கு அப்பாலும் உனது புகழை நிலைநாட்ட சென்றிருப்பேன்" என்றார்கள்.

ஸ்பெயின் மீது படையெடுத்த தளபதி தாரிக், தாம் சென்ற கப்பலை தீக்கிரையாக்கி விட்டு, வெற்றி அல்லது வீரமரணம் என்னும் தம் வீரர்களுக்கு ஆற்றிய உரை வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. தாரிக் ஸ்பெயினை வென்றார். ஜபல் அல்தாரிக் இன்று ஜிப்ரால்டர் என அழைக்கப்படுகின்றது. வரலாறு காணாத வெற்றிகளை கண்ட முஸ்லிம்கள் பெரும் பெரும் சாம்ராஜ்சியங்களை தங்களது காலடியில் கொண்டு வந்தவர்கள். ஏன் இலங்கையைப் போன்ற சிறிய நாட்டை விட்டு வைத்தனர் என்பது சம்பிக்க அறியாத ஒன்றல்ல.

ரொலின்ஸன் எழுதிய "இந்திய பண்பாட்டு வரலாற்றுச்சுருக்கம்" என்ற நூலைப்பார்த்தால் இதற்குரிய காரணத்தை சம்பிக்க மட்டுமல்ல நமக்கும் உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். ரொலின்ஸன் தனது நூலில் பின்வருமாறு கூறுகிறார். "முழு இந்தியாவையும் கைப்பற்றிய முஸ்லிம்கள் இலங்கைக்கும் வந்தனர். இங்குள்ள மக்கள் வெள்ளை ஆடை அணிந்தவர்களாக ஆலயங்களுக்கு செல்பவர்களாகவும் மாமிசங்களை புசிக்காதவர்களாகவும் நற்பண்புகள் நிறைந்தவர்களாகவும் காணப்பட்டனர். இது முஸ்லிம்களை மிகவும் கவர்ந்தது" மன்னரும் மக்களும் முஸ்லிம்களை வரவேற்று அந்நியோன்யமாக உரையாடி வர்த்தக, வைத்திய நிலைமைகளையும் கதைத்தனர். இந்நாட்டு மக்கள் மீது ஏற்பட்ட நல்ல அபிப்பிராயமே இலங்கையை கைப்பற்றும் நோக்கத்தை விட்டு விட நேர்ந்தது. அன்று முதல் இன்று வரை எந்தச் சந்தர்ப்பத்திலாவது இந்த நாட்டுக்கும், மக்களுக்கும் எதிராக முஸ்லிம்கள் ஈடுபட்டதாக எந்தச் சான்றும் இல்லை.

போர்த்துக்கேயர்கள் இந்நாட்டுக்கு வந்த போது இந்த நாட்டில் வாழும் மற்ற சமுகங்களை விட ஒரு படி மேல் சென்று நம் நாட்டுக்காக முஸ்லிம்கள் போராடினர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. சமோரின் போன்ற அரசர்களின் உதவியுடன் முஸ்லிம்களும் போர்த்துக்கேயருக்கு எதிராக போராடினார்கள் என்பது வரலாறு கூறும் உண்மை. கிழக்கிலங்கையை மையமாகக் கொண்டு நஸ்ரிஸ்தான் உண்டாக்க முஸ்லிம்கள் முயல்வதாக சம்பிக்க உளறுகிறார். சிங்கள - முஸ்லிம் மக்களின் நட்புறவைக் காணச் சகிக்காத, முஸ்லிம்களின் பொருளாதாரத்தை கெடுக்க சம்பிக்க எடுக்கும் முயற்சிதான் நஸ்ரிஸ்தான் என்ற கற்பனைக் கதை.

இந்நாட்டில் வாழும் சிங்கள மக்கள், முஸ்லிம்களை இன்றும் மதிக்கின்றனர். முஸ்லிம்களை மனப்பூர்வமாக நம்புகின்றனர். பெரும்பான்மை சிங்கள மக்களைக் கொண்ட கடுகன்னாவ தொகுதியில் இருந்து ஒரு முஸ்லிம் - சிங்கள மக்களால் (சிங்கள மரிக்கார் என அழைக்கப்பட்டவர்) வெற்றி பெற்று அமைச்சரானார். இது போன்று கலகெதர ஜப்பார், பலாங்கொட அபூசாலி போன்றவர்களை பாராளுமன்றம் அனுப்பினர். முழு இலங்கையிலும் இனவாதத்தைக் கக்கி பாராளுமன்றத்தில் தனது கட்சிக்கு 1 ஆசனத்தைத்தான் சிஹல உறுமய பெற்றுக் கொண்டது. சிங்கள மக்களின் ஆதரவுடன் பல முஸ்லிம்கள் கட்சி பேதம் பாராது பாராளுமன்றம் செல்வதை பொறுத்துக் கொள்ள முடியாத பொறாமையின் காரணம்தான் முஸ்லிம்கள் மீது சிஹல உறுமய சம்பிக பல குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறார்.

குறுக்கு வழியில் அரசியல் இலாபம் பெறுவதை விட்டு விட்டு தனது திறமைகளை உலகுக்கு எடுத்துக் காட்டி இந்நாட்டுக்கும் சிங்கள சமூகத்துக்கும் தன்னால் இயன்ற சேவைகளை செய்ய வேண்டும். இல்லையெனில் இந்நாட்டு மக்கள் கூடிய சீக்கிரம் அரசியலில் இருந்து சம்பிகா போன்றவர்களை ஓரங்கட்டி விடுவார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

-எச்.எம். கவுஸ் மொஹிதீன், திஹாரி

## போரிக் அமிலம்



போரிக் அமிலம் என்பது வெள்ளை நிறத்தில், வாசனை இல்லாத கண்ணாடி போன்று பளிச்சென்று இருக்கும் ஒரு தூளாகும். இதனை ஒரு குழந்தைக்கு ஒரு தேக்கரண்டி கொடுத்தாலே போதும் அதன் உயிரைக் குடித்துவிடும். மீன், இறைச்சி, பால் உணவுப் பொருட்களை பதனப்படுத்தி அதிக நாளைக்குக் கெடாமல் வைத்திருக்க 1870 லிருந்தே போரிக் அமிலம் பயன்படுதப்பட்டு வருகின்றது. 1904 இல் தான் போரிக் அமிலத்தில் நச்சுத்தன்மை குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1950 இல், போரிக் அமிலத்தின் உபயோகம் உலகின் பல பாகங்களில் தடை செய்யப்பட்டது.

போரிக் அமிலத்திற்கு ஓர்தோ போரிக், போராசிக், மெத்தாபோரிக் மற்றும் தெத்ராபோரிக் என்ற பெயர்களும் உள்ளன.

மலேசியாவில் போரிக் அமிலம் உணவில் பயன்படுத்தக் கூடாது என்று 1983லேயே தடை விதிக்கப்பட்டது.

இருந்தும் என்ன பயன்? 1988 இல் லோசீ.ஃபான் என்ற சீன உணவில் சேர்க்கப்பட்ட போரிக் அமிலம் 13 குழந்தைகளையும் ஒரு பெரியவரையும் கொன்றது. போரிக் அமிலம் தடை செய்யப்பட்டிருந்தும் 1984லிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வின்படி உணவுகளில் போரிக் அமிலம் இன்னும் சேர்க்கப்பட்டுத்தான் வருகின்றது.

குவே, தியாவ், வன்தான், மீ.சீ சியோங் ஃபான், லக்சா என்று எல்லா மீன் வகைகளிலும், இறைச்சிப் பொருட்களிலும் கனவாய் முட்டை, பாக் சாங் மற்றும் மீன் உருண்டைகளிலும் சைவ உணவுப் பொருளான ஃபூசுக்கு மற்றும் தாய்வானிலும், மலாய்க்கார உணவான ஞோஞா மற்றும் மீன், இறால் வகைகளிலும் இந்த போரிக் அமிலம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பினாங்கு மற்றும் பேராக்கிலிருந்து 40 வீதமான உணவு மாதிரிகளைச் சோதனைக்கு அனுப்பிவைத்தபோது இவற்றில் 27 போரிக் அமிலம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் புக்கிட் மொதாஜாம் சந்தையில் வாங்கப்பட்ட மீனில் 2060 பி.பி.எம். போரிக் அமிலம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது சட்ட அமுலாக்கத்தின் பலவீனத்தைக் குறிக்கிறது.

போரிக் அமிலம் உணவில் கிருமி மற்றும் வைரஸ் வளருவதைத் தடுப்பதால் இதனுடைய உபயோகம் வியாபாரங்களில் பரவலாக உள்ளது. போரிக் அமிலம் அதிகமான நாடுகளில் அபாயகரமான பொருளாக பட்டியலிடப்பட்டுள்ளது. மீன் வியாபாரிகள் இந்த போரிக் அமில பவுடரைத் தங்களுடைய மீன்களின் மேல் தெளித்துவிடுகிறார்கள்.

பன்றி இறைச்சி விற்பனையாளர்களோ போரிக் அமிலத்தைக் கொண்டுதான் பன்றியின் குடலைக் கழுவுகிறார்கள். அதோடு அரிசி உணவுகள் அதிகம் பிசுபிசுப்பாக இருக்காமல் இருக்கவும் இந்த போரிக் அமிலம் பயன்படுத்தப்படுகிறது.

போரிக் அமிலம் கொண்டு வரும் கேடுகளை கீழ் உள்ள அட்டவணையில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

**போரிக் அமிலம் உணவில் அதிகமானால் என்ன ஆகும்?**

+ குமட்டல், வாந்தி, வயிற்றுப் போக்கு அஜீரண உறுப்பில் அழற்சியை உண்டாக்கும்.
+ நரம்பு மண்டலத்தில் அழுத்தத்தை உண்டாக்கும். இது தலை வலி, தலை சுற்றல், குமட்டல் போன்றவற்றின் மூலம் வெளிவரும்.
+ சிறுநீரக பாதிப்பு + இழுப்பு + ஜீரண உறுப்பில் அரிப்பு ஏற்பட்டு இரத்தம் கசிதல்
+ மிகவும் முற்றிய நிலையில் மூர்ச்சையற்றுப் போதல், கோமா மற்றும் சுவாசக் கோளாறுகள் ஏற்பட்டு இறப்புக்கும் இட்டுச் செல்லலாம்.
+ பிறக்கும் குழந்தைகளிடையே ஊனத்தன்மையை உருவாக்கலாம். பொதுவாக சிறுநீரகம், மத்திய நரம்பு மண்டலம் மற்றும் இருதயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

## பொன்னாங்கனி உயிர்

நோண்டி எடுத்து
எங்கேயாவது வீசி விடு
இந்த உயிரை!

எட்டி உதைப்பதற்கும்
எரி நெருப்புக்கும்
எத்தனை நாளைக்கு
இரையாவது!

என்னுள்
ஒட்டி இருப்பதை
எடுத்துக் கொள்ள
அவன் என்ன
இஸ்ராயீலா?

சத்தியமாக தெரியாது
தனி நாடும்
சுதந்திர தாகமும்

அதற்கு!

கிடுகு வேலிக்குள்
கிணற்றடி வேம்புக்குள்
ஒதுங்கி இருக்க
இனியும் முடியாது!

பொன்னாங் கன்னியை
நோண்டி எடுப்பது போல்
என் உயிரை
எடுத்து எறி

நமது-
பலஸ்தீன பக்கம்
அல்லது
ஈராக் தேசத்தில் விழட்டும்:
ஆயிரம் உம்மத்தோடு
அதுவும்
புனிதமாகட்டும்!

-முகமட் அபார்-

## நீ வீர நடைபோடு....!

முஸ்லிம் மக்களின் படுகொலைகள் ஆள்கடத்தல், சொத்துக்கள் அபகரிப்பு, தாக்குதல்கள், வன்முறைகள், கப்பம் கொடுத்தல் என்று தொடர்ச்சியாக முஸ்லிம் மக்கள் ஒடுக்கப்பட்டு கொண்டு வருகின்ற காலகட்டத்திலே இவற்றையெல்லாம் முன்னின்று தட்டிக் கேட்கின்ற முஸ்லிம் குரலே உனது சேவை அளப்பெரியது.

உனது சேவை முஸ்லிம் மக்களுக்கு என்ற வகையிலும், உனது பெயரில் முஸ்லிம் என்ற சொல் வந்திருப்பதனாலும் இனந்தெரியாத நபர்களால் என்றும் மாயைக்குள் உன்னை அழிக்க சதி தீட்டுவார்கள். தீட்டிக் கொண்டு இருப்பார்கள். இவற்றையெல்லாம் தோல்வியடையச் செய்து உனது சேவை தொடர்ந்து வரும் வாரங்களில் தொடர்ச்சியாக வெளிவர இவ்வுலகை ஆட்சி செய்யும் [illegible] பிரார்த்திக்கின்றேன்.

அ. கஸ்மியா (டபிள்யூ. வல்), தோப்பூர் -9.

# இனந்தெரியாத இலக்கு!

மருதமுனைக் கோட்டுச்சாரன் மட்டும் தான் அணிந்திருந்தார். இடது கையானது கால்கட்டுச் சாரனைப்பிடித்திருக்க, வலது கையில் பாதிச்செங்கல், ஆத்திரம் கொப்பளிக்கும் முகம், நாகூர் மீரா கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். அவரைக் கண்டு சிறுவர்களோ பெரியவர்களோ வெருண்டோடவில்லை. காரணம் மன நிலை பாதிப்படைந்தவராயினும் இவரால் யாருக்கும் எந்தத்தொந்தரவும் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும்.



"நாகூர் மீரா வாறார்" கடற்கரையில் நின்றவர்கள்" தமக்குள் கூறிக்கொண்டு தம் வேலைகளில் மூழ்கினர். ஏனெனில், கடற்கரைக்கு வரும் நாகூர் மீரா என்ன செய்வார் என்று எல்லோருக்கும் தெரியும். இந்தச் சதிகாரச் சமாதான உடன்படிக்கை முஸ்லிம்களுக்குத் தந்த பரிசுகளில் ஒன்றுதான் இந்த மனநிலை பாதிக்கப்பட்ட குடும்பஸ்தன்.

அதோ நாகூர்மீரா, கடலலை அவரது கால்களைக் கழுவுகின்றன. கரையில் நின்று கொண்டு ஆவேசத்துடன் கல்லால் கடலுக்குள் எறிந்து "நேவிக்காற நாயே அழிஞ்சி போ... என்ட மீனப் பறிச்ச பேயே தொலஞ்சி போ..... என்ட புள்ளய தின்ட புலியே அழிஞ்சிபோ தொலஞ்சி போ" என்று இரண்டு கைகளாலும் மண்ணையள்ளி கடலில் எறிந்து சபித்தார். திடீர் என இரண்டு கைகளையும் தலையில் வைத்துக் கொண்டு கடற்கரையில் குந்திக் கொள்வார். இரண்டு முழங்கால்களுக்கும் இடையில் தலையை புதைத்துக் கொண்டு நீண்ட நேரம் விம்மி அழுதார். அழுததால் ஒரு தெளிவு ஏற்பட்டவர் போல எழுந்து சென்று தென்னை நிழலில் படுத்துறங்கினார். இது கடற்கரையில் நாளாந்தம் நடக்கும் காட்சி.

தகப்பனும் மகனுமாக மீன்பிடிக்கச் செல்லும் பல குடும்பங்களில் நாகூர் மீராவின் குடும்பமும் ஒன்று. ஆண்டவனின் கடலை நேவியும், புலியும் தமக்குள் பங்கு போட்டுக் கொண்டிருக்க கடலின் மைந்தர்களான மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்று மத்தளம் போல் இரு புறத்தாலும் அடி வாங்குகின்றனர்.

அன்று நாகூர் மீராவும் மகனும் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது சின்னஞ்சிறிய மீன்களே அவர்களது பசியைத் தணிக்க தம்மை அர்ப்பணிக்க முன்வந்து கொண்டிருந்தன. 'ஒரு பெரிய பாரையோ கொடுவாயோ பிடிபட்டால் மாரிக்கு ஒழுகக் காத்திருக்கும் குடிசைக்கு கிடுகு வாங்கலாம்' என்ற ஆசை நாகூர் மீராவின் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் போதே கனவு மெய்ப்பட்டது. மகனின் தூண்டில் கயிற்றைப் படு வேகமாகப் பெரிய பாரை மீனொன்று இழுத்துக் கொண்டோடியது. உடனே மகனிடம் இருந்த தூண்டில் கயிற்றை தந்தை வாங்கினார். பெரிய பாரை மீனை லாவகமாக தோணிக்குள் வரவழைத்தார். தாங்கொணா மகிழ்ச்சி. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். சிரிப்பு நீடிக்கவில்லை .தூரத்தில் எங்கோ தெரிந்த கன்போட் தம்மை நோக்கி வரும் சத்தம் கேட்டது.

"வாப்பா நேவிக்காறன் வாறான் வள்ளத்த ஒடைக்கப் போறான் கடல்ல பாய்வம்"
"பொறு, சில நேரம் மீன் பறிக்க, வருவானுகள்.. பார்க்கலாம்" இல்ல வாப்பா... போன மாதம் இப்புடித்தான் நேவிக்காறன் மூனுபேர மௌத்தாக்கினான்.
"எல்லாத்துக்கும் அல்லாஹ் இரிக்கான் பயப்படாதே"

கடலைக் கிழித்துக் கொண்டு வந்த கண்போட் ஆறி அடங்கி நின்றது. மேற்தளத்தில் நின்ற ஒருவன் அருகில் வருமாறு அழைத்தான். மகன் தோணியைச் செலுத்த தந்தை. இருந்த

**துல்கர்னைன்**

பொருட்களால் பாரை மீனை மறைத்தார். கடலில் சுற்றும்கடற்படையினர். பெரிய மீன்களைப் பறிப்பர். சாராயத்துடன் மீனைப் பொரித்து உண்பர். அதிக மீன்களைப் பறித்தால் விற்றுக் காசாக்குவர். நாகூர் மீராவிடம் மீன் கேட்டனர். மீனேதும் இல்லை என்றார். ஆனாலும் மறைத்துப் பயனில்லாமல் பாரை மீனின் துருத்திக் கொண்டிருந்த வாலை போதையில் இருந்த ஒருவன் கண்டுவிட்டான். கெட்ட வார்த்தைகளால் தூசித்துக்கொண்டு மீனைப் பறித்து எடுத்தான். மீன் பறிபோன மறுகணமே முடிச்சுகள் போடப்பட்ட கயிற்றால் மற்றொருவன் நாகூர் மீராவின் முதுகில் விளாசினான். பொய் சொன்னதற்கு தண்டனையாம். அவர் தோணிக்குள் சுருண்டு விழுந்தார். காரியம் முடிந்ததென்று பெரியதோர் அலையை எழுப்பிக் கொண்டு கன்போட் விரைந்தது.

தோணி கரையேறியதும் நாகூர் மீரா வைத்திய சாலைக்கு விரையப்பட்டார். நேவிக்கெதிரான முறைப்பாட்டைப் பொலிஸ் ஏற்காததையும், கண்காணிப்புக்குழு கண்கொண்டு பார்க்காததையும் உல்லாசப் பறவைகளுக்கு ஒட்டுப் போட்டதையும் நொந்து கொண்டு ஒரு மாதகாலமாக சிகிச்சை பெற்றார்.

கடலின் உள்ளேயும், மேற்பரப்பினும் இயற்கையாகவும், செயற்கையாகவும் ஆயிரம் ஆபத்துக்கள் காத்திருப்பது தெரிந்தும் கடலைப் புறக்கணித்து காலந்தள்ள முடியாத அவர்கள் மீண்டும் அலைகளில் பயணித்தனர். வெறும் வயிற்றோடு வந்திருப்பது தெரிந்து அவர்களுக்கு கடல் வஞ்சமில்லாமல் வாரி வழங்கியது. அதனால் கரை திரும்ப வேண்டிய நேரம் அரைமணி நேரத்தால் தாமதமாகியது. பெரும்பாலான தோணிகள் கரையேறி விட்டன. எஞ்சியவற்றுள் அங்கொன்றும் இங்கொன்றுமாக கரையை நெருங்கிக் கொண்டிருந்தன.

அக்கம் பக்கம் யாருமில்லாமல் கடலில் தாமதிப்பது உசிதமான தல்ல என்பதை உணர்ந்த நாகூர் மீரா ஆயத்தமானார். தந்தையும், மகனும் மூச்சுப் பிடித்து சவல் போட்டனர். அப்போது ஓர் இயந்திரப் படகு அவர்களை நோக்கி வந்தது. நான்கைந்து பேர் பன் தொப்பியுடன் காணப்பட்டனர். நெருங்கியதும் தான் அனைவரும் தமிழ் ஊடகங்களால் 'இனந்தெரியாத நபர்கள்' என்று அழைக்கப்படுபவர்கள் என இனந்தெரிந்தது. அந்தப்படகில் இருந்த ஒவ்வொருவரும் நாகூர் மீராவின் மனக்கண்ணில் ஒவ்வொரு ஞாபகங்களை உருவாக்கினர். வண்டில் கடத்தல், ஆள்கடத்தல், கப்பம், ஊர் எரிப்பு, கொள்ளை கொலை பணங்கருக்கினால் அடித்து உப்பு நீர் ஊற்றியது. அண்மைக்கால சம்பவங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக மனதில் தோன்றியதால் அச்சம்பவங்கள் போல ஏதோ ஒன்று தனக்கும், மகனுக்கும் நடக்கப்போகிறது என்று உணர நேரமாகவில்லை. அப்போது படகுக்குள் குனிந்து நிமிர்ந்த ஒருவனின் கையில் இயந்திரத் துப்பாக்கி இருந்தது.

"டேய்.... சோணியள் ஆர் உங்கள இந்தப்பக்கம் வரச்சொன்னவ.....?" நாகூர் மீரா நடுங்கிக் கொண்டிருந்தார். வார்த்தை வரவில்லை. தட்டுத்தடுமாறி "மீம்பிடிக்க வந்தோம்" என்றான் மகன். "மீன் பிடிக்க வந்திருக்கியளென்டு தெரியுது. இது எங்களின்ட கட்டுப்பாட்டுப் பிரதேசம். இதில் நீங்க மீன் பிடிக்கயேலா.... விளங்குதே..... "அப்ப நாங்க எங்க மீம்புடிக்கிற....." "என்னடா கேள்வி கேக்கிற..... சோனி....." என உறுமிக் கொண்டு அதிலொன்று மகனின் பிடரியில் துப்பாக்கியால் அடித்தது. நாகூர் மீரா மகனை அணைத்துக்

**சிறுகதை**

கொண்டார்.
"தம்பி..... எங்கள உட்றுங்க எங்களுக்கு வேற தொழில் தெரியா மீம்புடிதான். இனி இந்தப்பக்கம் வரமாட்டம்....."
பொத்துடா வாய..... எங்களின்ட கட்டுப்பாட்டு ஏரியாவுல மீன் பிடிச்சிருக்கிறியள்.... போறன்டா ஐயாயிரம் தந்து போட்டுப் போங்கோ" "தம்பி ஒரு மாசமா ஆசுப்பித்திரியிலகெடந்து வந்திரிக்கம். எங்களுக்கிட்ட ஏது காசி. இத வித்துத்தான் ஏழு புள்ளயலுக்கு சாப்பாடு வாங்கிக் குடுக்கணும். அடுப்பெரிஞ்சி மூணு நாள் தயவு காட்டுங்க தம்பி....." என்று மீன் நிறைந்த பறியைக் காட்டிக் கெஞ்சினார். அதனை மற்றொன்று பாய்ந்து பறித்துக் கொண்டது.

காசு இல்லாட்டா தோணியைத் தந்து போட்டு தேப்பனும் மகனுமா நீச்சலடிச்சிக்கிட்டுப் போங்களன்.... நீச்சல் தெரியுந்தானே...." கூறிவிட்டு அனைவரும் கைகொட்டிச் சிரித்தனர். அந்தச்சிரிப்பு ரத்தக் காட்டேறிகள் தன்னைச் சுற்றி எக்காளமிடுவது போல இருந்தது நாகூர் மீராவுக்கு. ஏதோ நரமாமிச உண்ணிகளுக்கிடையில் சிக்கியது போல உணர்ந்தார். ஏளனமும் எக்காளமும் நிறைந்த அந்தச் சிரிப்புக்கிடையே திடீரென தம்படகுக்குள் பிடித்திழுத்தன. "தம்பீ என்ட புள்ளய ஊட்றுங்க தம்பி ஒன்னுஞ் செஞ்சி போட்றாதீங்க வாப்பா என்னக் கொண்டு போங்க என்ட புள்ளய உட்றுங்க தம்பி...." இரண்டு கைகளையும் நீட்டி அழுது கொண்டிருக்கும் போதே அவர்களது படகு நோக்கம் நிறைவேறியது என்று திரும்பியது.

போகும் போது ஒருவன் "டேய்..... காக்கா..... இன்னும் இரண்டு நாளைக்குள்ள ஐயாயிரம் ரூபா கொண்டு வந்து தந்து போட்டு மகனைக் கொண்டு போ.. இல்லையென்றால் மகன் பிணமாக வந்து சேருவான்..... பாய்...." இயந்திரப் படகு புலியெனப் பாய்ந்து சென்றது.

ஐந்து ரூபாவுக்கு வழியில்லாத நாகூர் மீராவால் ஐயாரயிம் தேடுவதெப்படி? பலரும் அனுதாப வார்த்தைகளை மாத்திரம் வழங்கிச் சென்றனர். வீடு மரண வீடாகக் காட்சி தந்தது. மூன்று வேளை சாப்பாட்டுக்கு பிரச்சினையில்லாத சிலர்" இவனுக்கு ஏன் தேவையில்லாத வேல அந்தப் பக்கம் ஏன் மீன் பிடிக்க போவனும்....." என வெந்த புண்ணில் வேல் பாச்சிச் சென்றனர். நாட்கள் நகர்ந்தன ஒரு வாரமாகியது.

ஒரு நாள் பிற்பகல் எல்லோரும் பரபரப்புடன் கடற்கரைக்கு ஓடினர். நாகூர் மீராவின் மகனின் ஜனாஸா கரையொதுங்கியது. ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது. அடுத்த நாளும் கடற்கரையில் சனங்கூடியது அங்கே..... நாகூர் மீரா கற்களாலும் மண்ணாலும் கடலுக்கு எறிந்து......
நேவிக்கார நாயே அழிஞ்சி போ....
என்ட மீனைப் பறிச்ச பேயே தொலஞ்சி போ.....
என்ட மகனைத்திண்ட புலியே அழிஞ்சிபோ
தொலஞ்சி போ....
என சபித்துக் கொண்டிருந்தார்.

அன்றைய தினம் தமிழ் ஊடகங்கள் அனைத்தும் சொல்லி வைத்தாற் போல இனந்தெரிந்தும். 'இனந்தெரியாத நபர்களால் முஸ்லிம் இளைஞர் கொலை செய்யப்பட்டார்' என செய்தி என்ற பெயரால் பொய் கூறின.

முழுப்பூசனிக்காயை மறைக்க முயன்று மனச்சாட்சியைக் கொன்றன. தமக்கிட்ட கட்டளையை நிறைவேற்ற முஸ்லிம்களைக் கொச்சைப்படுத்தி அவர்கள் மீது சொற்போர் தொடுத்தன.

ஆயினும் பசுத்தோலினுள் பதுங்கிய இனந்தெரியா (?) நபர்களின் இலக்குகளால் இன்னும் எத்தனை எத்தனை நாகூர் மீராக்களோ?!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

## இன்று தனது பேரம் பேசும் சக்தியை இழந்துள்ளது!

பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஹக்கீம் அணியினர் 07 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தனது பயணத்தை தொடர்கின்றனர். இருந்த போதிலும் அது தனது பேரம் பேசும் சக்தியை இழந்துவிட்டது என்றே சொல்ல வேண்டியுள்ளது.

சரியான திட்டமிடலும், மசூராவும், ஒழுங்கமைக்கப்பட்ட தீர்மானங்களும் இல்லாமல் ஸ்ரீலங்கா மு.கா. பல இடங்களில் தனது பலத்தினை காட்ட முயற்சித்து தோல்வியை தழுவிக் கொள்கின்றது. ஆனாலும் தலைவர் ஹக்கீம் அந்த தோல்வியை ஒரு போதும் ஏற்றுக் கொள்வதில்லை. எவ்வாறு என்றால் "குப்புற விழுந்தும் மீசையில் மண்பட வில்லை" என்பது போல்.

பேச்சுவார்த்தை மேசையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் பிரதிநிதியாக அமரும் என்று தலைவர் ஹக்கீம் சொன்னார். என்ன நடந்தது? கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் நடத்தாவிட்டால் முஸ்லிம் காங்கிரஸின் 12 பாராளுமன்ற உறுப்பினர்களின் பலம் என்ன என்பதை அரசுக்கு நான் உணர்த்துவேன் என்றார். என்ன நடந்தது. ரணில் - ஹக்கீம் தேர்தல் ஒப்பந்தம் முஸ்லிம்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் என்றார். மூதூரில் என்ன நடந்தது. வாழைச்சேனையில் என்ன நடந்தது. சம்மாந்துறையில் என்ன நடந்தது. எல்லாமே ரவூப் ஹக்கீம் சொன்னதற்கு தலை கீழாகவே நடந்திருக்கின்றது.

இவற்றை அவதானிக்கும் போது பெரும் தலைவரின் மறைவுக்கு பின் அவரது கட்சி பேரம் பேசும் சக்தியை இழந்துவிட்டது. என்று சொல்லாமல் வேறு எப்படி சொல்ல முடியும்.

மறைந்த தலைவர் ஆட்சியாளர்களை அதிர வைப்பதற்காக. அதன் மூலம் சில பெரிய விடயங்களை சாதிக்க வேண்டுமானால் தேசிய மகாநாட்டை கூட்டி அதில் தீர்மானங்களை நிறைவேற்றி முஸ்லிம்களினதும் கட்சியினதும் அபிலாசைகளை தீர்த்துக் கொள்வார். இன்று அவ்வாறு அல்ல. அறிக்கைகள் வரும். சவால்கள் விடப்படும் நடப்பது ஒன்றும் இல்லை எல்லாமே பூச்சியம். இன்றைய தலைவரின் அறிக்கைகளையும், சவால்களையும், கேட்டுக் கேட்டு கட்சிப் போராளிகளுக்கு அலுத்துப் போய்விட்டது. சில போராளிகளுக்கு ஹக்கீம் என்றாலே அலர்ஜிக்.




இவ்வாறான தலைவரின் சாணாக்கியமற்ற வீராப்புக்களினால் இதுவரை என்ன நடந்திருக்கின்றது. கப்பல்துறை துறைமுகங்கள் அமைச்சினை பொறுப்பேற்று 20 மாதங்களாகின்றன. ஹக்கீம் எத்தனை பேருக்கு அதில் வேலை வாய்ப்பு கொடுத்திருக்கின்றார்? கிழக்கு அபிவிருத்தி அமைச்சினால் கிழக்கில் இதுவரை எத்தனை அபிவிருத்தி திட்டங்கள் முடிவடைந்திருக்கின்றன? இந்த அமைச்சுக்கள் இன்று எந்தளவுக்கு போய் இருக்கின்றது என்றால், கிழக்கு அபிவிருத்தி அமைச்சின் வெகுஜன தொடர்புச் செயலாளர் ஒருவருக்கு ஒரு வாகனத்தை கொடுக்க முடியாதளவுக்கு செயல் இழந்து கிடக்கின்றது. இது அமைச்சின் கையாலாகாத்தனமா? அல்லது தலைவரின் ஆளுமையில் உள்ள குறைபாடா?

ஐ.தே. முன்னணி அரசு நன்றி கெட்டதனமாக எல்ல விதத்திலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும். ஏமாற்றி வருகின்றது. இந்த விடயத்தை தீர்க்கதரிசனமாக அஷ்ரஃப் ஏலவே அறிந்ததாலேயே ஐ.தே. முன்னணியின் சாரதியாக ரணில் இருக்கும் வரை அந்த வாகனத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏறிக் கொள்ளாது என்று உறுதியாக சொன்னார். ஆனால் தற்போதைய தலைவர் ஹக்கீம் அவர்களினால் இதனை இன்னும் சரி வர புரிய முடியாமல் இருப்பதன் மர்மம் என்ன?

கிழக்கு அபிவிருத்தி அமைச்சராக தலைவர் ஹக்கீம் இருக்கும் போது, கிழக்கின் அபிவிருத்திப் பணிகளை முன் எடுப்பதற்கு புலிகளின் ஆலோசனையை பெற வேண்டும் என்று அரசு கூறுகின்றது. இவற்றை பார்க்கும் போது அரசு கிழக்கு அபிவிருத்தி அமைச்சை ஒரு பெட்டிப் பாம்பாக வைத்திருக்கின்றது என்று சொல்வதை தவிர வேறு எப்படி சொல்ல முடியும்.

தலைவர் ஹக்கீம் மேடைகளில் பேசுகின்ற போது, கட்சிப் போராளிகளின் ஆதரவை, எப்படி தந்திரோபாயத்தை பயன்படுத்தியாயினும் பெற்று விடுவார். ஆனால் அடுத்த நாளோ கொழும்பில் இருந்து கொண்டு ஒரு முன்னுக்குப் பின் முரணான அறிக்கையை விட்டு அவர் பெற்றுக் கொண்ட ஆதரவினை சிதைத்து விடுவார். அங்கே என்ன பேசினோம், இங்கே என்ன பேசுகின்றோம் என்பது கூட தலைவருக்கு சில நேரங்களில் தெரியாமல் போய்விடுகின்றது.

கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன் என்று எப்போதாவது பிரதமர் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றாரா? ஆனால் தலைவர் ஹக்கீம் சொல்வார் பிரதமர் உறுதியளித்துள்ளதாக. ஊடகங்கள் மூலம் முஸ்லிம்களை மடையர்களாக்க முனையும் இந்த முயற்சி மடத்தனமானதில்லையா?

இவற்றை எல்லாம் சற்று விரிவாக சிந்தித்தால் தலைவர் அஷ்ரஃப் விட்டுச் சென்ற தலைமைத்துவ வெற்றிடத்தை சமகால அரசியல்வாதி யாராலும் நிரப்ப முடியாது என்பது புலனாகின்றது.

# விபத்தையும் இனச்சாயம் பூசிப் பார்க்கிறார்கள்

அண்மையில் கல்முனை அம்பாறை வீதியில் மல்வத்தைப் பிரதேசத்தில் ஒரு தமிழ் இளைஞர் விபத்தில் சிக்கி இறந்தார். இந்தசெய்தி பத்திரிகையிலும் வெளிவந்தது. ஆனால் பத்திரிகையில் வெளிவராத செய்தி என்னவென்றால் அதனை விபத்தாகக் கருதாமல் முஸ்லிம்கள் வேண்டுமென்றே கொலை செய்துள்ளார்கள் எனக்கூறப்பட்டு அன்று அந்த வழியால் பிரயாணம் செய்த பலர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

**-முஹம்மட் இம்தி.**

ஆட்டோ வண்டிசேதப்படுத்தப்பட்டும், ஒரு பஸ் ஓட்டுனர் தாக்கப்பட்டுமுள்ளார். மட்டுமல்ல கெட்டவார்த்தைகளால் தூசிக்கப்பட்டுமுள்ளனர். இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு முஸ்லிம்கள் பொறுமையாக இருந்து விட்டனர். இனக் கலவரத்தை உண்டு பண்ணி அதில் குளிர்காய பல சக்திகள் இன்னும் முயன்று வருகின்றனர் என்பதையே அந்தச் சம்பவம் சுட்டி நிற்கிறது. அத்தோடு முஸ்லிம்களுக்கு இப்பிரதேசத்தில் பாதுகாப்புமில்லை. எனவே எங்களை பாதுகாக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு ஒரே வழி மல்வத்தை, வளத்தாப்பிட்டி போன்ற பிரதேசங்களில் இருக்கின்ற "செக்-பொயின்ற்"கள் மீண்டும் முன்பிருந்ததுபோல் தமது அலுவல்களை மேற்கொள்ள வேண்டும். சோதனைகளை மேற்கொள்வதோடு ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். இதனை எமது அரசியல்வாதிகளும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

மறுபுறம் இந்த வீதியில் ஒருவர் அடிபட்டுக் கிடக்கிறார் என்றால் யாரும் கண்டுகொள்வதில்லை. ஆஸ்பத்திரிக்குரிய அம்புலன்ஸ் வாகனம் வந்தால் கூட அவர்களும் கவனிப்பதில்லை. இதனால் உடனே எடுத்துச் செல்லப்படாமல் மனித உயிர்கள் மதிப்பில்லாமல் இறக்க நேரிடுகிறது. விபத்துக்களைக் கண்டவர்கள் சாட்சி சொல்ல முன்வருவதில்லை. காரணம் நாங்கள் ஏன் வீணாகப் பிரச்சினையில் மாட்டிக்கொள்ள வேண்டும் என நினைக்கின்றனர். அதிலும் நியாயம் இருக்கின்றது. நம் நாட்டுச் சட்டங்களும் அப்படித்தான் இருக்கிறது. மனித உயிர்கள் மதிக்கப்பட வேண்டும். ஆனால் இன்று மனித உயிர்கள் வெட்டியும், குத்தியும் காவு கொள்ளப்படுகிறது. எந்தப் பிரிவினராக இருந்தாலும் உயிரின் பெறுமதி ஒன்றே. அவற்றைவீணே இனச்சாயம் பூசி பிரச்சினைகளை உண்டுபண்ணி மேலும் பல உயிர்களை பலிக்கடாக்களாக்க எத்தனிக்கக் கூடாது. தப்பு செய்பவர்களை குழுமி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிராமல் தடுத்து நிறுத்த வேண்டும். விட்டுவிட்டு லண்டன் பி.பி.சி.க்கு பேட்டி கொடுக்கக்கூடாது.

# பதில் சொல்!

குந்தியிருந்த பாயை
சுண்டிப் பறித்தது போல்
உன் பூர்வீகம் விட்டு
தூக்கி எறிந்தேனா?
உன் வயலுக்குள் வந்து
கதிரறுத்தேனா?
உழவு மெசினை
அபகரித்துச் சென்றேனா?
காவலாளியை
கட்டி வைத்துதைத்தேனா?
கடலே கதியான உன்னை
கடத்தி வைத்து
காசு பறித்தேனா?
வலை பறித்து, மீன் பறித்து
அனைத்துக்கும் வரி பறித்தேனா?
இறுதியில் 'போட்'டையும் பறித்து
கடலில் தள்ளினேனா?
உன் வர்த்தகத்தையும்
கொழுத்தி சாம்பலாக்கி
பிச்சை யெடுத்தலைய விட்டேனா?

இருள் அடைத்த
நடு நிசியில்
உன் கூடு புகுந்து
தூக்கத்தில்
துவம்சம் செய்தேனா?
உன் நெற்றித் திலகமளித்து
கச்சை உருவி
நையப் புடைத்தேனா?

கோயில் பிரகாரங்களில்
இரத்தம் தெறிக்க
உனை
சுட்டுக் குவித்தேனா?

கீறி உப்பிட்டு,
மிளகாய் பொடி துவி,
கொன்று
டயரிலிட்டெரித்து
சவத்திலும்
உனை வதை செய்தேனா?
திட்டமிட்டே உங்கள்
தலைவர்களை கொன்று
அநாதையாய் அழவிட்டேனா?
ஆயுத ஆசைகாட்டி
நயவஞ்சகமாய்
கூட வைத்துக் குழி பறித்தேனா?
தொலைபேசியில் மிரட்டி
உன் தூக்கம் கெடுத்தேனா?
உனது தனித்துவத்தை
உதறிவிட்டு
உன்னையும் முஸ்லிம் என்றேனா?

ஜென்ம ஜென்மமாய்
கொன்று தொலைத்துப் பழிதீர்க்க
நான்
தமிழா என்ன செய்தேன்?

– கவியோவியன்

# முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்

முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும். பாதிக்கப்பட்டவர்களின் நட்ட ஈட்டுக் கோரிக்கைக்குமான ஆவணக் காப்பகம் செயற்படத் தொடங்கி உள்ளது. 1983ம் ஆண்டுக்குப் பின்னர் அரச, தமிழ் இயக்கப் பயங்கரவாதத்தால் மௌத்தான, காணாமல் போன, அங்கவீனமுற்ற இலங்கை முஸ்லிம்களின் தகவல்களை ஆவணப்படுத்தவும், ஆவணக் காப்பகமையம் ஊடாக நட்ட ஈட்டுக் கோரிக்கையை வென்றெடுக்கவுமான செயற்திட்டம் ஒன்றிற்காக நமது மக்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

தற்போதைய தேசிய இனப்பிரச்சினைச் சூழ்நிலையில் முஸ்லிம்களின் இழப்பு எவ்வித பெறுமதியற்ற ஒன்றாகவும் கவனிப்பாரற்ற நிலை யிலும் காணப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதுவரையில் 1983ம் ஆண்டில் இருந்து "முஸ்லிம்கள்" என்பதற்காக 5000 க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே எமது இழப்பை பெறுமதியுள்ளதாக மாற்றுவதற்கு எமது இழப்பின் விபரத்தை ஆவணப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. இந்த பெரும் சமூக வேலைத்திட்டத்தில் தங்களை இணைத்து கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

எமது சகோதரர்களின் இழப்புக்களில் அக்கறையுள்ள சகல இயக்கங்களும், சமூக சக்திகளும் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை தயார் செய்து எமக்கு அனுப்பி வைக்குமாறு தங்களை சமூகத்தின் சார்பாக அழைக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் குடும்பங்களுக்கு மாதிரி விண்ணப்பப்படிவம் கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். சமூக இயக்கங்கள் தனி மனித சக்திகள் இது தொடர்பாக எம்முடன் இணைந்து செயற்பட முன் வருமாறு வேண்டுகின்றோம்!

தகவல்களை அனுப்ப வேண்டிய முகவரி

**முஸ்லிம் தேச**
**ஆவணக் காப்பகம்**
181/1 மாளிகா கந்த வீதி,
(வைற்பாக்) கொழும்பு 10.

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

குறுநாவல் 11

-என்.ஏ.தீரன்-

### அத்தியாயம் 6

"ஞ்சப்பாரு. சுலுத்தான்! நான் தலைவர சந்திக்கிறல்ல!'
'சந்திக்கிறல்லியா.. ஏன்..?' - சுல்தான் எச்சரிக்கையானான்.

'நான் ஒரு எடமும் வெரமாட்டன்!'
'ஏன்.. என்னயும் கோவமா ஒனக்கு?'
அதெல்லாமில்ல.. எனக்கி புடிக்கல்ல.. உட்று!'
'செரி அப்ப றூம்புல கெட!'
மாமி குழப்பமாக முத்துமுகம்மதை பார்த்தாள். மைமுனாவும் விளங்காமல் பார்த்தாள்.
'சூவுல சிங்கம் இரிக்கா மாமா? புலி இரிக்கா?'
'என்ன முத்தும்மது? ஒரு சாதியா இரிக்காய்? டியே மைம்னா! முத்துமச்சானுட்ட கேளன்டி.. பார்சலக்குடன்டி!'
'மச்சான் சாப்புடுங்க!'
'ல்ல மாமி! பசிக்கல்ல! கோவம் ஒண்டுமில்ல. நான் அங்க ஞ்ச ஒலாத்தல்ல... ஒங்களோடான் இரிப்பன்!'
'அப்ப செரி! பார்சலப் பிரி! சாப்புடுவம்!'

மாமி முடிவாகக் கூறிவிட்டதால் சம்பாஷனை முடிந்தது. சுல்தான் சற்றே ஏமாற்றமடைந்தது போலிருந்தது.

அன்று மாலை, சப்புச் சுல்தான் தலைமையில் மாமி, மைமுனா, முத்துமுகம்மது, யாஸின் ஆகியோர் புறக்கோட்டை வந்தனர்.
முத்துமுகம்மதுக்கு வாகன அடர்த்தியும் திமீர் ஜன நெரிசலும், சிங்களக் குரல்களும் அச்சமூட்டின. சூரியன் கடலில் உதித்த பக்கமே மறுபடி மறைவது ஆச்சரியத் திகிலாக இருந்தது. திசைதப்பி இழுபட்டு நடந்தான். மைமுனாவை ஒட்டியே தொடர்ந்தான்.

நடைபாதை ஆக்கிரமிப்பு வியாபாரிகளில் மோதி மோதி இடறி நடந்தனர். அதற்கிடையிலும் மாமியின் அவசரக் கொள்முதல்கள், அவற்றை சுல்தான் சிங்களப் பேரத்தால் இலகுவாக்கினான். மைமுனா ஒரே ஒரு பர்ர்ர்ரென்று பிரிக்கிற பேர்ஸ் வாங்கினாள். சன இடிபாடுகளிடையே அதனை முத்துமுகம்மதின் கைகளில் வைத்து அழுத்தினாள்.
'மச்சான்..! இத ஒங்களுக்காத்தான் வாங்கின!'
முத்துமுகம்மதுக்குள் உடனடிக்காதல் பெருக்கெடுத்துப் பரவியது. மைமுனாவை மிக அன்புடன் ஆழமாகப் பார்த்தான். நாளை இரவு போய்விடுவாள்.. இனம் தெரியா நாட்டில்.. இனம் புரியா மனிதர்களிடத்தில்... போய் விடுவாள்.

'பேமலாக்கு பாக்காம கெதியா நட முத்தும்மது!' சப்புச்சுல்தானின் அதட்டல் கோபமாக இருந்தது. கொழும்பின் தலைவனான அவனைப் பின் தொடர்வதைத் தவிர முத்துமுகம்மதுக்கு வேறு வழியிருக்கவில்லை. வானொலியில் மட்டுமே கேட்டிருந்த நகைகளின் அரங்கம் செட்டியார் தெருவுக்கு சப்புச்சுல்தான் அழைத்துச்



சென்றபோது மூவரும் பிரமித்து நடந்தனர். எந்த வீதியால் வந்து எங்கே போகிறோம்.. ஒன்றும் புரியவில்லை. நடை.. ஜனம்.. நடை.. வாகனம்... நடை.. தள்ளுவண்டிகள்.. ஜவுளி மாளிகைகள்.. அவசர வியாபாரிகள்... உதட்டுச் சாயப் பெண்கள்.. சிங்களப் பாடல்கள்.. புத்தர்... மாலையிலும் பள்ளிச் சிறுமிகள்.. 'டைட்டஸ்' அங்காடியின் பிரமாண்டம்.. சம்மாங்கோட்டுப் பள்ளிவாயில்.. கறுப்பு பர்தாவில் ஆஜானுபாகுவான மேமன் பெண்கள்.. கடைகள்.. லாபாய்.. லாபாய்.. அரங்யண்ட.. மேம்பாலம்.. கால்களில் கீழே வாகனங்கள் தடதடப்புடன் விரைகிற புகையிரதம்.. மஹஜன சம்பத.. அத.. அத.. லட்சயக்.. கண்ட.. மஹஜன.. உலகச் சந்தை.. இடுப்பு நொந்தது. மினி பஸ்சுகள்.. இளம் காதலர்கள்.. யானைக்கால் நோயாளி..
'இதுதான் கொழும்புல குண்டு வெடிச்ச எடம்!'
உடன் பயமாக இருந்தது. மூன்று மணி நேர நடையில் கொழும்பு அலுத்துவிட்டது. இனியும் தாங்கமுடியாமல், மாமியின் கைத்தூக்குகள் பொருட்களுடன் ஒரு ஓட்டோவில் யூக்சே லொட்ஜ் திரும்பி அறைக்குள் வந்ததும் அப்பாடா என்றிருந்தது.

'தேட்டர்ல ரஜனி, படம் போட்டிரிக்கி. போவமா மாமி?'
'ம்மா.. என்டல்லோ எனக்கேலா! முத்தும்மது நீ போ!'
'போமா தலவரு?'
'ல்ல.. கால் நோகுது. படுக்கப் போறன்'
'நாளைக்கிப் போவம்'

இரவுக் கொத்துரொட்டியின் பின் சப்புச்சுல்தான் மறுபடி வெளியே போயிட்டான். யாஸின் தூங்கிவிட்டான். மாமியும் மைமுனாவும் முத்துமுகம்மதும் தனித்திருந்தனர்.
'மாமி! இவன் சப்பன ஒரமா நம்பாதிங்க. ஏமாத்திப் போட்டுடுவான். இப்பிடித்தான் மொட்டஉதுமான் மாமாட பொஞ்சாதிய கொழும்புக்கு கூட்டி வந்து...'

'எனக்குத் தெரியும் முத்தும்மது!'
'மைம்னா! இவன் கூப்பிட்டா ம்மால்லாம தனிய போயிராத. கவனமா இருந்துக்க.. கடும் வளிசல் அவன்'
'ம்மா ல்லாம நான் போகமாட்டன் மச்சான்' 'செரி செரி! நாளைக்கிப் 'பௌைட்டு' கெதியா படுடி மைம்னா!
மாமி இருந்த இடத்திலேயே சரிந்தாள். முத்துமுகம்மது, எழுந்து பக்கத்து அறைக்கு வந்துவிட்டான். மைமுனா கதவைப் பூட்டுவது கேட்டது. சுல்தான் இன்னும் வரவில்லை. அவனது 'இரவுச் சஞ்சாரம்' பற்றி அதிசயமாக இருந்தது. அவனது கொழும்பு 'ஹீரோயிஸத்' தின் மீது பொறாமையாக இருந்தது. மேசையில் சுல்தானின் 'கோல்ட் லீப்' பக்கட்டும் சில்லறைகளும் கிடந்தன. முத்துமுகம்மது ஒரு சிகரெட்டை கொழுத்திப் புகைத்தான். கட்டிலில் படுத்தான். மைமுனா தந்த பேர்ஸை பார்த்துப் பார்த்து மூடி.. யோசித்து இடுப்பு வலித்தது.. நாளை... இந்நேரம்... மைமுனா...?

எழும்புங்க தலைவரு! தலைவரு!!' சப்புச் சுல்தானின் நக்கல் குரலில் கண் விழித்தான் முத்துமுகம்மது விடிந்திருந்தது. சுல்தான் எப்போது வந்தானோ.. தூங்கினானோ.. குளியலறைக் துவாயுடன் இருந்தான்.
'தலவரு! டீ இரிக்கி குடிங்க! குளிச்சிட்டு வாறன்'

முத்துமுகம்மது எழுந்து, மைமுனாவின் அறைக்கு வந்தான். மைமுனா மட்டும் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். மாமி மகள் ரத்தினமே.. என்ர அச்சடித்த சித்திரமே... 'மாமியக் காணல்ல. எங்க மைம்னா?'
'மச்சான்! ம்மா வாத்துரூமுக்க குளிக்கா!'

குளியல் சத்தம் கேட்டது. யாஸின் தூங்கிக் கொண்டிருந்தான். முத்துமுகம்மது மைமுனாவைப் பார்த்தான். விழிகளின் இரப்பைகள் வீங்கியிருந்தன. இரவெல்லாம் அழுதிருக்கிறாள்... பாவம்! மைமுனாவை நெருங்கினான். சட்டென அவளது கைகளைப் பிடித்தான். மைமுனா திடீர்க் கண்ணீருடன் சிரித்தபடி பார்த்தாள். ஒரே கணத்தில் அவனை இறுகக் கட்டிப் பிடித்தாள். முத்துமுகம்மதும் அவளது முதுகை இறுக்கமாகக் கட்டிக் கொண்டான். சில நொடிகள்.. மைமுனா முத்துமுகம்மதின் கன்னத்தில் மாறிமாறி சில ஆவேச முத்தங்கள் [illegible] சட்டென்று விலகிவிட்டாள்.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டம்பர் 16 முஸ்லிம்களின் தேசிய துக்க தினம்!



## தினகரனுக்கு ஏன் இந்த விசமப் புத்தி?

இலங்கை எங்கும் அஷ்ரஃப் அவர்களின் மரணத்தின் துயரத்தை அனுஷ்டித்துக் கொண்டிருக்கும்போது செப்டம்பர் 16 தினகரனின் முன்பக்கத்தில் வந்த "காட்டூனை" நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். நமது முஸ்லிம் அரசியல் தலைமையின் படுகொலையை திட்டமிட்டு மறைப்பதற்கு எடுத்த முயற்சியினை இந்தக் காட்டூனில் காண்கிறோம்.

மிக மோசமான அரசியல் குள்ளநரித்தனம் கொண்ட இந்தக் காட்டூன் தொடர்பாக பேரியல் உருப்படியாக ஏதாவது செய்ய முன்வருவாரா?

ஏ. கலீலுர் ரஹ்மான்
கல்முனை.

**இது எப்படியிருக்கு!**



★ தலைவர் அஷ்ரஃப் மறைந்து இன்றுடன் மூன்றாண்டுகள் ஆகிவிட்டது! ஆனால் அதிலுள்ள மர்மம் தான் வெளிவரவில்லை!!

★ அதிலை ஒன்றும் மர்மம் இல்லை. அவர் விபத்திலைதான் மறைந்தார் என்டு மனைவியாரே சொல்லேக்க வேறை யாருக்குத்தான் சந்தேகம் வரும்!!

## அன்பார்ந்த மக்களே!

இன்று என்பது - இலங்கையின் சமூக அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டமாகும். இக்காலகட்டம் இலங்கையில் வாழும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் மட்டுமே முக்கியமான காலகட்டமல்ல. இலங்கையில் வாழும் முஸ்லிம்களுக்கும் மிக முக்கியமான காலகட்டமே இது. இன்னமும் இதனை அழுத்திச் சொல்வதானால் இலங்கையில் வாழும் முஸ்லிம்களுக்கு இக்கால கட்டம் மிகமிக முக்கியமான காலகட்டமாகும்.

இம்முக்கிய காலமானது. மிக வேகமாக அதனுடைய பழைய பாதை, சிந்தனை முறைமை, செயற்பாடுகள், அணுகு முறைகள் என்பவற்றிலிருந்து மாறி, புதிய பாதைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. இந்த மாற்றமானது உலக நெருக்கடிகள், உள்நாட்டு நெருக்கடிகள், மக்களின் அபிலாசைகள், தேவைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே நடந்தேறி வருகின்றன. இத்தகைய மாறும் காலகட்டத்தில்தான் வரலாறு இலங்கை முஸ்லிம்களாகிய எம்மையும் கொண்டு வந்து நிறுத்தி உள்ளது.

இந்த மாற்றங்களை எதிர்கொள்வதற்கு நாம் தயாராகி விட்டோமா? இல்லையென்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் முன்பு இருந்த நிலையில் இப்போது இல்லை என்பதை மட்டுமே நாம் தினமும் உணர்ந்து வருகிறோம். நமக்கு வெளியில் நடை பெறும் இந்த புற மாற்றங்களைப்பற்றி பேசிப்பேசியே காலத்தைக் கடத்தி வருகிறோம். இவைகளைப் பார்த்து; ஒன்று அதிசயப்பட்டு வியந்து மூக்கின் மேல் விரலை வைக்கிறோம் அல்லது அஞ்சி ஒதுங்கி ஒடுங்கிப் போய்விடுகிறோம்.

நமக்கு வெளியில் நடக்கும் இந்த மாற்றங்களானது நம்மை மிக மோசமாக அடக்குகின்றன. நம்மீது இனப்படுகொலைகளை கட்டவிழ்த்து விடுகிறது. நமது தாயகத்திலிருந்து நம்மை இனச் சுத்திகரிப்புச் செய்கிறது. நமது மண்ணை திட்டமிட்டு அபகரிக்கிறது. நமது பொருளாதாரத்தை பலவீனப்படுத்துகிறது. நம்மை பாதுகாப்பு அற்றவர்களாக்குகிறது. நமது தனித்துவத்தையும் அடையாளங்களையும் சிதைத்து நம்மை வந்தான் வரத்தான் ஆக்குகிறது. வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம், மூதூர், வாழைச்சேனை, மாவனெல்லை, மாளிகாவத்தை என நம்மீது எதிர் வினையாற்றுகின்றது. நம்மை அடிக்கிறது. நாம் அழுதுகொண்டே நிற்கிறோம்!

நமது அரசியல் தலைமைகளோ என்ன செய்வதென்று தெரியாமல் திணறிப்போய் நிற்கின்றன. தங்களின் மண்ணாசை, பொன்னாசை, பதவி ஆசைகள் அனைத்தும் கனவாகிப் போய்விடுமா? எனச் சிந்திக்க தலைப்பட்டு நிற்கின்றன. பதவியும் பட்டமுமா? - சமூகமும் மக்களின் உணர்வுமா? என்கின்ற வேள்வித் தீயில் எரிந்துகொண்டிருக்கின்றன. இந்த உள்வெக்கை, புறவெக்கை தாங்காமல்தான் அரசியல் தலைமைகளின் பத்திரிகை அறிக்கைகளும் மேடைப் பேச்சுக்களும் தட்டுத் தடுமாறுகின்றன. இன்றைய அச்சுறுத்தலிலிருந்து முஸ்லிம்களைக் காப்பதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்றால் முழி பிதுங்கி மாயத் தோற்றம் காட்டுகின்றன.

இந்தக் கையறு நிலைமை நமது சமூக அரசியல் அரங்கில் நீடித்து நிற்கும் கதையாகவே உள்ளது. மிக வெளிப்படையாக நம்மை அச்சுறுத்தி அடக்கும் செயற்பாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கும், புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட கணத்திலிருந்தே தொடங்கி விட்டன. குறிப்பாக அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான 2002 பெப்ரவரி 22 ஆம் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடாக இவை மாறிவிட்டன.

நமது சொந்தத் தாயகத்தில் முஸ்லிம்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கி, நமது மக்களின் அரசியல், சமூகப், பொருளாதார, பண்பாட்டு உரிமைகளை மிக மோசமாக புலிகள் நசுக்குவதை அனுமதிக்கும் வகையில் நிலைமைகள் மாறிவிட்டன. இலங்கை அரசாங்கமும் அதனுடைய படைகளும் முஸ்லிம்களை பாதுகாப்பதிலிருந்து தவறிவிட்டன. முற்று முழுதாக கைகள் கட்டப்பட்டு முடக்கி வைக்கப்பட்டுள்ளன. வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் முஸ்லிம்களின் நிலையும் மிக மோசமான நெருக்கடிக்குத் தள்ளப்பட்டுவிட்டது. சிங்கள இனவாதிகள் முஸ்லிம்களை பொருளாதார, கல்வி, கலாசாரத் துறைகளிலிருந்து அகற்றுவதற்கான பிரச்சார, செயல் யுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதில் "சிங்கள, தமிழ் ஆளும் குழுமங்கள் இணைந்து இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களை பலவீனப்படுத்தி, ஓரங்கட்டுவதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளதை இப்போது நாம் கண்டு வருகிறோம்.

### மர்ஹூம் அஷ்ரஃபின் மரணமும் முஸ்லிம் சமூகத்தின் இருப்பும்!

மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் மறைவு வெறும் விபத்தன்று. அது திட்ட மிட்டு ஏற்படுத்தப்பட்ட சதி என்பதில் நாம் அனைவருமே தெளிவாக உள்ளோம். முஸ்லிம் சமூகத்தின் பலத்தை சிதைப்பதற்கு முதலில் அதன் அரசியல் பலத்தை அழிக்க வேண்டும் என்ற நமது சமூக எதிரிகளின் நீண்டநாள் இலக்கில் நாம் நமது அரசியல் தலைவனைப் பறி கொடுத்தோம்! நமது அரசியல் ஆணி வேர் அறுந்தது. தேசிய அரசியலில் நாம் ஆட்டம் கண்டோம். நாம் எதிர்பார்த்திராத வகையில் நடந்துவிட்ட எதிரிகளின் இந்த மிகப் பெரும் சதியால் நமது ஒட்டு மொத்த சமுதாயமே ஆட்டம் கண்டது. இதன் விளைவை நாம் தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகிறோம்.

மர்ஹூம் அஷ்ரஃப் என்ற தனிமனிதர் நமக்கு முக்கியமன்று; அவர் உயிருடன் இருந்த காலத்தில் அவரை எதிர்த்தோர்; அவரது அரசியல் வழியை நிராகரித்தோர் பலர் நமக்குள் இருந்தனர். பலம், பலவீனங்களுக்குட்பட்டது அவரது தலைமை என்பதை நாமனைவரும் அறிவோம். ஆனால் நமது சமூக எதிரிகளைப் பொறுத்தவரையில் முஸ்லிம் சமூகத்திற்கு குரல் கொடுப்பவராகவும், அதன் அரசியல் சமூக பொருளாதார பண்பாட்டுக் காவலனாகவும் அவர் இருந்தார். இதுவே நாம் விரும்பிய, விரும்பாத உண்மையுமாகும். அவரது மரணம் நமது மக்களுக்காகவே சம்பவிக்கப்பட்டது. அதற்கு மிகச் சிறந்த உதாரணம் அன்னார் மரணித்த கணத்திலிருந்து கேட்கப் பார்க்க ஆளில்லாத சமூகம் போல் நாம் தொடர்ந்தும் வஞ்சிக்கப்பட்டு வருகிறோம் என்பது.

நமது அரசியல் தலைமைகள் என இன்று அரியாசனங்களில் வீற்றிருக்கும் யாருமே. அஷ்ரஃப் அவர்களைப் போல் நமது மக்களுக்கு குரல் எழுப்பவில்லை. முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவரது மரணம் சமூகத் தியாகத்துடன் பின்னிப் பிணைந்ததாகும். புலிகளுக்கும், சிங்கள ஆளும் தரப்புக்கும் அவர் சிம்மசொப்பனமாக இருந்தார். வடக்கு கிழக்கில் புலிகளின் ஏகோபித்த அதிகாரத்தை நிலை நிறுத்துவதில் பெரும் தடையாக அஷ்ரஃப் அவர்களின் ஆளுமை இருந்தது. சிங்கள ஆளும் இனவாதக் குழுமத்திற்கு முஸ்லிம்களைக் கறிவேப்பிலையாகக் கையாள்வதற்கு அஷ்ரஃபின் தலைமை பெரும் தடையாக இருந்தது.

வடக்கு கிழக்கில் புலிகள் சிங்கள அரசாங்கத்துடன் "அரசியல் அதிகாரம்" தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபடும்போது அஷ்ரஃப் அவர்களின் இருப்பு தங்களது தனித் தமிழீழக் கனவுக்கு பெரும் அரசியல் தடை என்பதை புலிகள் நன்குணர்ந்திருந்தனர். மறுபுறத்தில் சிங்கள ஆளும் குழுமத்தின் பெரும் அரசியல் நிறுவனமான ஐக்கிய தேசியக் கட்சியோ அஷ்ரஃப் அவர்கள் உயிருடன் இருக்கும்வரை இலங்கையின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவது சாத்தியமில்லை என்பதை நன்கு உணர்ந்திருந்தது. இவ்விரு ஆளும் அதிகார சக்திகளின் பிரதான இலக்கு முஸ்லிம் சமூகமும் அதன் பலம் பொருந்திய அரசியல் தலைமையான அஷ்ரஃபும் ஆகும்.

அந்த இலக்கு 2000 செப்டம்பர் 16ஆம் திகதி எட்டப்பட்டது. நமது அரசியல் தலைமை மிகப்பெரும் சதியின் ஊடாக அழித்தொழிக்கப்பட்டது. இலங்கை வாழ் முஸ்லிம்கள் பாதுகாப்பற்ற சமூகமாக நாம் மாறிவிட்டோம் என்பதை அவரின் மரணத்திலிருந்து உணரத் தலைப்பட்டு விட்டனர். அவரது மரணச் செய்தி நமது மக்களுக்கு பேரிடியாக வந்தபோது நமது சமூக எதிரிகளுக்கு அந்த மரணம் மிக உவப்பான செய்தியாக இருந்தது. அவர்கள் ஆனந்தக் களிப்பில் நீந்தி விளையாடினர். நமது மக்களோ மீளமுடியாக் கண்ணீர்க் கடலில் தத்தளித்து நின்றனர். அந்த மரணத்தின் ஊடாக எதிரிகள் தற்காலிக வெற்றியைப் பெற்று விட்டனர்.



மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் மரணம் சம்பவித்து மூன்று வருடங்கள் கழிந்து விட்டன. இந்த மரணத்திற்கான காரணம் இன்னும் கண்டறியப்படாமல் மிகத்திட்டமிட்டு மூடி மறைக்கப்பட்டு வருகிறது. இந்த மூடிமறைப்பிற்கு நமது அரசியல் தலைமைகள் திரை விரித்து பக்கத் துணை நிற்கின்றன. நமது மக்களின் மீதான அடக்கு முறைகளுக்கு துணை போகின்றன. "இலங்கை முஸ்லிம்கள் ஏன் மோசமாக நசுக்கப்படுகின்றனர்" என்ற கேள்விக்கு ஆதிக்க சக்திகளிடமோ நமது அரசியல் தலைமைகளிடமோ சரியான பதிலும் தீர்வும் இதுவரை இல்லை. இந்த மௌனத்திரையை மக்களாகிய நாமே இப்போது அணி திரண்டு தகர்க்க வேண்டியவர்களாக உள்ளோம். நமது சமூகத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள அடிமை விலங்கை உடைப்பது நமது அனைவரினதும் கடமையாகும். இதற்கு நமது சமூக அரங்கில், மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிறது.

இந்த வகையில் நம்மைச் சூழ்ந்துள்ள அடக்குமுறையும் தலைவர் அஷ்ரஃபின் மரணமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாகும். தலைவர் அஷ்ரஃபின் மரணம் மீதான மர்மம் கண்டறியப்படுவதன் ஊடாக நமது சமூகத்தை அழிப்பதற்கு எதிரிகள் கூட்டுச் சேர்ந்து தீட்டிய சதித்திட்டத்தை அம்பலத்திற்கு கொண்டுவருதல் முஸ்லிம் மக்களாகிய அனைவரினதும் பொறுப்பாகும் என 15, செப்டம்பரில் முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பினரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அச்சாறு

## எம்.எச்.எம். அஷ்ரஃப் மூன்றாண்டாகியும்...

செப்டம்பர் 16ஆம் திகதியை மு.கா. ஸ்தாபகத் தலைவரின் அகால மரணத்தின் மூன்றாண்டு தினமாக, ஒவ்வொரு அரசியல்வாதிகளும், அவரவர் அரசியல் அபிலாஷைகள் சார்ந்த தினமாக பிரகடனப்படுத்தி அனுஷ்டித்ததை அவதானிக்க முடிந்தது. ஒரு கட்சித் தலைவரின் மரணத்தோடு, அவரின் சிஷ்யர்கள், தொண்டர்கள், மனைவி, நண்பர்கள் என கூத்தாடிக் கொண்டிருக்கும் நிலைமை நம் முஸ்லிம் அரசியலில்தான் நிகழ்ந்திருக்கிறது! மு.கா. வின் தனித்துவம் அஷ்ரப் என்ற தனிநபர் ஆளுமையில் மாத்திரம் இருந்தது என்பதும் உண்மையில் நமது அரசியல் துயரம்! இப்போதும் என்ன நிகழ்கிறது? அந்தத் தனிநபரின் ஆளுமைதான், இன்றும், பிளவுபட்டிருக்கும் கட்சி அரசியலை நடத்துகிறது. முஸ்லிம்களை மையப்படுத்தியிருந்த மு.கா. அரசியல், அஷ்ரபை மையப்படுத்தி பிளவுண்டு போயிருக்கிறது!

மூன்றாண்டுகளாகியும் துலக்கப்படாத மரண மர்மம் மக்களுக்கு இன்னும் மர்மம்தான்! பத்திரிகைகள் பகிரங்கமாக சில "மர்ம முடிச்சுக்களை" அவிழ்த்திருந்தும் இன்னும் 'முக்கியஸ்தர்கள்' அதுபற்றி மௌனமாயிருப்பதும் மர்மம்தான்! 4.50 சத முத்திரை வெளியிட ஒரு தரப்பும், முத்திரை யாருக்குத் தேவையென இன்னொரு தரப்பும், சத்தம் ஒத மற்றத்தரப்பும் முண்டியடிக்க, மக்களோ செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். ஆக, ஒன்றில் மக்கள் அபிலாஷைகள் அரசியலாக்கப்பட வேண்டும், அல்லது தற்போதைய அரசியல்வாதிகள் மக்களாக வேண்டும்!

### காற்றுச் சுமந்து வரும் கனவுகள் - சிறுகுறிப்பு.

காற்றுச் சுமந்துவரும் கனவுகள் இசைநாடா/இசைத்தட்டு வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை (12.09.2003) கொழும்பு ஸாஹிராவில் நடைபெற்றது. உத்தியோக பூர்வ அழைப்பில்லாது, நீண்டு பயணித்துக் கலந்து கொள்ளும் ஆர்வத்தைத் தந்திருந்தது. அதில் ஈடுபட்டுழைத்த இளைஞர்களின் திறமை, ஆளுமைபற்றிய நண்பர்களின் கதைகள், உண்மைதான். சத்தமின்றி, ஆழமான நதிகள் அமைதியாக ஓடுவதுபோன்று, சமூக அசைவியக்கத்தின் வேறொரு பரிணாமத்தைக் காட்டியிருக்கிறார்கள் இந்த இளைஞர்கள்.

**எழுதுவது... லைலா அஷ்ராவி**

கல்வியறிவை, கலையை, அறிவியலை இஸ்லாமியப்படுத்தல் என்கின்ற சர்வதேச இஸ்லாமிய/ முஸ்லிம் உலக செல்நெறியின் ஓர் அங்கமாக இவ்வெளியீட்டு முயற்சி இடம்பெற்றிருக்கிறது. இஸ்லாமிய மற்றும் அராபிய இசைப் பாரம்பரியத்துடனான இனிமையான எட்டுப்பாடல்களைக் கொண்டிருக்கிறது. இவ் இசைப்பேழை வெளியீட்டு நிகழ்விற்கும் சனத்திரளான இளைஞர், யுவதிகள் இருந்ததும் கலை, இலக்கிய ஆர்வலர்கள், உண்மை அபிமானிகளை புறமொதுக்கும் நிகழ்வாக இது இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இப்போது எந்த வெளியீட்டு நிகழ்வும் அதன் உழைப்பின் உன்னதங்கள் எவ்வளவு மெச்சத்தக்கதாக இருப்பினும் இறுதியில் அரசியல், பொருளாதார பொறிக்குள் சிக்கிப் போவது வழமையாகிவிட்டது. அரசியல் பொறி, ஏதோ ஒரு கட்சியின்தலைவராக இருக்கும். பொருளாதரப் பொறியை ஏகமனதாக இப்போது வைத்திருப்பவர் ஹாஷிம் உமர்.

இந்நிகழ்வும் ரவூப் ஹக்கீமையும், ஹாஷிம் உமரையும் பிரதானப்படுத்தியிருந்தது (அதுவும் என்போன்றோருக்கு இறுதி நாளில் தான் தெரியும்) ஜீரணிக்க முடியாத ஒன்று. அதுவும், அரசியல்வாதிக்காக முக்கால் மணி நேரம் காத்திருந்து, அவரில்லாமலேயே நிகழ்வு தொடங்கி முடிந்தது. வெட்கத்திற்குரியதும், படிப்பினைக்குரியதுமாகும்! எந்த நியாயங்கள் சொல்லப்பட்டாலும், இந்த இளம் தலைமுறையினரது உன்னதமான உழைப்பு இப்படி புரண்டு போனது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது; சமூகரீதியில் எந்த எதிர்பார்ப்பிற்கும் இட்டுச் செல்லாதது. பாடல் எழுதிய, ஈடுபாடுகாட்டியுழைத்த தலைமுறை கண்டுகொள்ளப்படாதிருக்க, யார் யாரோவெல்லாம் மேடையை அலங்கரித்திருப்பதை பார்த்திருக்க என் போன்றோருக்கு முடியவில்லை. என் நண்பர் ஒருவர் நன்றாகவே சொன்னார்... "நம்மட ஆட்கள், புரியாணி ஆக்கி சிரட்டையில சாப்பிடுகிற ஆட்கள்" என்று. உண்மைதான்.

வெளியிட்ட நண்பர்களே, உங்கள் அழைப்பிதலுக்கும், நிகழ்வுக்கும் முந்தியது வரையிலான உங்கள் உன்னதமான உழைப்பினை மனமுவந்து மெச்சுகிறேன். நீங்கள் தொடர்ந்தும் இதுபோன்ற முயற்சியில் ஈடுபட வேண்டும்.

முஸ்லிம் குரல் வாசகர்களே, இந் நிகழ்வின் அரசியலை, விமர்சனத்தை விடுத்து உங்கள் ஒவ்வொருவர் வீடுகளிலும் இந்த ஒளித்தட்டு/ஒலிநாடா இருக்க வேண்டுமென விரும்புகிறேன். ஏனென்றால், நாம் எமது தனித்துவ கலை, கலாசாரங்களை இந்த முறைமையில்தான் வெளிப்படுத்திச் செல்ல வேண்டியிருக்கிறது.

**நமது விழிப்புணர்வூட்டி**
## முஸ்லிம் குரல்

உண்மையை உரைக்கும் 'முஸ்லிம் குரல்' எம் சமுகத்தினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு வடக்கு கிழக்கை அடக்கியாள முற்படும் "ஆயுதம் தாங்கிய ஆதிக்க சக்திகளின்" அட்டூழியங்களை உலகறியச் செய்ய வேண்டும்.

மர்ஹூம் தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்கான கட்டுரைகள் பிரமாதம். அவர் இல்லாத நிலை இப்போதுதான் உணர முடிகின்றது. அவர் போல் ஓர் தலைவர் கிடைப்பது சந்தேகமே. அவர் ஸஹீதுக்கு காரணமான சதிகளை சந்திக்குக் கொண்டுவர வேண்டும்.

ஏ.எஸ்.எம். ஜஹாங்கிர்
வெலிமடை.

**முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்**

தொடர்புக்கு

விளம்பர முகாமையாளர் - முஸ்லிம் குரல்

181/1 Maligakanda Road
(White Park) - Colombo 10 - Phone : 0777 389127

**வாசகர் கவனத்திற்கு**

முஸ்லிம் குரலின்
1-15 இதழ்கள் தேவைப்படுவோர்,
ரூபா. 200/- க்கான காசுக்கட்டளை/
காசோலை அனுப்பி
பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ் முன்னுள்ள சவால்கள்...!

எதிர்வரும் செப்டம்பர் 16ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 23ஆம் திகதி வரைக்குமான 37 நாட்களும் மாமனிதர் மாஹூம் எம்.எச்.எம். அஸ்ர.ஃ.ப் அவர்களின் நினைவு கூறப்பட வேண்டிய நாட்களென மு.கா. கட்சி பிரகடனப்படுத்தியுள்ளது. அவதிக்குள்ளானதொரு சமுகத்தின் அரசியல் நிலைமையை அடையாளப்படுத்தி இலங்கையில் ஆட்சியினை நிர்ணயிக்க வல்ல சமுகமென நிலைநிறுத்திச் சென்ற முஸ்லிம்களின் கிடைப்பதற்கரிய தலைமையான மர்ஹூம் அஸ்ர.ஃ.ப் அவர்கள் அகால மரணமடைந்த மூன்றாவது ஆண்டுடன் அவரது பிறந்த நாள் வரைக்குமான மேற்படியான காலத்தில் மு.கா. கட்சி முஸ்லிம்களுக்காக குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்காக சாதிக்க வேண்டிய பொறுப்பு மிகைத்த பணிகளும் ஏராளம். அவைகள் முஸ்லிம் சமுகத்தினரால் எதிர்பார்க்கப்படுகின்றதென்பதே யதார்த்தம்.

இம்மாத இறுதிக்குள்ளாக விடுதலைப் புலிகள் பாரீஸில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைக்கானதும் தமது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய கூடியதுமான ஆலோசனைகளடங்கிய ஆவணம் அரசிடம் கையளிக்கப்படவுள்ளது. மர்ஹூம் அஸ்ர.ஃ.ப் அவர்களின் திட்டமிடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மரணத்தின் பூர்வாங்க விசாரணை. கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காக அரசின் அறிவித்தலுடன் புதிதாக பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்வதற்காக பேச்சுவார்த்தையுனூடாக மேற்கொள்ளப்பட்ட தீர்வான 550 பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை என்பவைகள் மு.கா. கட்சி முன்னுள்ள பலத்த சவாலாகவே அவதானிக்க முடிகின்றது.

மர்ஹூம் அஸ்ர.ஃ.ப் அவர்களின் அகால மரணம் தொடர்பாக கடந்த 2001.08.10 ஆம் திகதியன்று கல்முனை நகரசபை மண்டபத்திற்கு முன்னால் நடைபெற்ற 'மக்கள் நீதிமன்றத்திற்கு முன் முறையீடு' என்ற நிகழ்வில் உரையாற்றிய இன்றைய மு.கா. தேசியத் தலைவர் அவர்களின் உணர்ச்சிபூர்வமான ஆக்ரோசம் நிறைந்த உரையையும். 2000.10.04ஆம் திகதி சாய்ந்தமருது ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் அன்றைய எதிர்க்கட்சி தலைவரும் இன்றைய மாண்புமிகு பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஆற்றிய முஸ்லிம்களின் மீது அதிகளவு சரிசனை மிகைத்த அந்த உரையையும் மீண்டுமொரு தடவையாக முஸ்லிம்கள் நினைவு படுத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

*மறைந்த முஸ்லிம்களின் தலைமையான மர்ஹூம் அஸ்ர.ஃ.ப் அவர்களின் மரணம் தொடர்பான பூர்வாங்க விசாரணை என்பதன் விளக்கமானது குழப்பத்திற்காக இல்லை. அது பல குழப்பங்களைத் தெளிவுபடுத்துவதற்காகவே.* இவ்வாறான முஸ்லிம்களின் கோரிக்கையூடாக பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

அ. ஏற்பட்டது விபத்தா அல்லது சதியா என்ற தெளிவைக்காண.

ஆ. சதி முயற்சியானால் சம்பந்தப்பட்டவர்களும் அதற்கு ஆதரவாக செயற்பட்டவர்களையும் அடையாளப்படுத்திட.

இ. குற்றம் புரிந்தவர்கள் எந்தச் சூழ்நிலைமையிலும் தப்பித்துக் கொள்ளவே முடியாது என்பதை சகலரும் உணர்ந்து கொள்ள.

ஈ. மீண்டுமொரு தடவை முஸ்லிம்களின் தலைமைக்கு எதிரான சதி முயற்சிகளை முறியடித்து பாதுகாத்திட.

உ. முஸ்லிம்களின் மீதும் முஸ்லிம் தலைமைகளின் மீதும் ஏனைய அரசியற் கட்சிகளின் மனநிலைப்போக்குகள் எவ்வாறுள்ளதென்பதை அடையாளப்படுத்திட.

ஊ. இச்சதி முயற்சியில் முனாபீக்தனமானவர்கள் உடன் செயற்பட்டிருக்கின்றார்களா என்பதை முஸ்லிம்கள் தெளிவாகவே அடையாளப்படுத்திட.

அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகள் காரணமாக

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான செயற்றிட்டங்களின் தீர்வுகளை அவதானிக்கும் போது முஸ்லிம்களின் சந்தேகப் பார்வைகள் ஆங்காங்கே வடக்கு கிழக்கு மாகாணத்தில் யுத்தம் ஏற்பட்ட காலத்தில் முஸ்லிம்கள் அனுபவித்த உயிர் இழப்புக்களைவிட குறுகிய சமாதான காலத்தில் அதிகம். தவிர முஸ்லிம் குழுவினரென தனியாக அடையாளப்படுத்தப்பட்டு நேரடி விரோதியாக ஒரு சாராரின் மறைமுக தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள தலையுதிர் காலம். யுத்தகாலத்தில் உறுதியான பாதுகாப்பு நிலைப்பாட்டினால் தேசமெங்கும் சுதந்திரமாகவே பிரயாணப்பட்ட அல்லது தொழில் முயற்சிகளில் ஈடுபட்ட முஸ்லிம்கள். பாதுகாப்பு நிலைகள் ஏதும் தளர்த்தப்படாத அல்லது குறைக்கப்படாத சமாதானக் காலத்தில் எதிர்நோக்கும் சிக்கல் நிலைமைகளோ ஏராளம். இழப்புக்களின் ஓர் எல்லையின் பின்னர் உணர்ச்சிகளுடன் ஆக்ரோசமாக உரிமைக் குரல் கொடுப்பதென்பது பொதுவான இயல்பு.

அதன் அடிப்படையில் மு.கா. மேற்கொண்ட சமுகத்திற்கான முயற்சியின் காரணத்தினால் அரசின் அதிமுக்கியஸ்தர்களுடன், பாதுகாப்பு தரத்துடனான முக்கியஸ்தர்களும் இணைந்து பேச்சுவார்த்தையின் முடிவில் உடனடித் தீர்வாக கிழக்கு மாகாண பாதுகாப்பு பலப்படுத்தல் என்ற ஏகமனதான தீர்மானத்திற்கு அமைவாக அரச பொலிஸ் படைசேவைக்கென 550 உத்தியோகத்தர்களை நியமிப்பது என்று முடிவாக்கப்பட்டு இதற்கான நேர்முகப்பரீட்சைகளும் நிறைவுபெற்றுள்ள நிலையின் பின்னர் தமிழர் கூட்டமைப்பு பா. உறுப்பினர்களின் ஆட்சேபத்திற்கு அமைவாக துரித செயற்பாடு ஸ்தம்பிதம் அடைந்திருப்பதும். அரசின் நழுவல் போக்கை தெளிவாக்கிக் கொண்டிருப்பதும் யாரின் நலனை அடிப்படையாகக்கொண்டு காரியங்கள் நகர்த்தப்படுகின்றதென்பதில் முஸ்லிம்களின் அவதானம்மிகவும் அவசியம்.



கிழக்குப் பாதுகாப்பு தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் அரசாங்கமே நேரடியாகப்பேசி ஒரு தீர்க்கமான முடிவெடுத்ததன் பின்னர் மீண்டுமொரு பேச்சுவார்த்தை கலந்துரையாடல் என்பதும். இவ்விடயத்தில் முஸ்லிம்களும் தமிழ் தரப்பினரும் கலந்துபேசி ஒரு முடிவைக்காணல் வேண்டுமென்று அரசு பந்தை நகர்த்தி தப்பித்துக்கொள்வதும் அவதானிக்கப்பட வேண்டியது.

இவ்விடயத்தில் புதிதாக பொலிஸ் சேவைக்கு 550 உத்தியொகத்தர்களை இணைத்துக் கொள்வது அவசியம் என்பது பற்றியோ அல்லது அதுதான் இதற்கான நியாயமான தீர்வென்பதோ எமது கருத்தல்ல. இந்த நாட்டின் அச்சுறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பாக அரசினால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களில் தமிழ் தரப்பினர் தலையீடுகளை மேற்கொள்வதையும். அரசானது முஸ்லிம்களின் விடயத்தில் காண்பிக்கும் தளர்வு நிலைப் போக்கினையும் தவிர்த்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே அவதானிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பாக செப்டம்பர் 8 ஆம் திகதி பிரதமர் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலில் தீர்க்கமான முடிவுகளெதுவும் மேற்கொள்ளாது மீண்டுமொரு தடவையாக பிரதமர் தலைமையில் கலந்துபேசி தீர்வைக்காண்பதாக காலம் கடத்தப்பட்டுள்ளது. தவிர இவ்விடயத்தில் தமிழ் தரப்பினருடன் கலந்து ஒரு முடிவுக்கு வரல் வேண்டுமென்ற அரசாங்கத்தின் கருத்தானது சிந்திக்கப்பட வேண்டியதாகும். தமிழ் கூட்டமைப்பு பிரதிநிதிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளா என்ற ஐயப்பாடு உள்ளது. காரணம் அவர்களே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என பிரச்சாரம் செய்கின்றனர். இவ்விடயத்தில் உண்மையில் பொறுப்பு சொல்ல வேண்டியவர்கள் எங்கோ ஓரிடத்தில் காணப்படும்போது மற்றொருவரிடம் பேச்சுவார்த்தையை நடத்தவதென்பது யாரைத் திருப்திப்படத்திக் கொள்வதற்காக?

அடுத்தகட்ட சமாதான பேச்சுவார்த்தைக்கான தமது ஆலோசனைகளடங்கிய ஆவணங்கள் இம்மாதக் கடைசியில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக தகவல் குறிப்பிட்ட அவ்வாலோசனையின் என்ன விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளதென்பது மிகவும் ரகசியமாகப் பேணப்பட்டு வந்தாலும், கசிந்துள்ள தகவல்கள் மற்றும் புலிகளின் அதிமுக்கியஸ்தர்களின் கருத்துக்கள் என்பவைகளை ஆழமாக அவதானிக்கும் போது வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்களின் விடயம் என்பது அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு பொருத்தப்பாடாக இருக்கப் போவதில்லை என்பது அனுமானிக்கக்கூடியதாக உள்ளது. சர்வதெச சட்டவல்லுனர்களுடன் கலந்தாலோசிக்கவென பாரீஸ் சென்றிருந்த குழுவின் அரசியல் பேச்சுவார்த்தை முக்கியஸ்தர்கள் இருவர் முஸ்லிம்கள் தொடர்பாக மிகவும் அழுத்தமாகவே தெரிவித்துள்ள மறுப்பை சர்வதெச உலகம் அறிந்து கொண்டுள்ளது. எனவே நிரந்தர சமாதானவிடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பரீஸ் ஆவணம் முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தக்கூடிய வல்லமை கொண்டதாக காணப்படுமா என்பது சந்தேகமாகவேயுள்ளது.

ஒரு விடயம் மாத்திரம் தெளிவாகவுள்ளது. சர்வதேச மட்டத்தினரின் கவனத்தை ஈர்த்துள்ள இலங்கை அரசின் சமாதான முன்னெடுப்புகள் தமக்குச் சார்பான வெற்றியைத்தரக்கூடியதாக நிதானப்படுத்தப்பட்டுள்ளதும். சர்வதேச மட்டத்தில் சிறப்பானதொரு இடத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதையும் அடிப்படையாகக் கொண்ட நகர்வாகவே உணரக்கூடியதாகவுள்ளது. அரச தரப்பினரால் தெரியப்படுத்தப்பட்டுள்ள ஐக்கியம். இறைமையைப் பாதுகாத்தல் என்ற நோக்கில் அவதானித்து. சில விட்டுக் கொடுப்புக்களுடன் எப்படியாவது தீர்வாக்கிடல் வேண்டுமென்ற முனைப்பில் அரசு இவ்விடயத்தில் முஸ்லிம்களின் அபிலாசைகள் எதிர்பார்ப்புகள் என்பவைகளுக்கு போதியளவு முக்கியத்துவம் வழங்கப்படாத நிலைமையில் சமாதான முன்னெடுப்பானது மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியதே என்ற உறுதியான எண்ணப்பாடுகளை முஸ்லிம்கள் அரச தரப்பினரிடமிருந்து அவ்வளவாக எதிர்பார்க்க முடியாது.

மீண்டுமொரு பேச்சுவார்த்தைக்கான காலம் கனியுமானால் முஸ்லிம்களின் தனிதரப்பு அல்லது சமமான அந்தஸ்த்து என்பவைகள் கேள்விக்குறியாகும் தோற்றலில். முஸ்லிம் தலைமைகளே இது யுத்தத்தில் நேரடியாகவே பங்கு கொண்ட இரு தரப்பினர்களின் தொடர் யுத்த நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தை என்றும். நிரந்தர சமாதானத்திற்கானதும். அரசியல் நிர்ணயத்திற்கானதுமான ஆக்கபூர்வமான அடுத்தகட்ட பேச்சுவார்த்தையில் வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கியதான தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்படும். அப்போது முஸ்லிம்களின் தலைமை தனித்தரப்பாக கலந்து கொள்ளும். அதற்கான உத்தரவாதம் எமக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதாக முஸ்லிம் தலைமைகளே தமது இயலாமையை மறைத்து

அ. முஹம்மது அனஸ்
திருகோணமலை.

அறிக்கைகளை வெளியிடலாம். எதுவுமே ஆச்சரியப்படுவதற்கில்லை.

இத்தறுவாயில் அம்பாறை மாவட்ட மு.கா. பாராளுமன்ற உறுப்பினரொருவர் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கான உரிய இடம் உத்தரவாதப்படுத்தாவிட்டால் கிழக்கு மாகாண 17 முஸ்லிம் பா. உறுப்பினர்களும் அரசுக்கு ஒருமித்த தமது பலத்தை வெளிப்படுத்துவர் என முந்திக்கொண்டுள்ளார். கிழக்கு மாகாண 17 முஸ்லிம் பா. உறுப்பினர்களில் இருவர் ஐ.தே.க. சார்பானவர்கள். மூவர் தேசிய ஐக்கிய முன்னணி சார்பான எதிர்கட்சி வரிசை உறுப்பினர்கள். நால்வர் அஸ்ர.ஃ.ப் காங்கிரஸ் என்ற அமைப்பினூடாக ஏற்கனவே மு.கா. கட்சியுடன் முரண்பட்டிருப்பவர்கள். இவ்விடயம் சாத்தியப்படுவதற்கு முன்னதாக குறிப்பிட்ட 17 முஸ்லிம் பா. உறுப்பினர்களையும் அவ்வாறானதொரு நிலைப்பாட்டிற்கு முன்னதாகவே தயார்படுத்தவேண்டிய பொறுப்புக்களை முன்னெடுப்பதே யதார்த்தமானது.

ஆக. எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 23ஆம் திகதிக்குட்பட்ட காலம் என்பது அரசின் பங்காளியாகச் செயற்படும் பெரும்பான்மையான முஸ்லிம்களின் ஆதரவுகளைப் பெற்றுள்ள மு.கா. கட்சிக்கு பெருத்த சவாலாகவே அமையப்போகின்றது. இதுவே மு.கா. கட்சியின் அரசியல் ஸ்தீரத்தன்மையை நிர்ணயிக்கும் வல்லமை கொண்டதாகவும் அமையலாம். பொறுத்திருந்து பார்ப்போம்.

# எதிர்வரும் ரமழானில் ஸக்காத் கொடுப்பனவை இப்போதே திட்டமிட்டு செயல்படுவோம்.

ஒவ்வொரு வருடமும் புனித ரமழானில் பூத்து. புர்க்கான் வேதத்தின் சன்மார்க்க மணம். வீசிவரவே செய்கிறது. தீனின் இதயங்கள் ரமழானில் நோன்பு நோற்று. இறைவழிபாடுகளில் நிறைமனத்தோடு ஈடுபட்டு. நன்மையை கொள்ளையடிக்கவே செய்கின்றன. நோன்பு மாதத்தில் முழு சமுதாயமும் கவனஞ் செலுத்தியே ஆகவேண்டிய இன்னொரு பர்ழான கடமையும் நிறைவேற்றப்பட்டே வருகிறது. அதுதான் ஸக்காத் என்னும் தர்மமும் கொடுப்பனவுமாகும்

நம் சன்மார்க்க சமுதாயத்தில் பணக்காரர்களும். வசதி வாய்ப்பு உள்ளவர்களும். வளத்தோடு வாழ்பவர்களும் வருடாந்தம் தமக்கு கடமையாக்கப்பட்ட ஸக்காத் கொடுப்பனவை ஏதோவொரு முறையில் வழங்கி வருகின்றனர். "அல்ஹம்துலில்லாஹ்" என்று அல்லாஹ்வை போற்றும் விதத்தில் ஸக்காத் கடமை நிறைவேற்றப்பட்டே வருகிறது. ஆனால்...

சமுதாயத்தின் வறுமை இருள் நீங்கியதாகவோ. கஷ்டப்படுவோர் கரையேறியதாகவோ தெரியவில்லை. நோன்பு மாதம் ரமழான் மலர்ந்து விட்டாலோ. கொழும்பு உட்பட. முஸ்லிம்கள் செறிந்து வாழக்கூடிய நகரங்களில் எல்லாம். வறுமை கோட்டின் கீழ் வாழ்வோரில் ஒரு சாரார். பஞ்சைகளாய் - பராரிகளாய் - பரதேசிகளாய் கடைகடையாய் ஏறி இறங்குவதை காண்கிறோம். ஸக்காத் பெறத் தகுதியான இன்னொரு கூட்டத்தினர். அகதி முகாம்களின் அவல வாழ்வில் தாழ்நிலை அடைந்து கொண்டேயிருக்கின்றனர். இந்நிலை ஏன்? தொடர்கதையின் அத்தியாயங்களாக விரிவடைவது எதற்காக?

ஸக்காத்தின் மூலம் சமுதாயத்தில் படிந்துள்ள வறுமையின் வாட்டத்தை நிச்சயம் போக்க முடியும். சரீஆவின் உறுதியான நிலைபாடு இதுதான் என்பதற்கு. இஸ்லாமிய வரலாற்று வழியில் எத்தனையோ உதாரணங்களைத் தொட்டுக்காட்ட முடியும். கலீபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில். ஸக்காத் பெறக் கூடியவர்களைத் தேடித் துழாவ வேண்டிய நிலையிருந்ததை வரலாறு கூறி பெருமையுறுகின்றது.




அப்படியானால் - நம்மால் விடை கண்டு. விளக்கம் பெற்று. சமுதாயத்தின் வளமான நலமான - பலமான வாழ்வின் விடியலுக்கு வழி செய்ய முன்வருவோமாக! இது தொடர்பாக. முல்லா சில சிந்தனைகளை சமுதாய பற்றுறுதி மிக்க நெஞ்சங்களின் முன் சமர்ப்பிக்க விளைகிறேன்.

தீனின் இதயங்களே - நம் சமுதாயத்தின் மேட்டுக்குடி மனிதர்கள். தத்தமது ஸக்காத் கொடுப்பனவுகளை தனிப்பட்ட முறையில். தனக்கு விருப்பமானவர்களுக்கு ஏதோ வழங்கி வருகின்றனர் "பாத்திரம் அறிந்து பிச்சை இடு" என்பார்களே.... இதன்படி "பாத்திரம்" என்னவென்று - அதுதான் எட்டுக் கூட்டத்தினர் யார்? எவர்? என்று அறியாமலே கைக்கு வந்தவாறு கொடுத்து விடுகின்றனர். இதனால் ஸக்காத் பெற்றவர்கள் தனிப்பட்ட ரீதியில் தற்காலிக பயன் பெறுகின்றனரே தவிர. கூட்டு முயற்சியாக சமுதாய மட்டத்தில் எந்தப் பயனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்த வருடம் ஸக்காத் பெற்றவர். சில நாட்கள் டாம்... டீம் என வாழ்ந்து விட்டு. மீண்டும் பழைய நிலைக்கே வந்து விடுகின்றார். இதனால் தனிமனிதனின் வாழ்வில் எந்த விடியலும் ஏற்பட்டதாகயில்லை. மறு வருடமும் குறிப்பிட்ட அந்த மனிதர் ஸக்காத்தை எதிர்பார்க்கும் நிலையில் இருக்கின்றாரே தவிர. அவர் ஸக்காத் கொடுக்கும் தகுதி வந்ததாகயில்லை.

இப்படித்தான் நம் ஹாஜியார்மார்களும் - தனவந்தர்களும் ஸக்காத் கொடுப்பதை வழக்கமாக்கியிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் தத்தம் மனம்போனவாறு செயல்படுகின்றார்கள். ஸக்காத் மூலம் முழு சமுதாயத்தையும் எப்படி கை தூக்கி விடலாம் என்று எண்ணிப் பார்க்கின்றார்கள் இல்லை. கொடுக்கும் தகுதி பெற்றோர் சமூக மட்டத்தில் தம் கவனத்தை செலுத்தாத வரை. சமூகத்தில் ஸக்காத் வாயிலாக மாற்றமோ - ஏற்றமோ ஏற்படப் போவதில்லை என்பதை முல்லாவால் உறுதியாகக் கூற முடியும்.

<u>இதற்கு என்ன செய்யலாம்?</u>

ஒவ்வொரு ஊரிலும் ஸக்காத் விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தி. நம் சன்மார்க்க சகோதரர்களுக்கு ஸக்காத் பற்றிய விரிவான கண்ணோட்டத்தை முதலில் ஏற்படுத்த வேண்டும். இது விடயத்தில். அகில இலங்கை ஜமாத்தே இஸ்லாமி தொடர் முயற்சிகளை செய்து வரும் நல்ல பணிகளை முல்லா குறிப்பிடாமலும் - பாராட்டாமலும் இருக்க முடியாது.

இன்ஷா அல்லாஹ் இன்னும் ஒன்றரை மாதளவில் மலரவிருக்கும் ரமழானில். சமூக மட்டத்தில் மாற்றம் ஏற்படும் வகையிலான கோணத்தில் இப்போதிருந்தே திட்டமிடுவோம். பின்னர் அந்தத் திட்டத்தின் வழியில் சிந்திப்போம்; செயற்படுவோம்.

முதலில் ஒவ்வொரு ஊரிலுள்ள ஜும்ஆ பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் சபையோ அல்லது பரிபாலன சபையோ முன்வந்து தத்தம் ஊரிலுள்ள கல்விமான்கள் அதிபர் - ஆசிரியர்கள், சமூகநல அமைப்புக்களின் பிரதிநிதிகள் - உலமாக்கள் துடிப்புள்ள இளைஞர்கள் போன்றோரை உள்ளடக்கி. ஒரு ஸக்காத் குழுவை தெரிவு செய்ய வேண்டும். இக்குழுவிற்கே ஸக்காத் பற்றிய முழு அதிகாரங்களையும் கொடுத்து விட வேண்டும்.

அந்த ஸக்காத் குழுவினர் தம்மூரிலுள்ள ஏழைபாழையர்களை - அதாவது ஸக்காத் பெறத் தகுதியான எட்டுக் கூட்டத்தவர்களை இனம் காண வேண்டும். கேள்விக்கொத்தாக ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டு. நம் ஊர் உடன்பிறப்புக்களின் வாழ்வியல் கோணங்களை - பொருளாதார நிலைமையை - கடன் விபரங்களை - கஷ்ட நஷ்டங்களை பற்றியெல்லாம் தகவல் திரட்ட வேண்டும். இத்தகவல்களின் புள்ளிவிபர கணிப்பீட்டின்படி எட்டுக்கூட்டத்தவர் எவரெவர் என்பதை எடைபோட்டு விடலாம்.

அதன்பின் - ஊரிலுள்ள ஸக்காத் வழங்கத் தகுதி படைத்த தனவந்தர்களை. தூது கோஷ்டியாக - ஒவ்வொருத்தர் வீடாக நேரில் சென்று "நம்மூர் வறுமையை நாமே போக்குவோம் "என்ற கோஷத்தின் வழியிலான சிந்தனைகளை பரிமாறி. அவர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும். "ஸக்காத்தை பண்டமாகவோ - பொருளாகவோ தனிப்பட்ட முறையில் கொடுக்காமல். நம்மூர் பள்ளிவாசலுக்கு அனுப்பி வையுங்கள்" ஸக்காத் குழுவினர்களாகிய நாம். நம்மூரிலுள்ள ஸக்காத் பெறத் தகும் எட்டுக் கூட்டத்தவர்களை இனங்கண்டு வரிசைப்படுத்தி வைத்திருக்கிறோம். ஊரின் மானம் காக்க. இப்படி கூட்டாக வசூலித்து வழங்குவதே உசிதமான வழி" எனப் புரிய வைக்க வேண்டும். புரிந்து கொண்டால். நிச்சயம் மனம் கீழும் மேலும் புரளாது.

இவ்வாறு வழங்குவோரையும் - வாங்குவோரையும் இனம் கண்டு. கூட்டாக வசூலித்து வழங்கினால். ஆண்டுதோறும் திட்டமிட்டு. சமுதாய வறுமைப் பேயை படிப்படியாக விரட்டலாம். இது குறித்து சிந்திப்போம்; செயல்படுவோம்; பிறரையும் தூண்டுவோம் அல்லாஹ் ரஹ்மத் செய்வானாக.

## இறையே காப்பு!

இலக்கிய வானின் விடிவெள்ளி
இஸ்லாமிய சமூகத்தின் இளவரசன்
உலகைப் பிரிந்தேகிய நினைவினை
உள்ளன் பாற் பிரார்த்திக்கிறோம்!

மர்ஹூம் அஷ்ரஃப் அன்னவனின்
மாண்பினை எண்ணாத நாளுண்டோ
தார் மீகம் தளைக்க வென்று
தன்னுயிரை நீத்த தியாகியே! உமை
மறவோம்!

அரசியல் அனாதையான யெம்மை
ஆளும் வர்க்கத்தில் மதிக்கச் செய்து
திறமுடன் செயற்படுத்திய தீரன்!
தூயவனைப் புகழாத நாவில்லை!

முஸ்லிம் காங்கிரஸ் அணியினை
முன்னின்று வளர்த்த காவலனே
அஷ்ரஃபெனும் ஆரமுதே
அல்லாஹ்வின் நல்லருள் துலங்குகவே!



யுத்த முனைக்கு சாவு மணியடித்து
என்றும் சமாதானம் நிலைக்கவென்று
நித்தம் பாடுபட்ட நிந் நாத்மா
நல மிது சுவர்க்கத்தில் உலவ வேண்டும்!

காலன் கவர்ந்த பாவலனே
கணக்கில்லையடா உனது பணி
காலமெல்லாம் நாங்கள் கதறியழுதாலும்
கொட்டுகின்ற கண்ணீருநக்கீடாகா!

வானதிர வாழ்த்துக்குகள் குவிய
வைப்போம்
வல்லோனை உனை யள்ளி கொஞ்ச
வைப்போம்
தான தர்மம் உன்பேரில் வழங்கச் செய்து
தலை மகனைப் போற்றிடுவோம்
இறையே காப்பு!

மூதூர் 'கலை மேகம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களே! விழித்தெழுங்கள்!!



நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதானப் பேச்சினில் இடைக்கால நிர்வாகம் மிக முக்கிய இடம் வகிப்பதை அவதானிக்க முடியும். இதற்கு ஏன் அவ்வளவு முக்கியமெனில் இடைக்கால நிர்வாகமுறையே சில வேளை நிரந்தர முடிவாகவும் அமையலாம். இதற்கு உதாரணமாக நாம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைத்து இன்று அதை பிரிக்க முடியாத நிலையில் ஆட்சியாளர்கள் தடுமாறுவதைக் கொள்ள முடியும். இந்த நிலையில் இடைக்கால நிர்வாகமொன்று வட கிழக்கிலே தற்காலிகமாக அமைக்கப்பட்டால் அதற்கும் - இந்த நிலைதான் உண்டாகும். இதனை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏனையவர்களை விட நன்றாக அறிவார்கள்.

அப்படியானால் இப்படி அமையவிருக்கும் இடைக்கால நிர்வாகத்தில் எமது நிலையென்னவென்று "கேட்டுக் கேட்டு" எழுதியெழுதி அலுத்து விட்டது. எனினும் பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அரசியல் தெளிவு இன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏன்? ஏற்படவில்லை. அவர்களில் சிலர் நடந்து கொள்ளும் முறைகளைப் பார்க்குமிடத்து உண்மையில் இவர்கள் முஸ்லிம்கள்தானா? என்று கேட்கத் தோன்றுகின்றது. அந்த அளவுக்கு முஸ்லிம் சமூகத்தின் விடியலுக்காக குரல் கொடுக்க வேண்டியவர்கள், மௌனமாக இருந்து விட்டு தேவையற்ற நேரங்களில் தேவையில்லாத அறிக்கைகளை விடுகின்றனர்.

இவர்களின் இப்படியான அறிக்கைகளால் வரலாற்று ரீதியான தவறுகள் ஏற்படுவதற்கு இவர்களும் உடந்தையாளர்களாவார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணம் எப்போது இணைக்கப்பட்டதோ அன்றிலிருந்து முஸ்லிம் சமூகம் திட்டமிட்டு நசுக்கப்பட்டு வருகின்றமை ஒன்றும் புதியவிசயமல்ல. அப்போது விட்ட தவறுகளால்தான் இன்று அதனை பிரிக்க முடியாத அரசியல் நிலைக்கு நமது சமூகம் தள்ளப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழலில் தற்போதைய இடைக்கால நிர்வாகத்திற்கும் ஆமாம்சாமி நமது தலைவர்கள் போடுவார்களானால் மீளமுடியாத அடிமை வாழ்வுக்குள் எமது சமூகத்தை தள்ளிவிட்ட மாபெரும் வரலாற்றுத் துரோகத்தினை அவர்கள் செய்தவராவார்கள்.

எனவேதான் பேசவேண்டிய இடம் வந்த இவ்வேளை எமது சமூகத்தின் பிரச்சினைகள் பேசப்பட வேண்டும். எதைப் பேச வேண்டும், எப்படிப் பேசவேண்டும் என்பதை எல்லோரும் நன்றாக அறிவார்கள். அதனை விட்டு எமக்கும் எமது வருங்கால சமுதாயத்திற்கும் படுபாதகமான செயல்களைப் புரிந்த கூட்டத்தினருக்கும், அதன் தலைமைத்துவத்திற்கும் பக்கவாத்தியம் வாசித்து, அதற்கு ஏனைய முஸ்லிம்களுடைய ஆதரவைத் தேடுவதும், மன்னிக்க முடியாத சமூகத் துரோகமாகும். எந்த நோக்கத்திற்காக மு.காங்கிரஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கத்திற்கு நேர்மாற்றமான முறையில் அக்கட்சி இன்று, வழிநடத்தப்பட்டு செல்லும் திசை தெரியாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது. அக்கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபட்ட ஆயிரக்கணக்கான தியாகிகளின் தியாகங்கள் அன்னியர்களின் கால்களால் இன்று மிதித்துதைக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கெல்லாம் என்ன காரணம், நாம் எடுக்க வேண்டிய தீர்மானங்களை உரிய நேரத்தில் எடுக்கவில்லை. சிலவேளை அவைகளை தட்டிக் கழித்திருக்கின்றோம். இவையனைத்துமே இன்று பாரிய வடிவில் எம்முன்னே நிற்கின்றன. எமது மக்கள் எந்த நோக்கத்திற்காக எமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பினார்களோ! அவர்கள் அதனை உதாசீனம் செய்து வேறு நோக்கங்களை நிறைவு செய்யவும், தங்களை வளமாக்கிக் கொள்ளவுமே பயன்படுத்திக் கொண்டனர். ஒப்புக்காக வீர தீர சவால் நிறைந்த அறிக்கைகளை விட்டு மக்களை திருப்திப் படுத்திக் கொண்டார்கள். இது தொடர்கதை போல் இன்றும் தொடர்கின்றது.

இப்படியான மாயை நிறைந்த அரசியல் கலாசாரம் எமக்குத் தேவையில்லை. இன்று நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்ய வேண்டியதென்ன? எங்களது பாரம்பரியமான வாழ்விடங்களை எப்படி தக்கவைப்பது என்பது தொடர்பாக தமது தொகுதி வாழ் மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமையளித்து அதற்கமைவாகவே செயல்பட வேண்டும். இதைவிடுத்து கட்சித் தலைமையின் தனிப்பட்ட தேவைகளை மட்டும் கருத்தினில் கொண்டு அவரது விருப்பத்தினை நிறைவு செய்து கொள்ளும் கொள்கைக்கிசைவாக மக்களை தவறாக வழிநடாத்தக் கூடாது. இது ஒரு சமூகத்துரோகமாகும். ஸ்த்தாபக தேசியத் தலைவரான மர்ஹூம் எச்.எம் எம். அஷ்ரஃப் அவர்களின் மறைவையடுத்து இப்படியான வழிகாட்டல்களே மு.கா. வைப் பொறுத்த வரை நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாகவே ஒரு கட்சியாக இருந்த மு. காங்கிரஸ் இன்று நான்காகக் பிளவுபட்டுக் கிடக்கின்றது.

எனவே தான் எங்களுக்கு அடிப்படைக் கொள்கை தேவைப்படுகின்றது. இதன் நிமித்தமே இன்று நாம் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை விழிப்படையக்கோருகின்றோம். இது இப்படியிருக்க சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தலைமைத்துவத்தின் மீது எமக்கு நம்பிக்கையிருக்கின்றது. எனவே, நாம் அவர்களுடன் சேர்ந்து இடைக்கால நிர்வாகத்தினைப் பெறலாம் என்ற கருத்துப்படவும் அறிக்கைகளை விட்டிருக்கின்றனர். இப்படியான அறிக்கைகளை விடுத்திருக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நாம் இப்படிக் கேட்டால் அவர்கள் எப்படியான பதில்களைக் கூறுவார்கள்.

அன்புள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரே! உறுப்பினர்களே!! நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கும் அந்தப் பயங்கரவாதத் தலைவரின் தலைமையில்தானே பின்வரும் சம்பவங்கள் நடைபெற்றன. அதாவது வடக்கிலே உடுத்த உடையுடன் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் விரட்டி அடிக்கப்பட்டு அம்மக்களின் உடமைகள் சொத்துக்கள் சூறையாடப்பட்டு அங்கிருந்த பள்ளிவாசல்களெல்லாம் உடைத்தெறியப்பட்டன. (இன்னும் அந்த மக்கள் அகதிகளாகவே அலைகின்றனர்) இச்செயல்களுக்குத் தலைமை தாங்கியவர் யார்?

நூற்றுக்கணக்கான முஸ்லிம் பொலிஸார் ஒன்று சேர்க்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு ஒரே குழிக்குள் புதைக்கப்பட்ட சம்பவம் கிழக்கிலே அரங்கேறியது யாருடைய தலைமையில்?

ஏறாவூர், காத்தான்குடி, அழிஞ்சிப் பொத்தான, மூதூர், வாழைச்சேனை, அம்பாறை மாவட்டத்தில் என ஆயிரக் கணக்கான பொதுமக்களை தொழுகையிலும் உறங்கும் வேளையிலும் இன்னும் வயல் நிலங்களிலும், பிரயாணங்களிலும் கொன்று குவித்து அவர்களின் சொத்துக்களை எரித்து அகப்பட்டதை சூறையாடியதும், கல்முனை, அக்கரைப்பற்று நகரங்கள் திட்டமிட்டு ஏன் அண்மையில்கூட வாழைச் சேனை நகரைக்கூட எரித்ததும் யாருடைய தலைமையில்?

இதற்கு மேலாக புனித ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிவிட்டு அம்பாறை, கல்முனை வழியாக காத்தான்குடி, ஏறாவூருக்குத் திரும்பிச் சென்ற சுமார் 70 ற்கும் அதிகமான ஹஜ்ஜாஜிகளையும் அவர்களது உறவினர்களையும் துடிக்கத் துடிக்க, கதறக் கதற சுட்டும் வெட்டியும் கொன்று குவித்து தமது விடுதலை வெறியைத் தீர்த்துக் கொண்ட அந்த வீரர்களின் செயல் எவருடைய தலைமையில் நடந்தது?

**எம்.எல்.எம். முஸ்தபா**
**மருதமுனை**

இன்றுவரை தொடரும் முஸ்லிம்களுடனான தாக்குதல்களுக்கும் அழிவுகளுக்கும் எந்தவிதமான அனுதாபத்தையேனும் தெரிவிக்காமல் "எமக்குக் கீழேதான்" எந்த இனமும் இருக்க வேண்டும் என எண்ணும் தலைமை இலங்கை நாட்டில் வேறு எந்தத் தலைவராக இருக்கும்.

இப்படிப் பல சிறப்புக்களைக் கொண்ட தலைமைத்துவத்தினை நம்பியா நமது சமூகத்தை தாரைவார்க்க நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்கள்? உங்களால் அது முடியும் என்றா நினைக்கின்றீர்கள். ஒருவேளை நீங்கள் சில தேவைகளுக்காக இப்படியான கருத்துக்களையும், அறிக்கைகளையும் அள்ளிவீசலாம். இதன் காரணமாக நீங்கள் எதிர்பார்க்கும் எந்த விடயமும் நடக்காது. மாறாக உங்களைப் போன்றவர்கள் அரசியலில் விலாசமில்லாதவர்களாக மாற வேண்டியதொரு நிலைதான் உண்டாகும். எனவே விழித்தெழுங்கள்!

# எங்கே செல்கின்றன நமது பாதைகள்

விடத்தல் தீவு றுஸ்தா

அங்கம் 9

### முஸ்லிம்களுக்கான மறுதலிப்புக்கள்

முஸ்லிம்களின் வாழ்வியல் அடையாளங்களும் கலாசார பாரம்பரிய நடைமுறைகளும் தூக்கி எறியப்பட்டு இரவோடு இரவாக துரத்தியடிக்கப்பட்ட சம்பவம் நடந்தேறிய காலகட்டத்திலும், அதற்கு முன்னரும் அதற்கு பின்னரும் ஊடகங்கள் வாயிலாக கொட்டி வார்க்கப்பட்ட ஒரு சில பந்திகளை கோடிட்டுக் காட்டலாம் என எண்ணுகிறோம்.

முஸ்லிம்கள் சிங்கள இராணுவத்துடனும், இலங்கை அரசுடனும் சேர்ந்து தமிழினத்தை அழிக்கப்பார்க்கிறார்கள். இந்தத் தமிழீழம் சமய சாதி வேறுபாடுகள் இல்லாத அரசு. இங்கே பிரிவினைக்கே இடமில்லை. தாங்கள் தமிழர்களே என்பதை முஸ்லிம்கள் ஏற்றேயாக வேண்டும் என்ற வாதங்களும்........

முஸ்லிம்கள் கோருகின்ற உரிமைகள் என்பது தமிழ் தேசிய வாதம் முனைப்புப் பெறும்வரை முடங்கித்தான் கிடந்தது. தமிழர்களின் போராட்டத்துக்குப் பிற்பாடு கண்டு கொள்ளும் தீர்வின் போது சகலவித அதிகாரங்களும் தமிழர் கைகளில் ஒப்படைக்கப்படலாம் என்ற போக்கே முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு காரணமாய் அமைகின்றதாகவும் கூறுகின்றனர்.

முஸ்லிம்கள் பற்றி சஞ்சிகை ஒன்று தந்து சென்ற தகவலொன்றை பாருங்கள் "இலங்கை முஸ்லிம்கள் தமிழ் நாட்டிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் வர்த்தக நோக்கமாக இடம்பெயர்ந்த வணிகர்கள். கால கெதியில் சிங்கள, தமிழ் பிரதேசங்களில் குடியேற்ற வாசிகளாக மாறியுள்ளனர்.... பெரும்பாலான முஸ்லிம்கள் வணிகர்களாய் வந்ததினால் தமிழ் நாட்டில் நவாப் மன்னர்களின் ஆட்சி தோன்றியதால் இம்முஸ்லிம்கள் தமிழையே தாய் மொழியாய்த் தத்தெடுத்துக் கொண்டனர். இதனால் சிங்கள பேரினவாத அரசு இவர்களையும் ஓர் அங்கமாக அடக்கி தமது நிர்வாகத்தை நடாத்தியுள்ளது. இவர்கள் குடியேற்ற வாசிகளாக உள்ளனர். ஆகவே இவர்கள் ஒரு தேசிய இனம் அல்ல என்பது தெளிவாகிறது." என அந்த சஞ்சிகை நெருப்பை அள்ளிக் கொட்டியிருந்தது.

இங்கே சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து காட்டிக் கொடுப்பவர்களாகவும், அன்றைய அரசுகளின் கூட்டாளிகளாகவும், முஸ்லிம்கள் கோருகின்ற சுயநிர்ணய அதிகாரம் என்பது காழ்ப்புணர்ச்சியாகவும், தமிழ் மொழியை தத்தெடுத்துக் கொண்ட வந்தேறு குடிகளாகவும், மலினப்படுத்தப்பட்ட முத்திரைக் குத்தல்கள் எந்தவிதத்திலும், நமக்கு பயன் தராது என்பதையும் உணர்தல் வேண்டும். சுமார் 1400 ஆண்டுகளுக்கு முற்பட்ட சமூக அமைப்பின் கட்டமைப்பை உடைய பரம்பரையை இலங்கையிலும்,

## வடக்கு முஸ்லிம்களின் துன்பம் கலந்த வாழ்க்கை



குறிப்பாக வடக்கில் முஸ்லிம்கள் வாழ்ந்ததற்கான ஆணித்தரமான ஆதாரங்கள் 8 ஆம் நூற்றாண்டிலிருந்து தாராளமாக கிடைக்கப் பெற்ற பின்பும் மேற்கூறிய கருத்துக்கள் வலுமிக்கதோர் ஏற்றுக் கொள்ளக் கூடியதோ அல்லவென்பதையும் கண்டுணரலாம்.

### கணக்கெடுத்த தளம்பல்கள் :

தமிழ் முஸ்லிம் உறவுகளில் இடைவெளியோ விரிசலோ விழுந்துவிடுமோ? என அஞ்சவேண்டிய காலகட்டத்தில் சமுதாய நீதியும், சகோதரத்துவ அரசியல் தீர்வும் எல்லா மனிதர்களுக்கும் நேர்மையான முறையில் கிடைக்கப் பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் எந்தளவில் சாத்தியமாக்கப்பட்டிருக்கிறது.

யுத்தக் காலம் தொடங்கி, சமாதானக் காலத்தில் வட்ட மேசை, நீள் சதுர பேச்சுக்களெல்லாம் வடபுல முஸ்லிம்களுக்கு ஆதரவையோ அன்புக் கரத்தையோ நீட்டியுள்ளதா? அப்பாவித்தனமான சமுதாயத்தின் செந்நீரில் பூத்த எந்த மலர்களும் நீண்ட நாள் உயிர்வாழ்வு பெறுமா? வடபுல முஸ்லிம்களை புறமொதுக்கித் தள்ளிவிட்டு அமையப் பெறும் தீர்வு நிரந்தரமாக்கப்படுமா? தெருச் சண்டியர்களாக்கப்பட்ட ஒரு சில இளைஞர்களுக்கு என்ன தீர்ப்பினை இவர்கள் தரப்போகிறார்கள்? உம்மாக்களின் கண்ணீர் கலந்த கதை தொடர் கதைதானா? சிமினி விளக்குகளோடு இருளாகிப் போன கடந்த கால நாட்களின் அச்சுறுத்திய நிகழ்வுகளும், சம்பவப் போக்குகளும் எங்களை எப்படியெல்லாம் அச்சுறுத்தின? தேசிய பிரச்சினையின் மறுதலிப்புகளோடு மறக்க முடியாத அந்த நாட்களையும், நகர்வுகளையும் சுவாரசியத்திற்காகவல்ல. சிந்திப்பதற்காகவும் மீண்டுமொரு தடவை இரைமீட்டிப் பார்க்கிறேன்.

வர்த்தகமும் கல்வியோடும் மிளகாயும் நெல்லும் காய்க்கின்ற மீன்பிடியும், முத்து அம்பர்கள் பூக்கின்ற பூமியின் மேல் இன்னுமோர் வரலாற்று உதயம் பரிணமிக்க வேண்டும். அங்கே எல்லா இனங்களும் சகோதர வாஞ்சையோடு நேசித்து முகம் மலர்ந்து வாழ வேண்டும். இதை விடுத்து இனக் குரோதமும், மலினப்படுத்தப்பட்ட சொல்லாடல்களும் பிரதேச வாதங்களும், அடாத்தான கெடுபிடிகளும் நமது தேசத்தில் நிம்மதியை ஏற்படுத்தி விடப்போவதில்லை. எங்கும் இன முரண்பாட்டுக்கு காரண தடையங்களை தேடுவதை விட்டு விட்டு நாட்டில் சமாதான நல்லுதயம் மலர்வதற்கு யாவரும் முன்னிற்க வேண்டும்.

மீண்டும் பீரங்கிகளின் அலறலும், ஹெர்கூலீஸ் விமானங்களும், ஹெலிகளின் வெடியோசைகளும் இந்த மண்ணுக்கு வேண்டாம். வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை சர்வதேச மட்டத்தில் பேசப்படவும் அதற்கேற்ப நிவாரணங்களையும் உதவிகளையும் இம்மக்களுக்கும் கிடைக்கப் பெறவேண்டும்.

மிகவும் துக்ககரமான ஒரு பாதையில் சென்று கொண்டிருக்கும் வடக்கு முஸ்லிம்களின் துன்பம் கலந்த பாதையில் இருள் வட்டம் போடும் இன்னல்கள் அகன்று எங்கள் முகாம்களில் இருந்துதான் இலங்கையின் விடுதலை வாக்கியம் உருப் பெறவேண்டும். அதுபல்வேறு கிளைகளைக் கொண்டு அதன் பலாபலன்களில் வெற்றி கிட்டுவதாக இருக்கும் போதிலே மனசுகளிலும் சமாதானம் தோன்றும். அப்போதே மனிதர்கள் என்ற மகத்தான பெருமையையும் பெற முடியும்.

*முற்றும்*

# நமது பெறுமானங்கள்

*அன்புச் சகோதரிகளே...!*
*இனிய ஸலாம்.*

அன்றைய ஜாஹிலிய்யச் சமூகமும் இன்றைய நவீனச் சமூகமும் ஒன்றுதான் என்றால் மிகையாகாது. மனிதனை மனித இலட்சியங்களை எழுச்சியாய்க் கண்ட காலங்களைக் கரைத்து மித மிஞ்சிய பண்புகளை உள்வாங்கி ஏற்கத்தகாத பிரச்சினைகளையும் நெருக்குதல்களையும் எம்முள் விளைத்துவிட்டோம்.

*"சிறந்த சமுதாயத்தின் தோற்றுவிப்புக்கு மூலத்தோற்றுவாய்களாக இருப்போர் பெண்சமுதாயத்தினரே"*

இஸ்லாத்தில் பெண்களுக்கான அந்தஸ்த்தினை கூர்ந்து நோக்க இன்னுமா காலம் இருக்கிறது? பெண் சகோதரிகளே இஸ்லாத்தை முதல் ஏற்றுக் கொண்டவர் ஒரு பெண்மணியேதான் (அன்னை கதீஜா). இப்பொன்னெழுத்து வரலாறுகளின் முன், இன்றைய செயற்பாடுகளின் சாபக்கேடுகள் பற்றி சிந்திக்கிறீர்களா?... தாயாக, தாரமாக, பயிற்றுவிப்பாளராக, இன்னோரன்ன நாமங்களோடு வாழும் நமது பெண்கள் ஒரு கூட்டமாயும், சோம்பல், இயலாமை, நம்பிக்கையின்மை, போன்றவற்றில் போர்த்தியிருக்கும் கூட்டமாய்ச் சிலருமாக வாழ்கிறோம்.

நமது (புனை) நாமங்களின் உயர்ந்த பின்னணியை சிந்திக்கத் தவறுகிறோம். இலக்குகளுக்கும் இந்நாமங்களின் பெறுமதிகளுக்குமிடையே வாழ்வை நெறிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இலக்கற்ற வாழ்க்கைப் பயணத்தை சோம்பலும் கோழைத்தனமும் ஆள்கிறது என்பது தெளிவு. இலக்குள்ள வாழ்வுக்காக தியாகங்களையும், மனப்பக்குவங்களையும் நம்முள் ஏற்படுத்திக்கொள்ளாத வரை நேரிய பாதையைச் சென்றடைய முடியாது. நாவுக்கு ருசியாய்ச் சமைப்பதிலோ, வீட்டு வாசலை ஒழுங்கு செய்வதிலோ, பதவி பட்டம் தேடுவதிலோ மட்டும் நமது கடமைகள் முடிந்துவிட்டால் நமது பெறுமானங்கள் பூஜ்யமே. கூடவும் ஒரு நாளிகையின் கழிதல் உலக வாழ்வின் மூழ்குதலில் ஆழ்ந்துவிட்டதென்பதை மறுக்க முடியாது. இப்போதுள்ள காலங்களில் இறையோனிடம் இலக்குள்ள வாழ்வை முடித்து மீள்வோம் என்ற தீர்க்கங்களை மறந்துவிடுகிறோம்.

"நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும் நீங்கள் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா. (அல்-குர்ஆன் 23:12-15)

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோர் முதல் பெண் என்ற வழியிலே ஒரு சமூகத்தின் வழிநடாத்தல் தளத்தில் பெண் முதன்மையானவள். (தாய்-தாரம்) என்ற அடிப்படையிலே.. இறையோனுக்கு ஸுஜூது செய்வது முதல் இறை திருப்திக்காக மட்டும் அஞ்சி நமது கடமைகளை நிறைவு செய்ய முனைய வேண்டும்.

வெறும் சினிமாப் பத்திரிகைகளையும், புதினத் தாள்களையும் கதை அளத்தல்களையும் விட்டு விட்டு புனித அல்-குர்ஆனைப் படித்துப் பயன்பெற வேண்டும். எமது எண்ணங்கள் மறுமையின் உயர் பேற்றை அடையக் கூடியதாக வகுக்கப்பட வேண்டும். எமது கொடுக்கல் வாங்கல்கள், எமது பெற்றோர், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், அயல் வீட்டார் போன்றோர்களுடன் சுமுகமாக இறை திருப்தியாக இருக்க எங்களை நாங்களே பழக்கப்படுத்த வேண்டும். தாரமாக இருப்போர் பிள்ளைகளையும் கணவரையும் முழுமையாக கவனிக்க வேண்டும். பிள்ளைகளை இஸ்லாமிய அடிப்படைப் பண்புகளோடு வளர்க்கவும், நல்வழிப்படுத்தவும் துணை நிற்க வேண்டும்.

எம்மைச் சூழ வாழும் இஸ்லாமியர் மற்றவர்களின் முன் நடைமுறைகளில் ஈமானைச் சுட்டெரிக்கும் பொய், அவதூறு, புறம் என்பவற்றை விட்டொதுக்கி நடக்க வேண்டும்.

இஸ்லாத்தின் முதன்மைப் பெண்களின் வாழ்வுகளைப் படித்துப் பாருங்கள் - அறிந்துகொள்ளுங்கள் சரித்திரத்தின் தியாகப் பெண்களின் வரலாறுகளைப் படிப்பதனூடாக வாழ்வின் உண்மைகளையும் உறுதிகளையும் உங்களில் உருவாக்க முடியும். இறைபாதையில் தாராளமாக தர்மம் செய்யுங்கள். கூடவும் இஸ்லாமியக் கடமைகளை நேர்த்தியாய் நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதியடையுங்கள்.

நாளாந்தம் செய்ய வேண்டிய இதர கடமைகளை இனிமையாகச் செய்யுங்கள். ஒழுங்கு முறையோடு உங்கள் கடமைகளைச் செய்யும் போது உங்கள் பெறுமானங்கள் பற்றி உணரப்படுவீர்கள்.

நமது பெறுமானங்களின் தீர்மானமும் திருப்தியும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதை மறக்க நாங்கள் காரணமாக இருக்கவும், நமது கடமைகளை நாமே சீரழித்துக் காட்டுவதாகவும் இருந்தால் எமது இஸ்லாத்தில் பெண்களுக்கான அந்தஸ்தினை நாங்களே நழுவியவர்களாகிவிடுவோம். எனவேதான் இலக்குள்ள வாழ்வைக் கொண்டு சமூகத்தில் நாம் ஏற்கும் ஒவ்வொரு நாமங்களையும் கொண்டு (தாய், தாரம், மகள், இன்னோரன்ன) அந்த அந்தச் சூழ்நிலைக்கேற்ப வாழ்வை நெறிப்படுத்தும் சாத்தியம், ஒவ்வொரு பெண்ணிடமும் உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள்.

நவீனக்களமும், ஜாஹிலியக்களமும் எமது வாழ்வுத்தளத்தில் இரட்டைச் சீர் கேட்டுத் தளங்கள். அவற்றில் நாம் நுழைவதைவிட நமது பண்பாடுகளை முறையாய்க் கற்றுணர்ந்து உண்மை இலட்சியங்களுக்காய் ஓர் சமூகத்தை வளம்படுத்துபவர்களாக ஒவ்வொரு பெண்ணுமே மாறவேண்டும். (தான் தொழுதால் தான் - தன் மகனையோ மகளையோ தொழவைக்கலாம் என்பதை உணர வேண்டும்.)

இஸ்லாம் நமக்களித்த உயர்வுகளைப் பேணாதவரை நமது பெறுமானங்களை இழக்கத் தவற மாட்டோம் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். மீண்டும் ஒருமுறை சந்திப்பேன்.

**அதுவரை ப்ரியமுடன்**
**எம்.ஐ. சித்தி றபீக்கா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் - அவள் - அவர்

உரைநடை

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு எனது நண்பர் ஒருவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். "நாம் நெப்போலியனை மட்டும் ஏன் "அவன்" என்று அழைக்க வேண்டும்"

நான் சொன்னேன் "நெப்போலியன் வீரத்தின் குறியீடு அதனால்தான் 'அவன்' என்று ஆண்மையில் சுட்டுகிறோம். அது அவனுக்கு அழகல்லவா?"

எனது பதிலில் நண்பர் திருப்தியடைந்தாரோ என்னவோ? உண்மையில் அந்தப் பதிலில் எனக்கோ பரிபூரண திருப்தி கிட்டவில்லை.

ஆகவே அந்த வினாவை என் அடிமனசின் ஆழப் பரப்பில் வீசி விட்டேன். அது என் பழக்கம். மிகவும் சிக்கலான சில வினாக்களுக்கு விடை தெரியவில்லையென்றால், என்னை விட அறிவிற் சிறந்தவர்களிடமோ, அனுபவஸ்தர்களிடமோ, புத்தகங்களிடமோ, புத்திஜீவிகளிடமோ கேட்டு அவற்றுக்குரிய பதிலைத் தெரிந்து கொள்வது எனது பழக்கம். ஆனால் அப்படியும் விடை கிடைக்காத வினாக்களை நான் என் அடிமனசின் ஆழப் பரப்பில் வீசிவிடுவேன். அவை குறித்து அடிக்கடி ஆழ்ந்து சிந்திப்பேன்; அதே போல் மறந்தும் விடுவேன். சிப்பியின் வாயில் விழுந்த மழைத்துளி முத்தாவது போல், என் மனசின் மர்மப் பரப்பில் வீசப்பட்ட வினாக்களும் காலப் போக்கில் விடையாகக் கனிவதுண்டு. அதற்குச் சிலவேளை பல வருடங்கள் கூட எடுப்பதுண்டு.

அப்படித்தான் இந்தக் கேள்வியையும் எனது ஆழ்மனசில் "ஊறப்போட்டு" விட்டேன். கிட்டத்தட்ட பத்து அல்லது பதினைந்து வருடங்களுக்குப் பிறகு அதற்குரிய விடை கிட்டியபோது நான் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தேன்.

\+ + +

இன்று அமெரிக்காவின் கொடி பறந்து கொண்டிருப்பது போல் அன்று ஆங்கிலேயனின் கொடி பறந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் அவர்களது அரச சபை விவாதங்களில் அடிக்கடி பேசப்பட்ட இரு பெரும் வீரர்கள் இருந்தனர். ஒருவர் - நெப்போலியன் பொனபார்ட் மற்றவர் - திப்பு சுல்தான் தமிழில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் அவர்கள் இருவரும் "அவன்" என்றே அழைக்கப்பட்டனர்; படுகின்றனர். ஆனால் அதே புத்தகங்களின் ஆங்கிலத் தளபதியான நெல்சன். வெலிங்டன் பற்றிப்பேசும் போது 'அவன்' என்று குறிப்பிடுவதில்லை; 'அவர்' என்றுதான் குறிப்பிடுகின்றன.

அப்போதுதான் இதுவரை அவிழாத அந்த மர்ம முடிச்சு 'சட்'டென்று அவிழ்ந்தது. மஹா அலெக்ஸாந்தரின் வாள் வீச்சில் 'கோர்டியன் நொட்' அவிழ்ந்தது போல், எனது சிந்தனை வீச்சில் அந்தச் சிக்கல் மிகுந்த முடிச்சும் அவிழ்ந்தது.

காரணம்: நெல்சனும், வெலிங்டனும் ஆங்கிலத் தளபதிகள் நெப்போலியனும், திப்பு சுல்தானும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பரம வைரிகள்.

அன்று ஆங்கிலேயனால், ஆங்கிலத்தில் வரையப்பட்ட வரலாறுகளைத் தமிழில் தந்தவர்கள் யார்? ஆங்கிலத்தில் படித்து, ஆங்கில ஆடை அணிந்து ஆங்கிலேயனைப் போல் உணவு உண்டு, ஆங்கிலேயனைப் போல் பாவனை பண்ணியவர்கள். அதாவது ஆங்கிலக் கலாசாரக் குட்டையில் ஊறிய மட்டைகள். சுருக்கமாகச் சொன்னால் தனது அந்தராத்மாவையே ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அடகு வைத்த - இல்லையில்லை: விற்றுவிட்ட - தமது நாட்டைச் சேர்ந்த கறுப்புத் துரைமார். ஆங்கிலக் காலனியாதிக்கத்திற்கு அடிமைச் சேவகம் செய்தவர்கள். ஆங்கிலேயனின் காலணிகளைத் தனது நாக்கால் நக்கி மினுமினுக்கி, அது குறித்துப் பெருமைப்பட்டுக் கொண்ட பேடிகள்.

வெள்ளை எஜமான் ஒரு தடவை உறுமினால், தனது மக்களைப் பார்த்து நூறு தடவை குரைக்கும் கறுப்புத்துரைமார்தான் ஆங்கிலேயனால், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட வரலாற்றை எமக்குத் தமிழில் தந்தவர்கள்.

இன்னும் கொஞ்சம் சிந்தித்தேன். நாலு தங்க நாணயங்களை பொறுக்கியவனுக்கு ஒரு புதையலே கிடைத்தது போல் பூரித்துப் போனேன். எலிஸபெத் மஹாராணியார் 'அவர்கள்'. விக்டோரியா மஹாராணியார் 'அவர்கள்'. ஆனால் பிரெஞ்சுப் பெண்மணி ஜோன் ஒஃப்ஆர்க்கை 'அவள்' என்றுதான் குறிப்பிடுகிறார்கள். அதே போல் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்தியாவில் வீரச் சமர் இயற்றிய ஜான்சி ராணியையும் 'அவள்' என்றுதான் குறிப்பிடுகிறார்கள்.

இன்னும் சிலவற்றைப்பாருங்கள். "மாட்சிமை தாங்கிய ஆறாம் ஜோர்ஜ் மன்னர் 'அவர்கள்' "வின்சர் கோமகனார் அவர்கள்" ஆனால் இந்தியா மண்ணை ஆண்ட மாபெரும் மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது மட்டும் ஒளரய் சச்சீல் ஆட்சி புரிந்தான். சிவாஜி வீரத்துடன் போர் புரிந்தான். ஷாஜாஹான் தாஜ்மஹாலைக் கட்டினான். ராஜராஜ சோழன் தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டினான்.

சரி இனி இலங்கைக்கு வருவோம். நமது குழந்தைகள் இன்று படிக்கும் "சமூகக்கல்வி"ப் பாடப் புத்தகங்களைக் கொஞ்சம் புரட்டிப் பாருங்கள். "இலங்கையின் முதல் தேசாதிபதியாக ஃப்ரெட்ரிக் நோர்த் நியமிக்கப்பட்டார்" "டொரிங்டன் கலகத்தை அடக்கினார்" "எட்வர்ட் பார்ன்ஸ் நெடுஞ்சாலைகளை நிர்மாணித்தார்" ஆனால் எமது மண்ணை ஆண்ட முதல் மன்னன் விஜயனிலிருந்து, மாமன்னர்களான விஜயபாகு, பராக்கிரமபாகு உள்ளடங்கலாக, ஐரோப்பிய ஏகாதியத்தியவாதிகளை எதிர்த்துப் போர் செய்த இரண்டாம் ராஜசிங்கன், மாயாதுன்னை, சங்கிலி, பண்டாரவன்னியன் துவக்கம் கண்டியை ஆண்ட கடைசி மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் வரை "அவன்,அவன்.அவன்" என்று அமைப்பதை நாம் அவதானிக்கலாம்.

இனி இருபதாம் நூற்றாண்டின் முதல்பாதிக்கு - இரண்டாம் உலக மஹா யுத்தத்துக்கு - வருவோம்.

சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்வல்ட் - "உலகப் பெரு மூவர்" என்று போற்றப்படுகின்றனர். ஆனால் ஹிட்லர், முஸோலினி ஆகியோர் 'அவன்' என்றே தூற்றப்படுகின்றனர். வரலாறு அவர்களை வில்லனாகத்தான் விபரிக்கின்றது. "அடோல்ஃப் ஹிட்லர் ஆயிரக்கணக்கானோரைக் கொன்று குவித்தான்" என்று எழுதும் மேலைய வரலாற்றாசிரியர்கள், ஜப்பான் மீது இரு தடவை அணுகுண்டு வீசுவதற்கு ஆணையிட்ட அமெரிக்க ஜனாதிபதியை 'அவன்' என்று அழைப்பதுமில்லை. 'கொடுங்கோலன்' என்று கொக்கரிப்பதுமில்லை. மாறாக 'இரண்டாம் உலகப் போரிலிருந்து உலகைக் காப்பாற்றிய உத்தமர்' என்றே வர்ணிக்கின்றனர். வென்றவன் வேந்தன் - தோற்றவன்



கொள்ளைக்காரன் இதுதான் வரலாறு. அதில்தான் எத்தனைகோளாறு?

இனி இருபதாம் நூற்றாண்டின் மறுபாதிக்கு வருவோம். பிரித்தானியக் காலனியாதிக்கத்தை எதிர்த்து ஆபிரிக்க மக்களுக்காகக் குரல்கொடுத்த இடி அமீன்போன்ற சுதேசத் தலைவரை 'அவன்' என்று அழைக்கும் அடிமைப் பத்திரிகைகள் எமக்கு மத்தியில் இன்னமும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அப்பத்திரிகைகள் பிரிட்டிஷ் பிரதமரை ஒருபோதும் 'அவன்' என்று அழைத்ததில்லை.

இறுதியாக இருபத்தோராம் நூற்றாண்டுக்கு, இன்றைய அரசியலுக்கு வருவோம்.

ஆஃப்கானிஸ்தானிலிருந்து ஈராக்வரை அந்நிய நாடுகளை ஆக்கிரமித்து, ஆயிரமாயிரம் அப்பாவி மக்களைக் கொன்று குவித்து, கோர தாண்டவமாடும் அமெரிக்க அதிபரை நமது பத்திரிகைகள் 'அவர்' என்றுதான் அழைக்கின்றன.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் ஒஸாமா பின் லாடனை ஒரு தமிழகப் பத்திரிகை - ஜூனியர் விகடன் என்று ஞாபகம் 'அவன்' என்று அவமரியாதை தொனிக்க விளித்தது. இதிலிருந்து விளங்குவதென்னவென்றால் நம்மவர்களுக்கு இன்னும் அந்த அடிமைப்புத்தி போகவில்லை என்பதே. ஆக இந்த 'அவன் - அவள் - அவர்' என்பது ஒரு தற்செயல் நிகழ்வல்ல; திட்டமிடப்பட்ட ஒரு செயல் ஆகும்.

\+ + +

எதுவும் அறியாத எட்டு வயதிலேயே - மூன்றாம் வகுப்பு முதல் ஆரம்ப பாடசாலையிலேயே இந்த விஷம் விதைக்கப்படுகின்றது. ஆகவே அதற்கு எம்மை அறியாமலேயே நாம் பழக்கப்பட்டு விடுகிறோம். அதற்குப்பிறகு சமூகக் கல்வி என்றும் சரித்திரம் என்றும் சர்வகலாசாலை வரை இதே கதைதான் தொடர்கிறது.

எமது மண்ணையும் மக்களையும் அடிமைப்படுத்தி, எமது வளங்களைச் சுரண்டிக் கொழுத்த பிரித்தானிய மன்னர்களையும், மஹாராணிகளையும், மஹாதேசாதிபதிகளையும் 'அவர்' என்று மரியாதையுடன் அழைக்கின்றோம். ஆனால் எமக்காக, எமது மண்ணுக்காகப் போராடி மாண்டு போன எமது மண்ணின் மைந்தர்களை 'அவன்' என்று அழைத்து அவமரியாதை செய்கிறோம்.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். பாலர் வகுப்பில் படித்ததை பட்டதாரியாகியும் விட முடியவில்லை ஏன்? பட்டமரமான பின்னும் கூட விட முடியவில்லை.

இன்று எமது குழந்தைகளின் பாடப் புத்தகங்களை வடிவமைப்பவர்கள் அந்தக்காலத்துக் கறுப்பு துரைமார் அல்லர். இந்த இலங்கை மண்ணில் பிறந்தவர்கள்; சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பவர்கள்; ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சி கொண்டவர்கள். ஏன்? சிலவேளை சிவப்புச் சிந்தனையாளர்களாக இருக்கவும் கூடும். ஆயினும் அவர்களால் கூட அதை இன்னும் விட்டு விட முடியவில்லை என்றால் அந்த விஷவித்துக்கள் எவ்வளவு ஆழமாக எம்மில் வேரோடி இருக்கின்றன என்பது புரியும்.

காலையில் எழும்பு கடவுளை வணங்கு. சுத்தம் சுகம் தரும். சூதும் வாதும் வேதனை செய்யும். இவை நாம் பாலர் பருவத்தில் படித்த பழமொழிகள். இது குறித்து நாம் எவ்விதக் கேள்வியும் கேட்காது ஏற்றுக் கொள்கிறோம். ஏனெனில் அவை அனைத்தும் நல்ல விடயங்களே.

அதே போல்தான் "இங்கிலாந்தின் முடிக்குரிய அரசி மாட்சிமை தாங்கிய எலிஸபெத் மஹாராணியார் அவர்கள்" என்றும் "கண்டியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் சிறைப்பிடிக்கப்பட்டான்" என்றும் எமது இள நெஞ்சங்களில் பதிக்கப்பட்டு விடுகிறது. நாமும் இது குறித்து எவ்விதக் கேள்வியும் கேட்காது அப்படியே கண்மூடித் தனமாக ஏற்றுக் கொள்கிறோம். அது சரியா? பிழையா? என்று கூடச் சிந்திப்பதில்லை. எல்லாம் பழக்கம் பழக்கதோசம். ஆகவேதான் அறிவுபூர்வமாக ஆராயாமல் அதை அனிச்சையாகவே செய்யப் பழக்கப்பட்டு விட்டோம். நாம் முற்றாக மூளைச் சலவை செய்யப்பட்டு விட்டோம். மூன்றாம் வகுப்பில் தொடங்கியதை முதுமாணிப் பட்டம் பெற்ற பின்னும் விட முடியவில்லை.

\+ + +

இந்த விஷவித்துக்களை எம் இதயங்களில் விதைத்தவர்கள் யார்?

வெள்ளையனின் காவல் நாய்களான நமது கறுப்புத் துரைமார் தனது தலைமயிர், கண்மணி, சருமம் கறுப்பாக இருக்கிறதே என்று கவலைப்பட்டவர்கள். தனது தலைமயிர் தங்க நிறமாக இல்லையே, தனது கண்மணி நீலநிறமாக இல்லையே, தனது தோல் வெள்ளை நிறமாக இல்லையே? என்று வேதனைப்பட்டவர்கள்.

அந்தத் துரைமார் ஆங்கிலத்தில் படித்தது மட்டுமல்ல; ஆங்கிலேயனைப் போலவே ஆங்கிலத்தில் தான் சிந்தித்தார்கள். எந்த அளவுக்கென்றால்... மஹாவெலி கங்கை தன் காலடியில் கரைபுரண்டோடிய போதும் கூட, அவர்கள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்த தேம்ஸ் நதியை வர்ணித்துத்தான் கவிதை புனைந்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இந்த விடயத்தை எனது ஆங்கில ஆசான் ஒருவர் கேலியும் கிண்டலும் தொனிக்க நகைச்சுவையோடு குறிப்பிடுவது என் ஞாபகத்துக்கு வருகிறது.

இந்த விஷவித்துக்களை விதைத்து விட்டு, செத்துத் தொலைத்த கறுப்புதுரைமார்களை, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடிமை நாய்களை, தோண்டியெடுத்துத் தூக்கில் தொங்கப்போட்டால் கூட அது அவர்களுக்குத் தகுந்த தண்டனை ஆகாது.

ஏறக்குறைய 15 வருடங்களுக்கு முன்பு என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டு என் சிந்தனையைத் தூண்டிவிட்ட எனது நண்பனுக்கு நன்றி.

உஸ்மான் மரிக்கார்

## சிறுவர் துஷ்பிரயோகம்

(டாக்டர் பெர்னாந்து)

சிறுவர்கள் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்களைச் சிறுவர்கள் தமது பெற்றோர், காவலர்கள், ஆசிரியர்கள் போன்றோரிடம் இருந்து பயனுள்ள வகையில் பெற்றுத் தம்மைப் பாதுகாத்து வாழத் தெரிந்திருத்தல் வேண்டும்.

14 வயதுக்குட்பட்ட பிள்ளையினை வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துவது தண்டிக்கப்படத்தக்க குற்றமாகும். மத்திய கிழக்கில் தொழில் புரியும் பெற்றோரின் பிள்ளைகள் இத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதுடன், வயது சென்ற பெண்கள் இதற்கு உடந்தையாக உள்ளனர்.

இத்தகைய சீர்கேடுகளை உடனுக்குடன் சட்டத்தின் முன் கொணருதல் பொது மக்களின் கடமையாகும்.

# வெளிச்ச வாசல்

## புறக்கணிக்கப்படும் காஷ்மீரின் துயரம்

ஆங்கிலத்தில்: வஸீம் ஷௌாத் தமிழில் : அபூ அஸ்ஸாஸ்

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை அதிகமாக அலைக்கழித்த எண்ணம் என்னவெனில் காஷ்மீர், செச்னியா, பலஸ்தீனம் உட்பட உலகத்தின் பிரச்சினையுள்ள அத்தனை இடங்களிலும் பின்னணியில் இருப்பவர் சதாம் ஹுஸைன் என்பதுதான். சதாம் ஒரு கொடூரமான சர்வாதிகாரிதான். பெருந்தீங்குகளை ஏற்படுத்திய ஈரானுடனான போரை எட்டுவருடங்களாக நடத்தியவர். சொந்த மக்களைச் சிரமப்படுத்தியவர். ஆனால் ஆட்சிக் கதிரையில் இருந்து அவ்வாறான குற்றங்களைச் செய்தவர் அவர் மட்டும்தானா?

இந்தியா தன்னை மிகப் பெரும் ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொள்கிறது. ஆனால் அது காஷ்மீர் மக்களுக்கு இழைத்துள்ள குற்றங்கள் மிகப் பெரும் கொடுமைகளுக்குச் சற்றும் குறைவானதாக இல்லை. இன்று வரை கணக்கெடுப்பை நடத்துவதில் டெல்லி நழுவல் போக்கையே கொண்டிருக்கிறது. அங்குள்ள மக்களின் தன்னாதிக்கத்தைத் தட்டிக் கழித்து விட்டு இப்பிரச்சினை பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான எல்லைப் பிரச்சினையாக மட்டும் காட்டுவதில் வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. காஷ்மீர் பற்றி சர்வதேச அரங்கில் பாகிஸ்தான் கேள்வி எழுப்பும் போதெல்லாம் அது ஒரு அற்ப விடயமாகத் தட்டிக் கழிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| கொலை செய்யப் பட்டவர்கள் | 84,850 |
| கற்பளிக்கப்பட்ட பெண்கள் | 8,997 |
| உயிருடன் கொளுத்தப்பட்ட மாணவர்கள் | 692 |
| விதவையாக்கப்பட்ட பெண்கள் | 21,175 |
| அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்கள் | 103,403 |
| காயமடைந்தவர்கள் | 92,563 |
| கைது செய்யப்பட்டவர்கள் | 102,403 |
| அழிக்கப்பட்ட கட்டடங்கள் | 103,920 |



(தகவல் : காஷ்மீர் தொடர்பூடக நிலையம்)

உலகம் காஷ்மீர் பற்றி இதுவரை பெற்றிருக்கும் அளவை விட மிக அதிகமான கவனத்தைப் பெற்றிருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அங்கு துன்பப்படும் தங்களது சகோதர சகோதரியர் குறித்து தங்களுக்குள்ள பொறுப்பை முஸ்லிம்களே அலட்சியமாக இருந்து வந்துள்ளனர். முஸ்லிம் அரசுகள் இதை விட மோசமாக தங்களது போக்கைக் கொண்டுள்ளனர். 'அடுத்த நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுதல்', 'தேசிய நலன்' ஆகிய போர்வைகளுக்குள் ஒழிந்திருந்து கொண்டு காஷ்மீரைப் பொறுத்த வரை தாங்கள் மன்னிக்கப்படக் கூடியவர்கள் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர். மனித உரிமைகள் மீறல் என்பது ஒவ்வொருவரும் கவனம் செலுத்தக் கூடியதும் கவனம் செலுத்தப்பட வேண்டியதும் ஆகும். காஷ்மீர் என்பது இந்தியாவின் ஒரு பகுதி அல்ல. அதற்கு ஒரு தனித்துவமும் அதற்கென ஒரு அடையாளமும் உண்டு என ஐ.நா. சபையே ஏற்றுக் கொண்டுள்ளது. பாதுகாப்புச் சபையின் 1441 ஆம் இலக்கத் தீர்மானத்துக்கேற்ப நடந்து கொள்ளவில்லை என்பதற்காக கொதித்தெழுந்தவர்கள் காஷ்மீர் விடயத்தில் இந்தியா தீர்மானங்களை மதித்து நடக்கவில்லை என்பதைக் கண்டு கொள்ளவே இல்லை.

காஷ்மீருக்கு டிஸம்பர் 1989க்குப் பிறகு எந்த வித நிவாரணங்களும் கிடைக்கவில்லை. இந்தியா தொடர்ந்து இங்கு படைகளை அனுப்பி பேரழிவுகளை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது. தினமும் மரணங்களை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

காஷ்மீரை ஏழு லட்சம் துருப்புக்களைக் குவித்து இந்தியா தனது ஆக்கிரமிப்பில் வைத்திருக்கிறது. தலைநகர் ஸ்ரீநகரில் மட்டும் மூன்று பேருக்கு ஒரு வீரர் என்றவகையில் மூன்று லட்சம் துருப்பினர் நிலைகொண்டுள்ளனர். ஒவ்வொரு தெருவின் சந்தியிலும் ஒரு பாதுகாப்பரண். வீடுகளையெல்லாம் படையினர் தங்களது தேவைக்காகக் கைப்பற்றிக் கொண்டனர். பூங்காக்கள் யாவும் மையவாடிகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. முரட்டுத்தனமான படைவீரர்கள் அழிவுகளையும் பொதுமக்களைக் கொல்வதையும் கற்பளிப்பதையும் கடமையாகக் கொண்டு செயற்படுகின்றனர். கற்பழிக்கப்பட்ட பெண்கள் சமூகத்துக்கு முகங் கொடுக்க முடியாத நிலையில் தற்கொலை செய்து கொள்கிறார்கள். பொஸ்னியாவில் சேர்பியர்கள் நடந்து கொண்டது போல கற்பழிப்பை ஒரு யுத்த ஆயுதமாக படையினர் கைக் கொள்கிறார்கள். இப்படியொரு முறையின் கர்த்தாவான சுலோபோடன் மிலோசெவிச் இன்று யுத்தக் குற்றவாளியாக 'தி ஹேக்'கில் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறார். ஆனால் இதேவிதமான குற்றங்களைத் தொடர்ந்து புரிந்து கொண்டிருக்கும் இந்தியாவை சர்வதேச தலை நகரங்களில் மகிழ்ச்சி பொங்க வரவேற்கிறார்கள்.

எல்லா முஸ்லிம்களையும் சொல்ல முடியாவிட்டாலும் அநேகமானோர் காஷ்மீரிகள் மீதான தங்களது பொறுப்பைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும். பிரதி வருடமும் பெப்ரவரி 5ம் திகதி பாகிஸ்தானிலும் உலகின் பல் வேறு பகுதிகளிலும் காஷ்மீர் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலங்களும் மாநாடுகளும் நடத்தப்படுகின்றன. இவ்வருடமும் பாகிஸ்தான் போலவே பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகளில் இவை இடம் பெற்றன. டொரன்டோவில் மிகப் பெரிய மக்கள் ஒன்று கூடலில் பிரித்தானியப் பாராளுமன்ற மேல் சபை அங்கத்தவர் நாஸிர் அஹமத், கனடாவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோ கொமார்ட்டின் ஆகியோர் உரை நிகழ்த்தினர். ஒன்ராரியோ புதிய ஜனநாயகக் கட்சி உப தலைவர் அலி மல்லாஹ், யுத்த எதிர்ப்புக் கூட்டமைப்பின் இணைப்பாளர் ரிட்ச் வைமன், பலஸ்தீன பரம்பரையில் வந்தவரும் கனடாவைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான நாதியா அபூ ஸஹ்ரா, தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த வரும் ஒதுக்கல் கொள்கை எதிர்ப்புச் செயற்பாட்டாளருமான அஹமட் மோதியர் மற்றும் ஹமிட் லச்போரியா ஆகியோர் இதில் கலந்து கொண்ட ஏனைய முக்கியஸ்தர்களாவர்.

இந்திய பிரதிப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான எல்.கே.அத்வானி யுத்தக் குற்றங்களுக்காக விசாரிக்கப்பட வேண்டும் என்று நாஸிர் அஹமத் வேண்டு கோள் விடுத்தார். கனடா பாராளுமன்ற உறுப்பினரான ஜோ கொமார்ட்டின், இந்தியாவின் கொடூரங்களிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்க கனடாவின் படையினர் காஷ்மீருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். அதே போல ஆப்கானிஸ்தானுக்கும் ஈராக்குக்கும் கூட அவர்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனக் கூறினார்.

அரச பயங்கரவாதத்தை மிகப்பரந்த அளவில் மேற்கொள்ளும் குற்றவாளியாக இருந்தும் எல்லாக் கொடுங்கோலாட்சியும் போலவே, இந்தியா பயங்கரவாதம் என்று பெயரிட்டுக் கொண்டு காஷ்மீரிகளின் உரிமைகளை மறுத்து வருவதைக் காண்கிறோம். இந்தியாவின் கொடுமைகள் துன்புறுத்தல்கள் பற்றிய விவரங்களை காஷ்மீர் ஊடக நிலையம் புள்ளி விபரத்தோடு வெளியிட்டிருக்கிறது.

2002ம் ஆண்டில் மாத்திரம் இந்தியா 4093 பேரைப் படுகொலை செய்திருக்கிறது: இதில் 150 பேர் பெண்களாவர். 915 பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போது கொல்லப்பட்டவர்கள். இவர்களில் 102 பேர் சிறுவர்கள். அதே காலப்பகுதியில் 713 பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். 1018 பெண்கள் விதவைகளாகியிருக்கிறார்கள். 2898 குழந்தைகள் அநாதைகளாகித் தவிக்கின்றனர். இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டபின் காணாமல் போனோர் தொகை 554. தடுத்து வைப்பின் போது 8900 பேர் சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள். 1039 வீடுகள், கடைகள் என்பன எரிக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தில் கற்பழிப்பை ஒரு ஆயுதமாகப் பயன் படுத்துவது போல, இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் காஷ்மீரிகளின் வீடுகளையும் கடைகளையும் குறிவைத்துச் சேதப்படுத்துவதன் மூலம் அவர்களை அவர்களது பூமியிலிருந்து விரட்டுவதற்கான முயற்சியைச் செய்து வருகிறார்கள். இந்த நுட்பத்தை சேர்பியர்கள் வெற்றிகரமாக மேற்கொண்டார்களெனினும் அந்த முயற்சியியை விட எந்த விதத்திலும் குறையாமல் ஸியோனிஸ்டுகள் பலஸ்தீனத்திலும் இந்தியர்கள் காஷ்மீரிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் மிதவாத முஸ்லிம்களும் அமெரிக்கா மீது எரிச்சலுறுகின்றனர்

முன்பு மிதவாதப் போக்கை கடைப்பிடித்த இந்தோனேசிய முஸ்லிம்கள் ஏன் மாறிவிட்டனர்? இக்கேள்விக்கான பதிலைக்காண விளைகிறது அமெரிக்க அரசாங்கம். எதிர்பாராத வகையில் ஏற்பட்ட இந்த மாற்றத்தையடுத்து இந்தோனேசிய முஸ்லிம்களின் மனதை வெல்ல அமெரிக்க அரசாங்கம், அமெரிக்க புத்திஜீவிகள் சிலரை இந்தோனேசியாவுக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ளது. இந்த முயற்சி பெரும் தோல்வியடையக் கூடியதும் கடினமானதும் என்கிறார் ஜோன் வோ்ஸ் என்பவர். இதற்குப் பிரதான காரணம் அமெரிக்கா மத்திய கிழக்கிலோ அல்லது உலகம் முழுவதிலுமோ வாழும் முஸ்லிம்களின் நல்லபிப்பிராயத்தை கொஞ்சமேனும் பெறவில்லை என்பதை அவர் ஆதாரம் காட்டுகிறார்.

முன்பு நிலைமை இப்படி இருக்கவில்லை. முன்பு அமெரிக்கா சென்று கல்விகற்றவர்களும், புத்திஜீவிகளும் ஓரளவேனும் அமெரிக்கா பற்றிய நல்லபிப்பிராயத்தை கொண்டிருந்தனர். இந்தோனேசியா முஸ்லிம்கள் மத்தியில் அமெரிக்க வெறுப்புணர்ச்சி பரவலாகவும் ஆழமாகவும் இருந்ததில்லை. உலக முஸ்லிம்கள் மத்தியிலும் நிலைமை இப்படியாகத்தான் இருந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் மேற்கில் கம்யூனிசம் தோல்வியடைந்ததிலிருந்து இஸ்லாம் தொடர்பான அமெரிக்காவின் போக்கினால் முஸ்லிம் மக்கள் மத்தியில் இந்த மாற்றம் ஏற்படத் தொடங்கிவிட்டது.

இந்தோனேசிய முஸ்லிம்கள் மீதான அமெரிக்காவின் முக்கிய மாற்றம் - செப்டம்பர் 11ஆம் திகதிய தாக்குதலின் பின்பே அதிகமாற்றத்திற்குள்ளாகிறது. இத்தாக்குதல்களையும் இந்தோனேசியாவில் நடைபெற்ற தாக்குதல்களையும் இந்தோனேசியாவில் வாழும் பெரும்ளவு முஸ்லிம்கள் கண்டித்துள்ளனர். ஆனாலும், இந்தோனேசியா உட்பட உலகில் இஸ்லாத்திற்கும் அமெரிக்காவுக்குமிடையிலான போர் வெடித்து விட்டதாகவே அமெரிக்கா கருதுகிறது.

செப்டம்பர் 11 ஆம் திகதி தாக்குதலின்பின் அமெரிக்கா இஸ்லாத்தின் மீது வீண்பழி சுமத்தத் தொடங்கி உள்ளது. இத்தாக்குதலைத் தொடர்ந்து "கலாசார மோதுகை" நடைபெறுகிறது என்பதை அமெரிக்கர்கள் பலர் மறுத்த போதும், இஸ்லாத்திற்கும், அமெரிக்காவுக்குமிடையிலான போர் தொடங்கி விட்டதை அனைவரும் உணர்கின்றனர்.

முன்னர் அமெரிக்காவின் முதலாவது எதிரியாக இருந்த கம்யூனிஸத்தின் இடத்தை இப்போது இஸ்லாம் பிடித்துள்ளது என்பது போன்ற மாயை நிலை மக்கள் மனதில் விதைக்கப்பட்டுள்ளது. ஆனால் அமெரிக்கா இதனை மறுத்தே வந்துள்ளது.

முஸ்லிம் அல்லாதோர் தொடர்புடைய பல பயங்கரவாதச் சம்பவங்கள் அயர்லாந்து உட்படப் பல இடங்களில் நடைபெற்ற போதிலும் பயங்கரவாதத்தை இஸ்லாத்துடன் சேர்த்து முத்திரை குத்திக் காட்டுவது சகஜமாகி விட்டது.

முஸ்லிம்கள் தொடர்பாக அமெரிக்கா ஒரு வெறுப்பான போக்கைக் கடைப்பிடிக்கிறது என்ற அபிப்பிராயம் இந்தோனேசிய மக்களிடம் உள்ளது. அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்கள் நடாத்தப்படுகின்ற முறையும் அங்கு சென்று வந்தவர்கள் முன்னோக்கிய கசப்பான உண்மைகளும், அனுபவங்களும் இதற்குக் காரணம்.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்களுக்குக் காரணம் மூல வளங்கள் மீதான அக்கறையேயன்றி உஸாமா பின்லாடனை நோக்காகக் கொண்டதல்ல என்று இந்தோனேசிய மிதவாத முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

மத்திய ஆசியாவில் இருந்து ஆப்கானிஸ்தான் ஊடாக இந்து சமுத்திரம் வரை எண்ணெய்க் குழாய் ஒன்றினை (Oil Pipe Line) அமைக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷைச் சூழவுள்ள ஒரு குழுவினர் பன்னெடுங்காலமாக திட்டமிட்டு வந்த போதிலும், அதற்காக ஆப்கான் தலிபான் அரசுடன் இணக்கங்காண முடியவில்லை.

எனினும் இந்நோக்கத்தை அடைவதற்காக சாதாரண ஆப்கான் மக்களுக்குக் கடும் சேதமிழைத்த வான்குண்டுத் தாக்குதல்களில் ஈடுபட அமெரிக்கா சற்றேனும் தயங்கவில்லை.

மனித உரிமைகளைக் கடுமையாகப் பேணும்படி பிற நாடுகளை நிர்ப்பந்திக்கும் அமெரிக்காவின் இரட்டை வேடமும், இறுமாப்பும் மிகவும் வெளிப்படையானவை அல்லது மக்களுக்கு நன்கு தெரியவந்துள்ளது.

ஈராக் மீதான தாக்குதலும் மக்களின் எரிச்சலுக்கு முக்கிய காரணமாகும். இந்த யுத்தம் சர்வதேசச் சட்டத்தை வெளிப்படையாக மீறியதாக அமைந்ததுடன், ஐ.நா. சபையின் அதிகாரத்தை முற்றாக நிராகரித்ததாகவும் இருந்தது.

அமெரிக்கா ஆதிக்க வெறியினால் உந்தப்பட்டுச் செயற்படுகிறது என்பதை அந்நாட்டுத் தலைவர்களின் கருத்துக்கள் நன்கு வெளிக்காட்டின. இத்தாக்குதலின் நோக்கம் ஈராக்கிய எண்ணெய் வளம் மீதானது என்பதைப் பல அமெரிக்கர்கள் மறுத்துரைத்தனர்.

தமது நோக்கம் சதாம் ஹூஸைனின் ஆட்சியைக் கவிழ்த்தி, ஈராக்கை ஒரு நவீன ஜனநாயக நாடாக மீளமைத்து மத்திய கிழக்கின் பிற நாடுகளையும் அவ்வழிக்குக் கொணர்வதே என்றும் அவர்கள் கூறினர். ஆனால் இதற்காகப் பலியாக்கப்பட்ட சாதாரண பொதுமக்களின் எண்ணிக்கையினை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

எண்ணெய் வளம் மீதான ஆக்கிரமிப்பை நோக்காகக்கொண்ட அமெரிக்காவின் நயவஞ்சகத்தனமும் இரட்டை நாடகமும், இறுமாப்பும் பின்னணியில் உள்ளதை இந்தோனேசியாவில் பல முஸ்லிம்கள் உணர்ந்துள்ளனர்.



பல அமெரிக்கர்கள் கூடத் தமது தலைவர்கள் மீது வெறுப்புற்றுள்ளனர். அவர்களில் 'மிருகத்தனமான நாடு' (Rogue Nation) எனும் புத்தகத்தின் ஆசிரியர் கிறைட் பிரஸ்தோவிட்ஸ் என்பவராவர். இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள அவர் எழுதியுள்ளதாவது;

"இந்தோனேசியாவோ, மலேசியாவோ மத்திய கிழக்கு நாடுகளுடன் முக்கிய தொடர்புகளைக் கொண்டதாக இல்லை. எனினும் இஸ்ரேலிய, பலஸ்தீன சிக்கல்கள் பற்றி உரையாடாதோர் அங்கு மிகச் சிலரே"

"அமெரிக்க-இஸ்ரேலியத் தலைவர்கள் ஒருவருக்கொருவர் சுமுகமாக உரையாடுவதையும், இஸ்ரவேலர்கள் பலஸ்தீன இலக்குகளைத் தாக்குவதற்காக அமெரிக்க ஆயுதங்களைப் பாவிப்பதையும் மக்கள் தொலைக்காட்சியில் காண்கின்றனர். இதன் விளைவு; அமெரிக்கா இஸ்லாத்தைத் தாக்குகின்றதாக அந்நாட்டின் பழைய நண்பர்கள் உணர்ந்து முடிவு கட்டுகிறார்கள்."

சார்மக்வீ ஜோன்சன் எனும் அமெரிக்கரும் 2002ல் வெளியிட்ட Blow Back எனும் புத்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார்.

"உலகில் எமது பணி புனிதமானது; எமது செயல்கள் அனைவரினதும் நன்மைக்காகவே என நாம் கடுமையாக நம்புகிறோம். எமது நாட்டின் செயல்கள் காரணமாகத் துர்விளைவுகள் ஏற்படினும் அச்செயல்களின் பின்னணி நோக்கம் புனிதமானது என நாம் கருதுகிறோம்."

"ஆனால் பனிப்போர் முடிந்த பத்து ஆண்டுகளின் பின் நடைபெற்றவற்றை ஒட்டுமொத்தமாக நோக்கினால், பின்வரும் உண்மைகள் தெளிவாகின்றன.

- ராஜ தந்திரத்தை மதித்துச் செயற்படுதலை அமெரிக்கா பெருமளவு கைவிட்டுள்ளது. அவ்வாறே பொருளாதார உதவி, சர்வதேசச் சட்டம் என்பனவையும் கைவிடப்பட்டுள்ளன.

சில சர்வதேச தாபனங்கள் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை மீது ஆதிக்கம் செலுத்துகின்றன.

செருக்கான போக்கும், இராணுவ பலமும், நாணயத் தில்லுமுல்லுகளும் மிகைத்துள்ளன. இதன் விளைவாக உலகம் ஒரு பாதுகாப்பற்ற இடமாக மாறியுள்ளது.

நாடுகளிடையே தலைமைத்துவம் பெற அமெரிக்கா விரும்பின் பிற நாடுகளினால் அதனைத் தடுக்க முடியாது. எவ்வாறெனினும் பிற நாடுகளின் மரியாதையினையும் நம்பிக்கையினையும் பெற்ற ஒரு நாடாக வேண்டுமெனின் அமெரிக்கா பெருந்தன்மையுள்ள ஒரு நாடாக தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். பிற நாடுகளின் வெறுப்பையும், பீதியையும் ஏற்படுத்தும் நாடாக இருக்கக் கூடாது."

ஆகவே இந்தோனேசிய முஸ்லிம்களின் நம்பிக்கையினைப் பெற வேண்டுமெனின் அமெரிக்கா பிறரின் உணர்வுகள், எண்ணங்கள் என்பவற்றுக்கு மதிப்பளித்து நடத்தல் வேண்டும்.

ஆனால் இவை மீது அமெரிக்கா கரிசனை, அக்கறை செலுத்துவதாகத் தென்படவில்லை. ஈராக்கிய மக்களின் ஒத்துழைப்பைப் பெறத் தவறியுள்ளமை அமெரிக்காவின் இந்தப் பலவீனத்தைத் தெளிவாகக் காட்டுகிறது.

இக்குறைகளை அமெரிக்கா சீர்படுத்திக்கொள்ள முடியாவிடின்; பணபலமோ, படைபலமோ பிற நாடுகளின் ஒத்துழைப்பையும், அனுதாபத்தையும் ஒரு போதும் ஈட்டித் தரும் என நம்பவும் முடியாது.

இஸ்லாம் தொடர்பான தனது கருத்தை அமெரிக்கா மாற்றிக் கொள்ளாத வரை, இந்தோனேசியாவின் பெரும்பான்மையினரது மனங்களை வெல்வது அவ்வளவு இலகுவானதாக இருக்கமாட்டாது.

*ஜகர்த்தாவைச் சேர்ந்த எஸ்.செய்திமானின் கட்டுரையுடன் சில விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளது.*
The Ishaland 15.09.2003
*தமிழில் :* **மதனி**

# மீனுக்கு வரி விதிக்கும் புலி

*(மருதமுனைச் செய்தியாளர்)*

எல்லை கடந்து சென்று கடலில் மீன்பிடிப்பதனால் பிடித்து விற்கப்படும் மீனின் பெறுமதிக்கு 100 க்கு 10 வீத வரி செலுத்தும் விதிமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் சம்பந்தமாகத் தெரியவருவதாவது. மருதமுனை மத்திய சந்தையில் கடல் மீன்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவது சம்பந்தமாக மீன் வியாபாரிகளிடம் கேட்ட போது. முஸ்லிம்களின் எல்லைக்குள் முஸ்லிம்களால் பிடிக்கப்படும் மீன்களுக்கு வரி இல்லை. மாறாக எல்லையைக் கடந்து பெரிய நிலாவணைக் கிராமத்தில் மீன்கள் பிடிக்கப்பட்டால் ஏலத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு மேலதிகமாக அத்தொகைக்கு 10 வீத வரி செலுத்தி விட்டுத்தான் மீனைப் பெறமுடியும். இவ்வரி தமிழ் மீனவர்களுக்கு இல்லை. இதனால் பெரிய நீலாவணையில் பிடிக்கப்படும் மீன்களை முஸ்லிம் வியாபாரிகள் சென்று வாங்குவது குறைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக புலிகளின் அரசியல்துறைப் பணிமனையில் முறையிடவில்லையா? என வினவியபோது. வரி செலுத்தத்தான் வேண்டும் எனக் கட்டளை இடுவார்கள். வருமானத்தை இழக்க யாரும் விரும்பமாட்டார்கள் இல்லையா? என ஒரு மீன் வியாபாரி தெரிவித்தார்.

# முஸ்லிம் வியாபாரிகளை மிரட்டல்

காத்தான்குடியிலிருந்து படுவான் கரைக்குச் சென்று வியாபாரம் செய்யும் முஸ்லிம் வியாபாரிகளை புலிகள் தனித்தனியாக அழைத்துச் சென்று நீங்கள் இராணுவத்திலிருந்தீர்களா? ஜிஹாத்திலிருக்கின்றீர்களா? பொலிஸில் இருந்தீர்களா? என்று துருவித் துருவிக் கேட்டு மிரட்டுகிறார்கள்.

படுவான் கரையில் வியாபாரம் செய்வதென்றால் முஸ்லிம்கள் மட்டும் அவர்களுடைய புகைப்படமொன்றும், தேசிய அடையாள அட்டை பிரதியையும் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்று புலிகள் கட்டளை பிறப்பித்துள்ளார்கள். தும்பு மிட்டாய் வியாபாரிகளிடமும் கப்பம் கேட்பது கேவலமாக உள்ளது.

சே. முபயிதீன், காங்கையனோடை

# ஈரம்

இலங்கையின் சிறந்த துறைசார் நிபுணர்கள், கலாநிதிகள், பேராசிரியர்களின் "தற்கால நவீன யுகத்தின்" பல்கலையும் தழுவிய வடிவத்தில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அஷ்ரஃப் ஞாபகார்த்த தகவல் வள நிலையத்தின் நூலக ஊழியர்களினால் முதல் முதலாக "ஈரம்" எனும் புத்தகம் உருப்பெற்று வருடாந்தம் வெளிவரவுள்ளது. இதற்கான துறைசார் நிபுணர்களுடைய ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளது.

சமாதானம் பெப்ரவரி இருபத்து இரண்டா? தெளிவுபடுத்துங்கள்! உரிமைகள் வருடங்களாகத் தளைக்கின்றது. மொழிகளின் சத்தம் சங்கடங்கள் என்று சுவீகரித்துக் கொள்பவர்கள் இனவாதிகளே. காத்திருப்பதற்கு எங்களுக்குக் காலமில்லை. தாழ்வுகள் இருந்தாலும் தெளிவுகள் காணவேண்டும். எமது கண்களுக்கு புலப்படுபவைகள் நம்மால் அறிய முடியாமல், புத்தி வெகு தூரத்தில் இருப்பதாக உணர முடிகிறதே தவிர, புரிந்து கொள்ள முடியவில்லை என்பதல்ல. வாழ்க்கை வாழ்வதற்கே ஆழ்வதற்கல்ல. தனக்குள் வாழ்வுண்டு என்கிறார்கள் ஈரம் ஆசிரியர் குழுவினர்.

# சொல்லி விடு

இன்னும் ஏன் மௌனம்
அன்னப் பறவை கதை கேட்டு
வியத்து நிற்கும் நீ
உன் கதையை சிட்டுக் குருவியிடம்
போய் சொல்லி விடு
சிட்டு குருவி சிறகுகள் கேட்டு
கை விரிக்கும் நீ
வானத்து காரிருள் பார்த்து
ஓடி ஒழிவதும்
வியப்பிலும் வியப்பே!

எட்டுத் திசையிலும் பறந்து வரும்
பறவை அது – அதனுடைய
கதையை யார் கேட்பது
கூட்டம் கூட்டம்
சிட்டுக் குருவிக் கூட்டம்
என்ன ஒற்றுமை
அழகான வானத்து
நீல நிறத்துக்குள்ளும்
காரிருளுக்குள்ளும்
சுதந்திரமாய் பறந்து வரும்
பறவை அது.

புன்னகை பூவே
புது யுக பூவே
உன் மலர்வுதான்
இன்னும் எனக்கு புரியவில்லை!

சிந்தனையை விரிவு படுத்து
ஏன் இன்னும் தயக்கம்
என்ன செய்தோம் என்று.
ஏன் இன்னும் மௌனம்
கடல் அலைகள் ஓய்வதில்லை
வற்றாத நீர் ஊற்று நாம்
எத்தனையோ பதவிகளும்
பட்டங்களும்
போலி வாழ்வு தரும் மாயம்தான் இது
அதிசயப் பூ நீ
உன் கண்களை விழித்து புறப்படு
காலம் பதில் சொல்லும்!

**மு. ஹ. றைசுல் ஹக்கீம்**
தேசிய இளைஞர் காங்கிரஸ் தலைவர்
மருதமுனை

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 180/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 360/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 720/-
சந்தா விபரம்!

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக் கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

## சிறந்த நூல்களுக்குப் பரிசு

திறமைகளின் தேடல் அடிப்படையில் கிண்ணியா உதயக் குமுறல் கலை இலக்கிய வட்டம் சிறந்த நூல்களுக்குப் பரிசும் சான்றிதழ்களும் வழங்கத் தீர்மானித்துள்ளது. இலங்கைப் படைப்பாளிகள் தங்களால் எழுதப்பட்ட கதை, கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, சிறுவர் இலக்கியம் போன்ற நூல்களை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

*செயலாளர்*
*கிண்ணியா உதயக் குமுறல்*
*கலை இலக்கிய வட்டம்*
*இல.42, ஜாவா வீதி,*
*கிண்ணியா-06.*

முஸ்லிம் குரலுக்கு
நாட்டின் நாலாதிசையிலிருந்தும்
செய்தியாளர்கள் விற்பனை முகவர்கள்
வேண்டப்படுகின்றனர்.
01 ஒக்டோபர் 2003க்கு முன்
பூரண விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## உண்மைகளைச் சமூகத்தின் வெளிச்சத்துக்கு கொணர்டுவரும் முஸ்லிம் குரல்

இலங்கை நாட்டிலே தமிழ் மக்களுக்கென்று சில தமிழ் தினசரிகளும், சிங்கள மக்களுக்கென்று சில சிங்கள தினசரிகளும் வெளிவந்து கொண்டிருக்கும் வேளையில்- முஸ்லிம்களுக்கென்று வெளியாகும் பத்திரிகைகளில் முஸ்லிம் குரல் குறிப்பிடத்தக்கதாகும். ஒளிவு மறைவின்றி உண்மைகளை சமூகத்தின் வெளிச்சத்துக்கு கொண்டுவருவதில் முக்கிய பங்குவகிப்பது முஸ்லிம் குரலாகும்.

எம்.எஸ்.எம். அப்துல் மலிக்
பொத்துவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த கதையின் நகல்

# நஸீபு இல்லாத நாயகி... இந்த மெஹ்ரூன்!

பிள்ளை பிறந்ததும் பெற்றோர் பெருமகிழ்ச்சியோடு வைத்த பெயர்தான் மெஹ்ருன்னிஷா என்பது! ஆனால் எல்லோரும் செல்லமாக அழைப்பதுதான் மெஹ்ருன்.

மெஹ்ருன்..... நடுத்தர குடும்பத்தில் மூத்தவளாகப் பிறந்தவள்தான். மாளிகாவத்தையிலுள்ள கிரிக்கெட் ஸ்டேடியத்தின் பக்கத்தில்தான் மெஹ்ருனின் குடும்பம் இருக்கிறது. வாப்பா இருக்கும் காலமெல்லாம் வறுமையின் நிழல் என்னவென்று அறியாமல் வளர்ந்தவள்தான் இவள்.

மெஹ்ருனை தொடர்ந்து. இரண்டு தங்கைகள். ஆண்வாரிசுக்கு அந்தக் குடும்பம் கொடுத்து வைக்கவில்லை. உம்மா ஜமிலாம்மா தையல் மெஷினோடு காலத்தை கழிப்பவள். வாப்பா இறந்ததும்தான். மூத்தவளை மெஹ்ருனை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுக்கும் கடமையின் கஷ்டம் உம்மாவுக்குப் புரிந்தது.

மெஹ்ருனின் தாய் வழியில் சில வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள். நாலுமாதம் பத்துநாள் இத்தா இருந்துவிட்டு வெளியே வந்ததோடு. தன் மகள் மெஹ்ருனை கரையேற்றி விடும் கைங்கரியத்தில் முழு மூச்சாக இறங்கினாள் மெஹ்ருனின் தாய்... ஜெமிலா.

தன்னைச் சேர்ந்த பணக்காரர்கள் ஏதோ கைகொடுத்தார்கள். மாப்பிள்ளையும் கஷ்டப்படாமல் வந்து அமைந்தது. யாரை யாரையோ பிடித்து. எப்படியோ திருமணத்தை முடித்து விட்டாள்.

மாப்பிள்ளை மலையகத்தைச் சேர்ந்தவர். நீண்ட காலமாக டீ கடைகள் பலவற்றில் வெயிட்டராக. டீ மேக்கராக. சமையற்காரராக எல்லாம் அனுபவம் பெற்றவர். நல்லவர் போலத்தான் காட்சியளித்தார். தாய் தந்தையர், குடும்பம் என்று எதுவும் இல்லாத மாப்பிள்ளை. கொழும்பிலேயே தன் வாழ்வை நீண்ட காலம் ஓட்டி விட்டார். மெஹ்ருனை கைப்பிடித்ததும். அவர்களது வீட்டு மாப்பிள்ளையாக மாறிவிட்டார்.

**-அபூ ருஸைக்-**

ஓராண்டு காலம் உருண்டோடியிருக்கும். ஒரு பெண் குழந்தையை மெஹ்ருன் பெற்றெடுத்தாள். ஷும்ரத் பானு என்று குழந்தைக்கு பெயர் சூடி மகிழ்ந்தாள். ஷும்ரத் பானு பிறந்த மறுவருடம்தான் 1983 ஜூலை கலவரம் வந்து நாடு அல்லோலகல்லோலப்பட்டது.

கலவரத்தைத் தொடர்ந்து வாரக்கணக்கில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதே! அந்த ஊரடங்கிய வேளையில் ஒருநாள், நள்ளிரவில் திடீரென நெஞ்சுவலி மெஹ்ருனின் கணவருடைய உயிரைக் குடித்து விட்டது.

மெஹ்ருன் இளம் வயதிலேயே ஓராண்டு கால தாம்பத்தியத்திலே விதவையாகி விட்ட சோகம், அக்கம் பக்கத்தாருக்கெல்லாம் தாங்க முடியவில்லை. இரு தங்கைகளும் இப்போது கல்யாணப் பருவத்தில் கால் வைத்து எழுந்து நிற்கின்றனர். அவர்களுக்கு கல்யாணமெல்லாம் எப்படி முடியும்....

நாட்கள் கனவேகத்தோடு ஓடின. எப்படியோ வாயைக் கட்டி. வயிற்றைக் கட்டி ஷும்ரத் பானுவை வளர்த்து வரலானாள். இப்போது ஷும்ரத் பானுவுக்கு வயது பத்தாகி விட்டது. வீட்டு வறுமை, மெஹ்ருனை சிந்திக்க வைத்தது. இறுதியில் வெளிநாட்டுக்கு ஹவுஸ் மேட்டாகப் போவது எனத் தீர்மானித்து. போயும் விட்டாள்.

மெஹ்ருன் டுபாய்க்குப் போய்விட்டாள்.

தனது ஆசை மகள் ஷும்ரத் பானுவை தன் தாய் ஜெமிலாவிடம் ஒப்படைத்து விட்டே விமானம் ஏறினாள். போன புதிதில் மெஹ்ருனிடமிருந்து சம்பளம், கடிதம் எல்லாம் முறையாக வந்தன.

மெஹ்ருன் டுபாய் போன மறு வருஷமே மகள் ஷும்ரத் பானு பெரிய "மனுஷி"யாகி விட்டாள். உடனே மெஹ்ருனுக்கு ஜெமிலாம்மா அறிவித்தாள். மெஹ்ருனிடமிருந்து பதில் வந்தது. அதில் -

"உம்மா.... என் மகள் சடங்காகி விட்டாள் என்ற சங்கதி எனக்கு மிச்ச சந்தோஷம். என் ஒரே மகள் பெரிய மனுஷியானதை ஒட்டி என்னாள் ஓடி வந்து பார்க்க முடியவில்லை. என் கையால் என் மகளுக்கு ஆக்கிப் பொங்கிப் போடவும் எனக்கு நாஸீபு இல்லாமல் ஆகிவிட்டது. நீங்கத்தான் மகளை நல்லா கவனிச்சி பார்க்கணும். தங்கச்சிமார்களிடமும் மகளை நல்லா பார்த்துக் கொள்ளும்படி சொல்லுங்கள். நான் செக் செஞ்சி அனுப்புறேன்..." என எழுதியிருந்தாள்....

ஷும்ரத் பானுவின் ஷர்த்து எல்லாம். ஜெமிலா உம்மம்மாதான் பார்த்தார்கள். மகள் டுபாயிலிருந்து பணம் அனுப்புவாள். மாளிகாவத்தையிலுள்ள அந்த நான்கு பெண் ஜென்மங்களும் மெஹ்ருன் அனுப்பும் பணத்தில்தான் காலத்தை ஓட்டி வரலாயின.

காலம் ஓடிக் கொண்டேயிருந்தது. மெஹ்ருன் டுபாய் போய் ஆறு வருடங்கள் ஆகிவிட்டன. இடையில் ஒரு தடவையாவது இலங்கைக்கு வரவேயில்லை. ஏன் வரவில்லை? தனது தாய்- தங்கையர் இருவர் - ஒரே மகள் ஆகிய நால்வரையும் பார்க்கவாவது ஒருமுறையாவது வந்து விட்டுப் போகலாமே! ஏன் வரவில்லை?

முதலில் போன வீட்டில் மெடம் கொடுமைக்காரியாம். சதாவும் சண்டைதான். சம்பளமும் பாக்கியிருந்தது. மெடம் அடிக்க வேறு செய்வாளாம். எப்படியோ அங்கிருந்து தப்பி ஓடினாளாம் மெஹ்ருன்.

இப்படி 3-4 இடங்களுக்கு மாறி மாறி மெஹ்ருன் இருந்தாளாம். எங்கேயும் இரண்டு வருடங்களுக்கு நிலைத்திருக்கவில்லையாம். இப்படி மாறி மாறி இருந்ததில், மெஹ்ருன் பாஸ்போர்ட்டைத் தொலைத்து விட்டாளாம். அதனால் சிலோன்காரர்கள் தங்கியிருக்கும் ஓரிடத்தில்தான் மெஹ்ருன் தங்கியிருக்கிறாளாம்.

இந்த செய்தியை மெஹ்ருன் ஒருநாளும் எழுதவில்லை. டுபாயிலிருந்து வந்தவர்கள் சொன்ன தகவல்தான் இது. ஜெமிலாம்மாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. "மகளே நீ சம்பாதித்தது போதும்; வந்துவிடு" என்றுதான் மெஜமிலாம்மா இப்போதெல்லாம் புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

பெற்ற மகளை ஓராண்டுக்கு மேல் வளர்க்கும் நஸீபு மெஹ்ருனுக்கு இல்லை. கால ஓட்டத்தில் மகள் ஷும்ரத் பானு பெரிய மனுஷியானாள். பெற்றவளுக்கு பக்கத்திலிருந்து பார்க்கக் கொடுத்திருக்கவில்லை.

மெஹ்ருன் வெளிநாடு சென்று பத்து வருடங்களாகி விட்டன. வருவாளா அல்லது டுபாயிலேயே மௌத்தாகி விடுவாளா என்று கேட்குமளவிற்கு எல்லோருக்கும் அலுத்துவிட்டது. ஷும்ரத் பானு பருவ எழிலில் பளபளக்கிறாள். அவளுக்கும் வயது இருபது ஆகப் போகிறது.

ஒரு வீட்டார் தன் மகளுக்கு ஷும்ரத்தை மணம் முடிக்க கேட்டு வந்தனர். ஜெமிலாம்மா மகள் மெஹ்ருனுக்கு எழுதினாள்.



ஜெமிலாம்மாவுக்கு ஹயாத்து - மௌத்து இருக்கிறது. மெஹ்ருனும் பத்து வருஷமாகியும் வரும் அறிகுறி தென்படவில்லை. இரு தங்கையரும் மணஞ் செய்யும் வாய்ப்பும் கனிந்து வரவில்லை. இந்த நிலையில் -

ஷும்ரத் பானுவுக்கு கல்யாண. ராசி மெஹ்ருன் "பேசி முடியுங்கள்" என எழுதி விட்டாள். அக்கம்பக்கத்தார் துணையுடன் பேசி முடிவாக்கப்பட்டு விட்டது. கல்யாணத்திற்கு மகள் மெஹ்ருன் பணம் அனுப்பி வைப்பதாகவும் எழுதியிருக்கிறாள்.

மகளின் திருமணத்தையாவது இந்த மெஹ்ருனுக்கு பார்க்கக் கொடுத்து வைக்குமா? அல்லது இதற்கும் நஸீபு இல்லாமல் போய்விடுமா? அல்லாஹ்தான் அறிவான்.

வெளிநாட்டில் பாஸ்போட்டை தொலைத்து விட்டு. எப்படி தாய் நாடு போய் சேருவது என்ற விபரம் புரியாமல். வருடக்கணக்கில் வெளிநாட்டிலே பெருமூச்சுவிடும் மெஹ்ருன்கள் இன்னும் எத்தனை பேரோ?

# ஒரு புலியினால் பிராமணனுக்கு ஏற்பட்ட அசம்பாவிதம்

## வங்கத்து நாடோடிக் கதை

வளர்ப்புப் புலியொன்று பிராமணன் ஒருவனை கொன்ற கதையை நீங்கள் அறிவீர்களா? இல்லாவிடில் இதோ அந்தக் கதை.

மற்றவர்களை ஏமாற்றுவதில் ஆசை கொண்ட, அயலவர்களுக்குக் குழி பறிப்பதில் திறமைசாலியான, மற்றவர்களின் பிரச்சினைகளில் மூக்கை நுழைப்பதில் வல்லவனான ஒரு பிராமணன் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன் இந்தியாவில் வாழ்ந்தான். அவன் ஒரு நாள் பெரும் காட்டின் ஊடாக பயணமொன்று மேற்கொண்டிருந்தான். அந்தக் காலத்தில் மிருகங்களும் மனிதர்களைப் போன்று பேசக்கூடிய வல்லமை பெற்றிருந்தன.

அவ்வாறு அவன் சென்று கொண்டிருந்தபோது ஒரு புலி முயலொன்றைக் கொன்று தின்ன எத்தனித்துக் கொண்டிருந்தது. அதனைக் கண்ட இந்த பிராமணன் "நீ என்னுடன் வந்தால் இதனைக் காட்டிலும் நல்ல உணவு தருவேன்" என்று கூறி அந்தப் புலியை தன் வீட்டுக்கு அழைத்து வந்தான்.

எதிர்காலத்தில் அயலவர்களுடன் ஏற்படும் பிரச்சினைகளின்போது பயனடைவதற்காகவே அவன் புலியை வீட்டுக்கு அழைத்து வந்தான். ஆனால், பிராமணன் வீட்டில் புலி ஒன்று இருப்பதை அறிந்த அயலவர்கள் பிராமணன் விடயத்தில் மிகவும் அவதானமாகவே செயல்பட்டனர். தற்போது பிரச்சினைகள் ஏற்படாதபடியால் மனித மாமிசத்தை உண்ணும் சந்தர்ப்பம் புலிக்கு வாய்க்கவில்லை.

இது விடயமாக ஒரு நாள் புலிக்கும் பிராமணனுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. கடைசியில் புலி பிராமணனை கடித்து குதறித் தின்று விட்டு மீண்டும் காட்டுக்குச் சென்று மற்றைய பிராணிகளை கொன்று தின்று தனது வழமையான அராஜகத்தைப் புரிய ஆரம்பித்தது.

இக்கதையைப் பார்த்த மாத்திரத்தில் ஒரு முக்கியத்துவமற்றதொன்றாகவே எண்ணத் தோன்றும். ஆனால். இது தான் எதிர்காலத்தில் புலிகள் இயக்கத்தினர் மூலம் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு ஏற்படப் போகின்ற அவலமாகும்.

ஆரம்பத்தில் புலிகளின் செல்லப் பிராணிகளாக இருந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தற்போது புலிகளினாலேயே விரட்டியடிக்கப் படுகின்றனர். போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவில் உள்ள அனைவரும் படு முட்டாள்கள் என்று கிழக்குப் பிராந்திய புலிகளின் தலைவர் கருணா சுவிட்சர்லாந்தில் வைத்து கூறியுள்ளார்.

தற்போது கருத்து வேறுபாட்டுக்குள்ளாகியுள்ள திருகோணமலையில் ஆண்டாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் புலிகளின் முகாமை பரிசோதிப்பதற்காக பொலிஸ் பந்தோபஸ்துடன்தான் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் சென்றுள்ளனர். முக்கால்வாசித் தூரம் பொலிஸ் பாதுகாப்புடன் சென்றவர்கள் மிகுதித் தூரத்தை தனியே சென்றுள்ளனர். அவ்வாறு சென்று வந்தவர்கள் அப்பகுதியில் அப்படியொரு முகாம் அமைக்கப்படவில்லை என்று பகர்ந்துள்ளனர்.

அவர்கள் அவ்வாறு கூறக் காரணம், புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகாமல் கடல் கடந்து தங்கள் நாட்டைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தினாலாகும் என்று கூறப்படுகின்றது.

# புகை பிடித்தலற்ற உலகை நோக்கி....! (8)

எச்.அப்துல் நாசர் (றஹ்மானீ)

"கெடுதி செய்வதுமில்லை. கெடுதி செய்தவருக்கு கெடுதி செய்வதுமில்லை" என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (இப்னு மாஜஹ்)

பிறருக்கு இடையூறு விளைவித்தல் ஹராம் என்பதை மேற்படி நபி மொழி விளக்குகின்றது. புகைத்தல் மூலம் புகைஞர்கள் அண்மித்து இருப்போருக்கு ஏற்படுத்தும் சொல்லொணா தீங்குகளை முன்னர் நாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டோம். பின்வரும் பிறிதொரு நாயக வாக்கியம் கவனிக்கத்தக்கதொன்றாகும்.



"எவரொருவர் ஒரு முஸ்லிமை துன்புறுத்துகிறாரோ அவர் நிச்சயம் என்னை துன்புறுத்தி விட்டார். எவர் என்னை துன்புறுத்துகின்றாரோ அவர் நிச்சயம் அல்லாஹ்வை துன்புறுத்தி விட்டார்" (தபரானீ)

மனிதர்கள் துன்புறும் வகையில் நடந்து கொள்வதை பொதுவாக தடை செய்த இஸ்லாம் முஸ்லிம்கள் துன்புறும் வயில் நடந்து கொள்வதை விசேடமாக தடை செய்துள்ளமையை மேற்படி ஹதீஸின் வெளிச்சத்தில் விளங்க முடிகின்றது.

"யாராவது வெள்ளைப்பூடு அல்லது வெங்காயம் உட்கொண்டு விட்டால் அந்த நிலையில் அவர் எம்மை பிரிந்திருக்கவும். எமது பள்ளிவாயிலை பிரிந்திருக்கவும் அவர் தன் இல்லத்திலேயே அமர்ந்து கொள்ளவும்" (ஸஹீஹுல் புகாரீ. ஸஹீஹு முஸ்லிம்)

வெள்ளைப்பூடு. வெங்காயம் போன்ற பிறருக்கு வெறுப்பையேற்படுத்தும் துர்வாடையுள்ள உணவுப் பதார்த்தங்களை உண்டவர் அந்நிலையில் மக்களோடு இணைந்திருப்பதையும். மக்கள் கூடும் இடங்களுக்கு சமுகமளிப்பதையும் மேற்கண்ட நபி மொழி கண்டிப்பாகத் தடை செய்கின்றது. புகைஞர்களின் வாயிலிருந்து வீசும் ஒரு வகை துர்நாற்றம் அடுத்தவரை பெரிதும் துன்புறுத்துகின்றது. பிறர் துன்புறும் வகையில் காரியமாற்றுவதை இஸ்லாம் அறவே சகித்துக் கொள்வதில்லை. இதனால்தான் இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பின்வருமாறு இயம்பினார்கள்.

"மனிதர்கள் துன்புறும் சகலவற்றிலிருந்தும் நிச்சயம் மலக்குமார்களும் துன்புறுகின்றனர்" (ஸஹீஹுல் புகாரீ. ஸஹீஹு முஸ்லிம்)

புகையிலையின் புகையினாலும், புகைப்பதால் வாயிலிருந்து வெளிவரும் துர்வாடையாலும் புகைப் பிரியர்கள் மக்களை மாத்திரம் துன்புறுத்தவில்லை. மலக்குகளையும் துன்புறுத்துகின்றனர் என்பது ஈண்டு நோக்கற்பாலது.

"வீணாக (ப்பொருளை) விரயம் செய்யாதீர். நிச்சயமாக விரயஞ் செய்கிறவர்கள் ஷைத்தான்களின் சகோதரர்களாக இருக்கின்றனர். (17-26,27)

இவ்விறை வசனம் வீண் விரயம் செய்வதை தடை செய்வதோடு விரயஞ் செய்வோர் ஷைத்தான்களின் சகோதரர்கள் என்றும் வர்ணிக்கின்றது. புகைப்பழக்கத்தால் விரயமாக்கப்படும் [illegible] உச்ச நிலையை ஏற்கனவே உன்னிப்பாய் அவதானித்தோம். இவ்வசனத்தின் படி புகைஞர்கள் விரயக்காரர்கள் என்ற வகையில் ஷைத்தான்களின் சகோதரர்களுமாவர்.

பொதுவாக பணத்திலோ, பொருளிலோ வீண் விரயம் நடைபெறுவதை இஸ்லாம் எந்நிலையிலும் அனுமதிக்கவில்லை. ஒரு ஹதீஸின் தொடரிலே "மேலும் அவன் (அல்லாஹ்) செல்வத்தை விரயஞ் செய்வதை வெறுக்கின்றான்" என்று வருகின்றது.

(ஸஹீஹுல் முஸ்லிம்)

பொதுவாக நோக்கின், புகைத்தலை அதன் தேகாரோக்கிய பாதிப்புகளை கருத்திற் கொண்டும், உடலுக்கு ஏற்படுத்தும் சோர்வை கருத்திற் கொண்டும், அதன் மூலம் மேற்கொள்ளப்படும் தற்கொலை முயற்சியை கருத்திற் கொண்டும். அது மற்றவருக்கு ஏற்படுத்தும் இடையூறுகளைக் கருத்திற் கொண்டும். பணம் விரயஞ் செய்யப்படுவதைக் கருத்திற் கொண்டும் ஹராம் (தடை செய்யப்பட்டது) என கூறலாம்.

"பாதிப்பேற்படுத்தக் கூடிய எதனையும் தவிர்த்துக் கொள்வது கட்டாயம் (வாஜிப்) அதனைச் செய்வது தடை செய்யப்பட்டது. (ஹராம்)" என்பது இஸ்லாமிய சட்ட வல்லுநர்களின் ஏகோபித்த முடிவாகும்.

புகைத்தலை வெறுக்கத்தக்கது (மக்ரூஹ்) என்று தீர்ப்பளித்தனர். இது இக்காலத்தில் அவர்களுக்குக் கிடைத்த புகைத்தல் பற்றிய தகவலை அடிப்படையாகக் கொண்ட தீர்ப்பாகும். அக்காலை புகையிலையில் காணப்படும் நச்சுப் பதார்த்தங்கள், அவற்றின் பாதிப்புக்கள் பற்றிய ஆய்வுகள் போதியவையாக இருக்கவில்லை. புகைத்தல் புகைப்பவரை படிப்படியாக மரணத்தை நோக்கி அழைத்துச் செல்கின்றது எனும் உண்மை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டிருக்கவுமில்லை. எனவே. இவ்வறிஞர்களின் "மக்ரூஹ்" என்ற தீர்ப்பு அன்றைய காலகட்டத்தில் பொருத்தமாகவே இருந்தது. ஆனால், மிக அண்மையிலேயே புகையிலையின் நச்சுப் பதார்த்தங்கள், அவற்றின் பாரதூரமான பாதிப்புக்கள், புகையிலை புகைப்பவரை சிறுகச் சிறுக மரணத்தை நோக்கி செலுத்துகின்றமை என்பவையெல்லாம் அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்த வகையில்தான் அண்மைக்கால புகழ் பூத்த இஸ்லாமிய அறிஞர்கள் பொதுவாக ஹராம் என தீர்ப்பு வழங்கினர்.

எகிப்தைச் சேர்ந்த அஹ்மத் அஸ்ஸன்ஹூரீ. இப்ராஹீம் அல்லக்கானீ, மொறோக்கோவைச் சேர்ந்த அபுல் ஃபைஸ் அல் - பஷ்ஷாஷ், டமஸ்கஸைச் சேர்ந்த அந் - நஜீம் அல்கஸ்ஸீ, எமனைச் சேர்ந்த இப்ராஹீம் இப்னு ஜம்ஆன், அபூபக்ர் அல்-அஹ்தல் போன்ற பிரபல அறிஞர்கள் புகைத்தலை ஹராம் என்றே கருதுகின்றனர். மேலும் புகழ் பெற்ற அறிஞர்களான அப்துல் மலிக் அல்-இசாமி, முஹம்மத் இப்னு அல்லான், அஸ்-ஸய்யித் உமர், முஹம்மத் அல்-கவாஜஹ், ஈஸா, அஷ்-ஷஹதீ, மக்கீ இப்னு பர்ரூக், அஸ்-ஸய்யித் ஸஃத் அல் -பல்கீ, முஹம்மத் அல் - பர்ஸன்ஜீ முதலானோரின் தீர்ப்பும் ஹராம் என்பதே.

(இன்னும் வரும்)

# பிள்ளைகளுக்கிடையே நாளாந்தம் தீர்க்கப்பட வேண்டிய நடைமுறைகள் சில....



01. இழப்பு, துயரூட்டும் சம்பவம், குடும்ப வன்செயல்கள் போன்றவற்றை பிள்ளை எப்படி எதிர்கொள்கின்றது என்பதை பெற்றோர் உணரவேண்டும்.

02. பிள்ளை தனக்கான பிரச்சினையை பேசுவதற்கு நாடி வரும் போது பிள்ளையை வரவேற்க வேண்டும்.

03. பிள்ளை தெரிவிப்பதை செவிமடுக்க வேண்டும்.

04. பிள்ளை உணர்வுகளைப் பகிரும் போது பிள்ளையைப் போல் உணர்ந்து கொண்டு பெற்றோர் நீங்கள் உங்கள் உணர்வையும் தெரியப்படுத்துங்கள்.

05. பிள்ளை பொறுமை, வெட்கம், போன்ற உணர்வுகளின் காரணமாக எண்ணங்களை வெளியிடும் போது காலதாமதங்கள் ஏற்பட்டால் உங்கள் பொறுமையை இழந்துவிடாதீர்கள்.

06. பிள்ளையின் முகபாவம், அங்க அசைவுகளைக் கொண்டு உரையாடலை ஏற்றதாக்குங்கள்.

07. குற்றவுணர்ச்சியால் பிள்ளை தன்னை உணரும் போது யதார்த்தபூர்வமாக விளக்கமளியுங்கள்.

## அமுதும் தேனும் அற்புதம் முஸ்லிம் குரல்!

என் இதயத்தை
கொள்ளை
கொண்ட முஸ்லிம்
குரல் நீ
கொண்டுவரும்
அனைத்து
அம்சங்களும் வெகு
சூப்பர்
நீ வாரம் ஒரு முறை
என்கைவசம்
கிடைக்காவிட்டால்
அந்த நாள் எனக்கு
வெறுமையானதாகவே
அமைந்து விடுகின்றது.
இனி உன் சேவை
மென்மேலும்
வெற்றி நடை போட
என்
வாழ்த்துக்கள்.

கே.எல். ஹில்மி
[illegible] 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்ட தமிழர் விழிப்புணர்வு மன்றத்தாரின் துண்டுப் பிரசுரக் கருத்துக்களை மறுத்தல்!

அம்பாறை மாவட்ட தமிழர் விழிப்புணர்வு மன்றம் வெளியிட்டிருந்த துண்டுப் பிரசுரத்தில் (முஸ்லிம் குரல் 17ல் பிரசுரிக்கப்பட்டிருந்தது) கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக...

அப்பிரசுரத்தின் ஓரிடத்தில்... '...முஸ்லிம்கள் இனவாதிகள்...' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழர்களும், சிங்களவர்களும் ஒருவரை ஒருவர் இனவாதிகள் என சுட்டுவிரலை நீட்டியது போக இப்போது முஸ்லிம்களை இனவாதிகள் எனக்கூற முற்பட்டுள்ளனர். இவ்வாறு கூறுவதற்குக் காரணம், முஸ்லிம்கள் தம் இனத்துவ அடையாளத்தை தமிழ் சிங்களப் பேரினவாதங்கள் அழிக்க முற்படுகையில் தமது தனித்துவத்தைக் கட்டிக்காக்க முற்பட்டமையாகும். அன்றைய பொன். இராமனாதன் முதல் இன்றைய சந்திர நேரு வரை 'தமிழ் பேசும் இஸ்லாமியத் தமிழர்' என முஸ்லிம்களின் தலையைத் தடவிக்குட்டுவதைத் தடுக்காமல் இருந்தால்தான் இனவாதிகள் இல்லை போலும்.

அப்பிரசுரத்தின் மற்றுமோர் இடத்தில்- '...புலிகள் ஒரு இடைக்கால நிருவாக சபை வரைவைக் கொண்டுவரும்போது அதைச் சிக்கலாக்க முஸ்லிம்களும் ஒரு நிருவாக சபை வரைவைக் கொண்டு வந்து கேலிக்கூத்தாக்குகிறார்கள்...' எனக்கூறப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடமாக யுத்தம் நடைபெற்றுள்ளது. அனைத்து தமிழ் ஆயுதக் குழுக்களின் போராட்டங்களிலும் முஸ்லிம்கள் பங்காளிகளாக இருந்துள்ளனர். இதனை எவராலும் மறுக்க முடியாது. அதேநேரம் முஸ்லிம்களால் போஷிக்கப்பட்ட அக்குழுக்கள் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்துள்ளன என்பதையும் மறக்க முடியாது. இவ்வாறு தமிழ் சிங்களப் பேரினவாதங்களின் நெருக்குதலுக்குள்ளான முஸ்லிம்கள், தீர்வென்று வரும்போது தமக்கான பங்கைக் கோர சகல பாத்தியதையும் கொண்டுள்ளனர். தமிழர் தரப்பு தமக்கான நிருவாக அலகைக் கேட்டுப் பெற எந்தளவு உரித்து உள்ளதோ அதேயளவு உரித்து தமக்கான நிருவாக சபையைக் கேட்க முஸ்லிம்களுக்கும் உண்டு. இதில் மாற்றுக் கருத்துக்கிட மில்லை. முஸ்லிம்களுக்கான தீர்வைக் கேட்டுப் பெறுவதில் முஸ்லிம் தலைவர்கள் பின்னிற்கலாம். ஆனால் அடிப்படையில் தமக்கான தீர்வைப் பெறுவதில் முஸ்லிம் மக்கள் தெளிவாகவே உள்ளனர். அவர்கள் இந்நாட்டில் உள்ள வரை தம் தீர்வுக்காகப் போராடவே செய்வர்.

அப்பிரசுரத்தின் ஓரிடத்தில் - '...இரு தசாப்தங்களாக போராடி 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளையும், ஒரு லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்களையும் இழந்து நிற்கும் தமிழர் தரப்புடன் சரி நிகராய் நின்று பேரம் பேசும் அருகதை தமக்கில்லை என்பதை நியாயமாக சிந்திக்கும் சாதாரண முஸ்லிம் குடிமகன்கூட உணர்வான்...' எனக்கூறப்பட்டுள்ளது.

தமிழர் தரப்புடன் சரி நிகராக நின்று பேரம் பேசினால்தான் முஸ்லிம் சமூகம் அருகதை உடையதாக இருக்கும் எனத் தமிழ்த் தரப்பு ஒரு அளவுகோலை வைத்துக் கொள்வதையிட்டு முஸ்லிம்களுக்கு கவலையில்லை. அதேநேரம் முஸ்லிம்கள் தம் அருகதையைப் பரீட்சிக்க தமிழர் தரப்புடன்தான் சரிநிகராக பேரம் பேசிப் பார்க்க வேண்டும் என்ற நிலைப்பாடு முஸ்லிம்களுக்கு இல்லை. ஏனெனில் முஸ்லிம்களுக்கான தீர்வை வழங்கும் அருகதை தமிழர் தரப்புக்கு இருக்கிறதா என துண்டுப் பிரசுரத்தார் சிந்திக்க வேண்டும். முஸ்லிம்கள் தமது கோரிக்கையை அரசாங்கத்திடமும், சர்வதேச சமூகத்திடமும்தான் முன்வைக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். முஸ்லிம்களோ, தமக்கான தீர்வை முன்வைக்கின்றனர். தமிழர் தரப்போ, முஸ்லிம்களைத் தமது அடிமைகளாக மாற்றும் பாங்கில் தீர்வை முன்வைக்கிறது. இவ்வாறு கேட்க தமிழர் தரப்புக்கு என்ன அருகதை இருக்கிறது. யாழ் தாயகத்தில் இருந்து புலிகளால் வெறுங்கையுடன் வெளியேற்றப்பட்டோம். தொழுகையிலே முதுகில் சுடப்பட்டோம். முஸ்லிம் என்பதற்காக எமது பாலகர்கள் தூக்கி அடிக்கப்பட்டார்கள். மரணித்த பின்பும் டயர் போட்டு எரிக்கப்பட்டோம். பசுத்தோலினுள் பதுங்கிய இனந்தெரியாதவர்களால் (?) தினம் தினம் முஸ்லிம்கள் குதறப்படுகிறார்கள். இத்தகைய வஞ்சகங்களாலும், துரோகங்களாலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் தமக்கான தீர்வைக் கேட்க சகல அருகதையும், ஆற்றலும் உடையவர்களாக இருக்கும்போது முஸ்லிம்களைத் தூசிக்கவோ அவர்களது கோரிக்கையைத் தடுத்து நிறுத்தவோ எதுவித அருகதையும் தமிழர் தரப்புக்குக்கிடையாது என்பதை நியாயமாகவும், நிதானமாகவும் சிந்திக்க விரும்பும் சாதாரணத் தமிழ் குடிமகன் கூட உணர்வான்.

அப்பிரசுரத்தின் மற்றுமோர் இடத்தில்- '...போரின் காரணமாக தமிழர்கள் பொருளாதாரத்தில் நலிந்து போயிருக்க அபிவிருத்தி மந்தகதியில் இருக்க பதவியில் இருக்கும் 'ஆட்சியாளருக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டு முஸ்லிம்களுக்கென ஒரு தனிப்பல்கலைக்கழகம், துறைமுகம் என ஒரு சமூகம் வளர்ச்சி பெறத்தேவையான பௌதீக வளங்களையும் பெற்றுக் கொண்டார்கள்' எனக் கூறப்பட்டுள்ளது.

ஒரு சமுதாயம் முன்னேற பல்கலைக்கழகமும் துறை முகமும் தேவையென அப்பிரசுரம் கூறிவிட்டு, அவ்வாறு பெற்றுக்கொண்டதைக் கண்டிக்கிறது என்றால், இதைவிடவும் ஒரு காழ்ப்புணர்ச்சியையும் அறிவீனத்தையும் இந்த உலகம் சந்தித்திருக்காது என்றே கூற வேண்டும். இதைவிடவும் ஒரு இனவாதம் இருக்க முடியுமா? முஸ்லிம்களுக்குப் பல்கலைக்கழகம் தேவையில்லையென அத்துண்டுப்பிரசுரம் கூறுகிறதா. என்னே மனிதர்? 12% தமிழருக்கு ஒரு (யாழ்) பல்கலைக்கழகம் தேவை என்ற நியாயத்தின் அடிப்படையில்தான் 8% முஸ்லிம்களுக்காக கிழக்குப் பல்கலைக்கழகம் கட்டப்பட்டது. ஆனாலும் என்ன நடந்தது. தமிழ் ஆயுதக் குழுக்கள் முஸ்லிம் மாணவர்களைக் கோரமாகக் கொலை செய்து துரத்தி கிழக்கு பல்கலைக்கழகத்தை அபகரித்ததன் பின்புதானே தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவானது. இதனையும் பொறுக்க முடியாமல் துண்டுப் பிரசுரம் வெளியிடுபவர்களை என்னவென்பது.?



முஸ்லிம்கள் ஆட்சியாளர்களுக்கு முட்டுக் கொடுப்பவர்கள் எனத்தூசிக்கும் துண்டுப் பிரசுரத்தார் மகேஸ்வரன் அமைச்சரைக் கவனமாக மறந்துவிட்டார்கள். கடந்த காலங்களில் முஸ்லிம் அமைச்சர்களினாலும், எம்.பிக்களினாலும் தமிழ் மக்கள் பெற்ற பல்லாயிரம் வேலை வாய்ப்புகளையும், அபிவிருத்திகளையும் புறக்கணிக்குமாறு கேட்டு துண்டுப் பிரசுரம் வெளியிட அம்பாறை மாவட்ட தமிழர் விழிப்புணர்வு மன்றத்தார் முன்வருவார்களா?

யுத்த காலங்களில் தமிழ் மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள்ளான போது முஸ்லிம்கள் தம் பொருளாதாரத்தை இழக்கவில்லை என்றொரு குருட்டுத்தனத்தையும் அப்பிரசுரம் கொண்டுள்ளது.

முஸ்லிம்களின் பொருளாதாரம் யுத்த காலத்தில் அரசபடைகளால் அழிக்கப்பட்டது ஒரு புறம் இருக்கட்டும். முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிப்பதற்கென்றே புலிகள் தனிப்பிரிவொன்றை நியமித்து திட்டமொன்றையும் வரைந்துள்ளனர் என்பது ஒன்றும் புதிய செய்தியல்லவே.

வேண்டுமென்றே முஸ்லிம்களைக் கடத்திக் கொல்வதும் பின் அதனை அடுத்து வரும் முறுகல் நிலையைச் சாட்டாகவைத்து முஸ்லிம்களின் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு அழிப்பதுமாக புலிகள் இன்றும் அநீதியிழைத்துக் கொண்டுதானே இருக்கிறார்கள். இந்த நிமிடம் வரை கடையெரிப்பு, கப்பம், ஆடு மாடு, கோழிக் குஞ்சு கடத்தல் என தொடர்ந்து கொண்டுதானே இருக்கிறது. இதற்கான ஆதாரங்களும் முஸ்லிம்களிடம் இருக்கிறது. அதனையும் இங்குபட்டியலிட்டால் கட்டுரை பெருத்துவிடும் எனவே, விரிவஞ்சி விடுவோம்.

அப்பிரசுரத்தின் ஓரிடத்தில் - '...பேரினவாதிகளின் பூதக்கரங்களினால் மாத்திரமல்ல முஸ்லிம் இனவாதிகளின் துரோகக் கரங்களினாலும் கூட தமிழர் வாழ்வு சிதைக்கப்பட்டே வந்திருக்கிறது...' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கூற்றுக்கு ஆதாரமாக தமிழர் தரப்பால் 'முஸ்லிம்கள் காட்டிக் கொடுப்பவர்கள்' என்று கூறப்படுவது வழமை. இதற்குக் காரணம் இராணுவத்திலும் பொலிஸிலும் கடமையாற்றும் முஸ்லிம்களை படையினராக நோக்க மனம் இடங்கொடாமையே ஆகும். அவர்களை இனவாதக் கண்ணோட்டத்துடனேயே தமிழர் தரப்பு நோக்குகின்றனர். இத்தகைய பிழையான பார்வையினடிப்படையில்தான் தமிழ் பொலிஸாரைத் தப்ப வைத்துவிட்டு முஸ்லிம் பொலிஸாரை இனம்பிரித்துக் கொலை செய்தார்கள்.

அப்பிரசுரத்தின் ஓரிடத்தில் - '...கடந்த காலத்தை மறப்போம். மன்னிப்போம் என்ற நிலையில் எமது ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகள் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் காணி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகாண கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்...' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னிப்போம், மறப்போம் என்பதற்கு புலிகள் எந்தப் பெறுமானத்தையும் வழங்கியதாகத் தெரியவில்லை. சமாதான காலத்திலும் புலிகள் தம் பாஸிசப் போக்கை மாற்றவில்லை என்பதை சர்வதேச மனித உரிமை மன்றம் வரை அறியும். சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்துக் கொண்டு முஸ்லிம்களின் காணிகளைப் புலிகள் ஆக்கிரமிக்கின்றனர் என்பதை உலகறியும். எனவே இதய சுத்தியுடன் அபகரித்த காணியை முஸ்லிம்களிடமே ஒப்படைப்பதற்காக கலந்துரையாடல் நடைபெற்றால் அதனை வரவேற்கலாம். ஆயினும் நடப்பதென்ன. இங்கே கலந்துரையாடிக் கொண்டு அங்கே முஸ்லிம்களின் பூர்வீகப் பூமியான மஜீட் புரத்தில் (குரங்கு பாஞ்சான்) முஸ்லிம்களை விரட்டிவிட்டுப் புலிகள் முகாமிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறுங்கள் என்று ரி.வி.க்கும் பத்திரிகைகளுக்கும் முன்னால் கூறிவிட்டு குடியேற வரும் முஸ்லிம்களை அச்சுறுத்துகிறார்கள்.

எப்படியோ காணியை ஒப்படைக்க கலந்துரையாடப்படுவதாக வைத்துக் கொள்வோம். உண்மையில் என்ன நடக்கிறது. 'காணிகள் அனைத்தும் தமிழருடையவை. அதில் முஸ்லிம்கள் குடியேறியுள்ளனர்' என்ற வரலாற்றுத் துரோகம் நிறைந்த அறிக்கையைத் தயாரித்து புலிகள் கொடுக்க மக்கள் பிரதிநிதியான (?) பசீர்சேகுதாவுது எதுவித மறுப்பும் தெரிவிக்காமல் கையேற்று முஸ்லிம்களுக்கு குழிபறித்துள்ளார். இது குறித்த விரிவான விளக்கத்தை ஆதாரத்துடன் அறியவேண்டின் பார்க்க முஸ்லிம்குரல் சுவடு-10)

இறுதியாக அப்பிரசுரத்தின் கடைசி வரிகள் பின்வருமாறு காணப்படுகின்றன. 'முஸ்லிம்கள் இனவாதத்துடன் நடந்து கொண்டால் தமிழர்கள் ஆயுதம் ஏந்துவார்கள்...' என்று ஒரு மிரட்டலை அப்பிரசுரம் வெளியிட்டுள்ளது.

அப்படியானால் முஸ்லிம்களுடனான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளப் புலிகள் இதுவரை காந்தியவாதிகளாக நடந்து கொள்கிறார்கள் எனக்கூறவருகிறார்களா? துப்பாக்கியாலன்றி பேசியிருக்கிறார்கள் என்பதற்கு ஏதாவது ஆதாரத்தைக் காட்ட முன்வருவார்களா? முஸ்லிம்களுக்கெதிரான மிரட்டல் என்பது, முஸ்லிம்களைப் பொறுத்தவரை புளித்துப்போன விடய மாகும்.

**-அஸ்மா-**

எனவே முஸ்லிம்கள் இலங்கையின் தேசிய இனம். அவர்கள் தமிழ், சிங்களப் பேரினவாதங்களால் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். ஆதலால் முஸ்லிம்கள் தமது பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படுகிறார்கள். இது முற்றிலும் யதார்த்தமானதும் நியாயமானதுமாகும். இதனை எவராலும் மறுதலித்திட முடியாது. எத்தனை தடைகள் வந்தாலும் தம் பாதையில் தொடர்ந்து செல்லும் மனோதிடமும் வல்லமையும் முஸ்லிம்களுக்கு உண்டு.

அதே நேரம் எவரும் துண்டுப் பிரசுரம் வெளியிடலாம். அது ஜனநாயக உரிமை. ஆனால் ஒரு நிபந்தனை அப்பிரசுரம் நியாயபூர்வமாகவும், ஆதார பூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும் இருத்தல் வேண்டும்.

## உரிமைக்கு உயிர்போகும் தேசத்தில் விலைபோகும் சுய நிர்ணயங்கள்

எல்லை தாண்டிவரும்
தொல்லைகளுக்குள்
இருக்கின்ற வளங்களை
எல்லாம்
முடித்துவிட முயலும்
ஒட்டுண்ணிப்பட்டாளங்கள்!

உள்ளூரில்
தெள்ளுப் பூச்சிகளாய்
சிலசபைகள்
தெரியத் தொடங்கிற்று!

ஊரவரின் உழைப்புறிஞ்சல்
ஒழுங்காய் நடந்தேறும்!
உடன்பட மறுத்தால்
சட்டங்கள் குறைகாணும்!

கீரைக்கும்
உப்புக்கும்
வரிகள் பெற்ற
கீர்த்திகள்
இங்கு மிச்சம்!

அட்டைபோல் பதவி அப்பி
குட்டைக்குள் குளங்கள் கட்டும்
தொழில் நுட்பம் மலிந்துபெருகி ...
சில மணல் மேடும்
பல கிறவல் றோட்டும்
பல இலட்சங்களைப்
பதுக்கிக்கிடக்கும்!

ஊழல் மோசடிக்கு
ஒருமுடிவு காண்பதற்காய்
ஊரவ ரிணைத்தெடுத்தார்
ஒரு எம்.பி
அவரெங்குபோனார் என
நீ சொல்லு தம்பி!

இழந்த உரிமைக்காக
இரத்தம் சிந்தும் தேசத்தில்
இருக்கின்ற சுயநிர்ணய
எச்சங்களையும் இழந்து வருகிறது
இன்னுமொரு தேசம்!

-ஓட்டமாவடி பு.எல்.எம்.நஜீப்

# போதைப் பொருட் பாவனையில் இளைஞர்கள்

இந்நவீன யுகத்தில் மாணவ, இளைஞர் சமூகத்தில் புரையோடியுள்ள அநாகரிக செயற்பாடுகளுள் போதைப் பொருட்பாவனையும் ஒன்றாகும். பள்ளத்தை நோக்கி ஆறு பாய்ந்தோடிச் செல்வது போன்று போதை வஸ்த்துவை நோக்கி மாணவ சமுதாயத்தினர் பாய்ந்தோடுகின்றனர். "அமெரிக்காவில் உயர் நிலைப் பள்ளிக்கூடங்களில் 19 வீதமான மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். ஆரம்ப பள்ளிக் கூடங்களில் 5.8 வீதமானோர் பாவிப்பதாக ஓர் ஆய்வு குறிப்பிடுகிறது" (Islam About Aids)

"12 - 18 வயதுக்கு இடைப்பட்ட 10,000 மாணவர்களிடம் நடாத்தப்பட்ட ஆய்வில் சுமார் 13.6 வீதம் கஞ்சா புகைப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இங்கிலாந்தில் அண்மையில் 17 வயதிற்குட்பட்ட 500 மாணவர்களை சந்தித்து பூகோளம் சம்பந்தமாக சில கேள்விகள் கேட்கப்பட்டது. அவர்கள் பதில் தெரியாமல் விழித்தார்கள். உங்களிடம் எதைப் பற்றிக் கேட்டால் பதில் சொல்வீர்கள் எனக் கேட்டபோது 98 வீதம் டக்கென்று மது அருந்துவது, போதைப் பொருள் பற்றிக் கேளுங்கள் என்றனர்." (தினகரன் 2000.05.31)

மாணவ சமுதாயத்தை ஆட்கொண்டதோடு மாத்திரமல்லாமல் சமுதாயத்தின் முதுகெலும்பாய்த்திகளும் இளைஞர்களையும் ஈர்த்திருப்பதுதான் கவலைக்குரிய விடயமாகும். 15 வயதில் புகைபிடிக்கத் தொடங்குபவர்கள் நாம், பெரும் போதைப் பொருட் பாவனையாளர்களாக மாறுவோம் என கனவில் கூட எண்ணிப் பார்த்திருக்காதவர்கள். அவர்கள் கேளிக்கையாகவும், விளையாட்டாகவும் புகைப்பிடிக்கத் தொடங்கியவராவர். இவ்வாறு புகைப்பிடிப்பவர்கள் காலப் போக்கில் போதைக்கு அடிமையாகின்றனர். அதே போல் புகை பிடிக்கும் பழக்கமே இல்லாதவர்கள் மத்தியில் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் போதைப் பொருள் பாவனைக்கே ஊக்கப்படுத்துகிறது. போதைப் பொருள் பாவனையாளர்களுள் அதிகமானோர் உளவியல் ரீதியான தாக்கங்களால் அடிமையானவர்களே. உள்ளத்தில் ஏற்படும் கவலைக்குத் தீர்வு போதைப் பொருட் பாவனையே என்று இப்படியானோர் கருதுகின்றனர்.

இளம் சமுதாயத்தினர் போதைப் பொருட் பாவனைக்கு உள்ளாவதற்கு வேலையில்லாப் பிரச்சினை அதிகளவில் துணைபுரிகின்றது. சுமார் 60 வீதம் 13 வயதிலே புகைக்கத் தொடங்குகின்றனர். இவர்கள் 20 வயதுக்கு முன் தீவிரமாக புகைக்கின்றனர். போதைப் பொருள் பாவனையாளர்களுள் 90 வீதம் இளைஞர்கள். ஒரு புதிய உணர்ச்சியைப் பெற பயன்படுத்தும் போதைப் பொருளினால் உடல் நலம், மூளை, பெற்றோர்கள், உறவினர்கள் எல்லோரையும் இழக்கின்றனர். இளைஞர்கள் இன்னும் போதையின் தீங்குகளை உணரவில்லை. உலகில் வாழப்பிறந்தவன் நடமாடும் பிணமாக வாழ்கின்றான். போதைப் பொருள் எண்ணற்ற உயிர்களை எயிட்ஸ் எனும் ஆட்கொல்லி கொன்று வருகின்றது. இப்பழக்கத்தில் ஈடுபடுவோருக்கு மீட்சியே இல்லை எனலாம். போதைப் பொருளுக்கு அடிமையானவன் தனது தேவைக்கு திருடுகிறான், பொய் சொல்கிறான், கொலை செய்கிறான். இதனைப் பழகுவது சுலபம் விட்டுவிடுவது மிகவும் சிரமம்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு புத்திசாலிகள் அவசியம். இளைஞர்கள் கல்வியில் முன்னேறினால் நாடு முன்னேறும். எனவே நாட்டை முன்னேற்ற மாணவ, இளைஞர் சமூகத்தை இவ்வரக்கனின் கொடூர பிடியிலிருந்து விடுவிக்க ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்.

**அப்பாஸ் எம். மஹ்ரூஃப்,**
தேசிய கல்விக் கல்லூரி, அட்டாளைச்சேனை.

# கொலைகார நாடாகி வரும் இலங்கை,

அதிகரித்து வரும் கொலை, பாலியல் துஷ்பிரயோகம், தொழிற் சங்க நடவடிக்கை, வாகன விபத்து, ஹர்த்தால்..

அண்மைக்காலமாக நம் நாட்டில் மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களும் புற்றுநோயைப் போல் பரவி வருகிறது. எங்கும் கொலை, எதற்கெடுத்தாலும் கொலை பாமர மக்கள் தொடக்கம் பாதுகாப்பு பிரிவினர் வரை மர்மமான முறையில் கொலை செய்யப்படுகிறார்கள். விவசாயத்திற்குப் போகிறவரும், வியாபாரத்துக்காக செல்பவரும் கொல்லப் படுகின்றனர். பணத்துக்காகவும், பகைக்காகவும் இன்னும் எதற்கெல்லாமோ கொலை செய்யப்படுகிறார்கள். இப்படியே போய்க் கொண்டிருந்தால் மிக விரைவில் கொலைகார நாடு என்ற பட்டத்தை நம் நாடு தக்க வைத்துக் கொள்ளும்.

**முஹம்மட் இம்தி, சாய்ந்தமருது**

மறுபுறம் வாகன விபத்து இதனால் அப்பாவிப்பொதுமக்கள் இளமையில் தங்கள் வாழ்வை மாய்த்துக் கொள்கிறார்கள். இதற்கு அநேகமான காரணங்களைக் கூறலாம். குடிபோதையில் வாகனங்களைச் செலுத்துவது, முந்திக்கொண்டு செல்ல எத்தனிப்பது, முறையற்ற பயிற்சியின்மை போன்ற இன்னோரன்ன காரணங்களைக் கூறுவதோடு அதிகரித்த வாகனக் கொள்வனவும் பிரதான காரணமாய் அமைந்து விடுகிறது.

மறு புறம் தொழிற் சங்க நடவடிக்கை. இன்று எந்தப் பிரிவினரை எடுத்தாலும் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றையே விரைவில் தொடங்கி விடுகிறார்கள். மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய வைத்தியர்கள் தொடக்கம், பல்கலைக் கழக ஊழியர்கள், ஆசிரியர்கள், பஸ்கம்பனிகள் சகலரும் இந்த நடைமுறைகளைப் பேணுகின்றனர். இதனால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

மறுபுறம் ஹர்த்தால் என்றும் வீதிமறியல் போராட்டம் என்றும் ஒவ்வொரு சாராரும் நாட்டின் இயல்பு நிலையை பாதிப்புறச் செய்து விடுகின்றனர். சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கம் பாதுகாப்புப் படைத்தரப்பு



மௌனமாய் இத்தகைய செயல்களை அவதானித்துக் கொண்டிருக்கிறது. வீதியில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டு சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படுகிறது. ஓரிருவர் செய்கின்ற இவ்வாறான செயல்களால் முழுச் சமூகமே அவஸ்தைப்படுகிறது. சட்டங்கள் சரியாக பின்பற்றப்பட்டால் மேற்கூறப்பட்ட பிரிவினர் தங்களைத் திருத்திக் கொள்வார்கள். அல்லது அவர்களைத் திருத்தி எடுக்க வேண்டும்.

நம் நாட்டில் கொலைக் கலாசாரம் பெருகி வருவதற்கு தனியார் தொலைக் காட்சிகள் பெரிதும் துணை புரிகின்றன. அதில் காண்பிக்கப்படுகின்ற நாடகங்கள், திரைப்படங்கள் அனைத்திலுமே கொலை செய்வதும், தண்ணியடிப்பதும் போன்ற காட்சிகளே பெரிதும் சித்தரிக்கப்படுகின்றன.

## தவறுக்கு வருந்துகிறோம்

முஸ்லிம் குரல் சுவடு 17 இல் பக்கம் 8 இல் இடம்பெற்றிருந்த ஜம்இய்யதுல் உலமா சபையின் பொதுச் செயலாளரின் நேர்காணலான 'உலமாக்களுக்கும் அரசியலுக்குமிடையே இடைவெளி கிடையாது' எனும் தலைப்பிலான சந்திப்பில் 27 வது பந்தியில் இடம் பெற்றிருக்க வேண்டிய ஸஹாபியின் பெயர் 'சஹாபா முக்பர்' என்று தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. அப்பெயரை 'ஸப்வான் பின் முஅத்தல்' எனத் திருத்தி வாசிக்கவும்.

சுவடு 18 இல் பக்கம் 7 இல் இடம்பெற்றிருந்த 'ஒரு கவிஞனின் ஆதங்கம்' என்னும் தலைப்பிலான கவிதை, [illegible] முஹம்மத் சிராஜ் எழுதியதாகும். இவரது பெயர் முழுமையற்று அச்சாகி இருந்தமைக்கு வருந்துகின்றோம்.

லுதி;தீஞுீவ; கூஷீவிஞுீ ; ளதீ ;
கூஷீஜுகூஷீ;யீவ; லுதி;தீஞுீவ; யீதீ;

முஸ்லிம் சமூகத்தின் கண்களைத் திறக்கும் நோக்கில் கஷ்டமான நிலையில் ஒரு பத்திரிகையை எமது வாசகர்களின் நலன் கருதி வெளியிடுவதைப் பாராட்டுகின்றேன்.

அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ரஸாக்,
நாபவளை அவிசாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது முன்னணி - ஜே.வி.பிக் கூட்டு ஒரு போதுமே நிகழாது!

-அமைச்சர் மஹிந்த சமரசிங்க-

*கேள்வி : ஐ.தே. கட்சி தேர்தல் ஒன்றை முன்னோக்கத் தயாராக உள்ளதா? இப்போது வாழ்க்கை செலவு உயர்ந்துள்ளமையினால் முன்னர் தேர்தலில் கிடைத்த ஆதரவு இனிக்கிடைக்குமா?*

ஆம் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் இது நிச்சயமாகும். யுத்த நிறுத்தம், உறுதியான அரசியல் நிலையில் முன்னேற்றம் கண்டுள்ளோம். பெருளாதாரம் முன்னேற தொடங்கியுள்ளது. எமது ரூபா ஏனைய முக்கிய நாணயங்களுடன் தனது பெறுமதியைப் பேணி வருகிறது. சர்வதேச ரீதியில் எமது சேமிப்பு அதிகரித்துள்ளது. பங்குச் சந்தை அதிகரிப்பை கூட்டியுள்ளது. வெளிநாட்டு நாணயம் வரவு அதிகரித்துள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் பெருகியுள்ளன. வரவு செலவில் பற்றாக்குறை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நெல் விளைச்சல் அமோக வெற்றியைத் தந்துள்ளது.

எமது சாதனைகளை மக்கள் அறிவர். நாம் இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை எந்தநிலையில் பாரம் எடுத்தோம் என்பதையும் ஈராண்டுகளில் பெரும் சாதனை நிகழ்த்த முடியாது என்பதையும் அவர்கள் அறிவர். சர்வதேச சமூகம் எம்செயற்பாடுகளையும் திட்டங்களையும் நன்கு அங்கீகரித்துள்ளனர் என்பதற்கு அவர்களின் முதலீடுகளும், ஜப்பானிய மாநாட்டில் கிடைத்த பாரிய உதவித் தொகையும் சான்று பகர்கின்றன.

*கேள்வி : ஸ்ரீலங்கா சு. க - ஜே. வி. பி. இடையில் அமைக்கப்படவிருந்த கூட்டு முறிந்தது பற்றி யாது கூறுகிறீர்கள்? அரசாங்கம் இதனை எதிர்பார்த்ததா?*

இந்தக்கூட்டு ஒரு போதும் நடக்காது என நான் நம்புகிறேன். ஏனெனில் ஸ்ரீ.ல.சு கட்சியும் ஐ.தே. கட்சியும் இந்நாட்டின் தேசிய கட்சிகள். ஜே.வி.பி.யோ குறுகிய நோக்கமுள்ள ஒரு கட்சியாகும். இந்நாட்டில் இரு தேசிய கட்சிகளிலும் சிறுபான்மையினர் அதிகம் பேர் உள்ளனர்.

தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தேசியக் கட்சிகள் காட்டும் நெகிழ்வுத் தன்மையினை ஜே.வி.பி. ஒரு போதும் வெளிக்காட்டாது.

இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ.தே. கட்சியின் பொருளாதாரக் கொள்கையினை அங்கீகரிக்கிறது. இத்தகைய ஸ்ரீலங்கா. சு. கட்சியுடன் எவ்வாறு இடதுசாரிக் கொள்கையுடைய மக்கள் விடுதலை முன்னணி கூட்டுச் சேர முடியும்? இவற்றையிட்டு நாம் ஆச்சரியப்படவில்லை. இவை நாம் முன்னரே எதிர்பார்த்ததுதான்.

இவ்விணைவு நடந்து இருந்தாலும் அது ஐ.தே. கட்சிக்கே வாய்ப்பாக முடிந்திருக்கும். ஏனெனில் ஜே.வி.பி. யினரின் 1971, 1988,89 காலத் துர் அனுபவங்களை மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை.

*கேள்வி : ஜப்பானியத் தூதுவருடன் உதவி தொடர்பான கூட்டத்தில்*



*கலந்து கொள்ள புலிகள் மறுத்துள்ளமை பற்றி அரசாங்கம் யாது கருதுகிறது?*

புலிகள் முழுமையாக அகன்றுவிடவில்லை. இடைக்கால நிர்வாக சபை பற்றிய நிலைப்பாட்டை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். அரசாங்கம் அதுபற்றிக் கவனஞ் செலுத்தியுள்ளது.

சமாதானத்துக்கான பாதையில் நெருக்கடிகள் அதிகம் எதிர்கொள்வதுண்டு. இதனை நாம் நிபுணத்துவத்துடன் அணுக வேண்டும். பிரதமர் இதில் திடசித்தம் உடையவராக இருக்கிறார். சர்வதேச அழைப்புகளுக்குப் புலிகள் சரியான முறையில் பதில் அளிக்க வேண்டிய கடமைப்பாடு உண்டு.

*கேள்வி : பேச்சுவார்த்தைகளில் புலிகள் கலந்து கொள்ளாவிடின் அரசு அபிவிருத்தித் திட்டங்களில் செயற்பட முடியுமா?*

வடக்கு கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் புலிகளின் பங்கேற்புடன் தொடரும் என அரசு தெளிவாகக் கூறியுள்ளது. எனவே ஒரு தலைப்பட்சமான முடிவு எடுக்கப்பட முடியாது. இங்கு பொறுமை நிபுணத்துவம், அர்ப்பணிப்பு என்பன இன்றியமையாதவை.

தெற்குப் பகுதியிலும் அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக அமுல் நடாத்தப்படும்.

*கேள்வி : புலிகளின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்கமுடியாத நிலை தோன்றினால் என்ன நடக்கும்?*

அரசாங்கம் தனது முன்மொழிவுகளை முன்வைத்துள்ளது. புலிகளும் பரந்த அடிப்படையில் கலந்தாலோசித்துத் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இரு தரப்பினரும் விரைவில் கலந்துரையாடி முடிவுகள் காணப்படும். இது தொடர்பாகச் சர்வதேச சமூகத்தின் உதவியும், ஒத்துழைப்பும் முக்கிய பங்கு வகிக்கும். இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் கூடிய விரைவில் வளவாழ்வு கிட்டும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

*கேள்வி : இலஞ்ச ஆணைக்குழுவுக்கு உறுப்பினர் ஒருவரை நியமிக்கத் தவறியுள்ளமையினால் அதிக ஊழலுக்கும், இலஞ்சத்துக்கும் வழியமைத்துள்ளது. அரசாங்கம் ஏன் ஒருவரை நியமிக்க தவறியுள்ளது ?*

இந்த நியமனம் அரசியலமைப்புச் சபையினால்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆணையாளர்களின் தொகையினை ஐந்தாக அதிகரிப்பதற்குரிய வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(நன்றி - சன்டேலீடர்)

# ஈராக்கில் அநாதரவாகியுள்ள அமெரிக்கா தற்போது ஐ.நா. முன் மண்டியிடுகின்றது

தங்களுக்குள் கருத்து வேறுபட்டுள்ள ஐ.நா. சபை உறுப்பினர்களை ஐக்கியப் படுத்தும் நோக்குடன் ஒரு உயர் மட்ட இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட ஐ.நா. செயலாளர் கொபி அனான் அண்மையில் முனைந்துள்ளார். ஈராக்கின் இறைமையை வெகுவிரைவில் நிலைநிறுத்துவதற்காக வேண்டி ஒரு உயர்மட்ட அரசியல் நாடகத்தை அரங்கேற்ற ஐ.நா. தயார் என்று அவர் தெரிவித்துள்ளார். அதனை செயல்படுத்துவதற்கு உறுப்பினர்களின் ஒற்றுமையே மூலாதாரமாகும். அதற்காக அவர் மிகவும் பிரயாசையுடன் செயல்படுகின்றார்.



அத்தகையதொரு உயர் மட்ட அரசியல் நாடகத்தை அரங்கேற்றுவதற்குப் போதிய அனுபவம் தனக்கிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். உதாரணங்களாக ஆப்கானிஸ்தான், கொஸோவோ மற்றும் கிழக்கு தீமோர் ஆகியவற்றை முன் வைத்தார். இவற்றின் பிரச்சினைகள் அனைத்தும் வட்ட மேசை மாநாடுகள் மூலமே தீர்த்து வைக்கப்பட்டன என்று அவர் கூறினார்.

மிகவும் நேர்மையான முறையிலேயே இவற்றை அவர் எடுத்துக் காட்டினார். இதில் அமெரிக்காவின் பலவந்தம் இல்லையென்றே தோன்றுகின்றது. எப்படியிருப்பினும், சென்ற வாரம் அமெரிக்க ராஜாங்க செயலாளர் கொலின் பவெல் நியூயோர்க் சென்று பாதுகாப்புச் சபை உறுப்பினர்களைச் சந்தித்ததாக செய்திப் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன.

ஐ. நா. செயலாளரினால் குறிப்பிடப் படுகின்ற இத்தகைய உயர் மட்ட அரசியல் நாடகத்தை அரங்கேற்ற உண்மையாகவே ஐ. நா. வினால் இயலுமா? அதற்குரிய சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்குமா? இது பிரச்சினைக்குரிய விடயம்தான் என்பதற்கு போதிய ஆதாரங்கள் உண்டு. ஏனெனில், அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் இத்தகைய எதுவுமே குறிப்பிடப்படவில்லை. எத்தகைய உயர்மட்ட நடவடிக்கைகளுக்காகவும் அமெரிக்காவினால் ஐ. நா. பணிக்கப்படவில்லை. ஐ. நா. வுக்கு முக்கிய பாத்திரமொன்றை வழங்காமையே ஜேர்மனியும் பிரான்சும் அமெரிக்க யோசனைகளை எதிர்க்கக் காரணமாக அமைந்தது.

ஈராக்கில் பயங்கர ஆயுதங்கள் இருப்பதால் அவை சர்வதேச பயங்கரவாதிகளின் கைகளில் சேர வாய்ப்புள்ளதாக கூறி ஈராக்குக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்த போது கூட அமெரிக்கா ஐ. நா வை பொருட்படுத்தவே இல்லை. ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அறிவுரைகளை தூர எறிந்து விட்டு தன்னிச்சையாக ஈராக்குடன் போர் தொடுத்து சதாமின் ஆட்சியைக் கவிழ்த்து வெற்றியீட்டியது. இப்பெரும் போரின் போது அமெரிக்காவுக்குக் கை கொடுத்த ஒரே நாடு பிரித்தானியாவாகும்.

போரினால் அழிந்த ஈராக்கிற்குள் புதிய அரசியல் வியூகமொன்றை அமைத்து ஈராக்கியரின் சுக்குநூறாகிப்போன வாழ்வியலை மீண்டும் கட்டியெழுப்பக் கூடிய சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்திக் கொடுக்க இன்னும் அமெரிக்காவால் முடியாமல் போனது கவலைக்குரிய விடயமே.

அன்று சதாமை விரட்டியடித்த சந்தோஷத்தில் மூழ்கியிருந்த ஈராக்கியர்கள் மிகவும் ஆரவாரத்துடன் அமெரிக்க இராணுவத்தை வரவேற்றனர். அவர்களே தங்களது ஆபத்து நேரத்தில் கைகொடுத்தவர்கள் என்று கருதினர். ஆனால், அதே இராணுவத்தினரை நாட்டை விட்டும் வெளியேறுமாறு நிர்பந்திக்கின்றனர். இது எதனைக் காட்டுகின்றதெனில் அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் ஈராக்கியர்கள் வாழ விரும்பவில்லை என்பதையே. ஈராக்கின் தற்போதைய நிலையற்ற தன்மைக்கு காரணகர்த்தாக்கள் அமெரிக்கரே என்று குற்றம் சாட்டுவதோடு தன்னாட்சியையே வேண்டி நிற்கின்றனர்.

தன்னாதிக்கம் எப்படியிருப்பினும், ஈராக்கியரின் அன்றாட வாழ்வியல் நிலையைக் கூட கட்டியெழுப்ப முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளதையே அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இத்தகைய நிலையற்ற தன்மையை தமக்கு சாதகமாக்கிக் கொண்ட சதாமின் ஆதரவாளர்களால் அமெரிக்க இராணுவ வீரர்கள் கொன்றொழிக்கப்படுகின்றனர். நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளைக் கூட குழப்பியுள்ளனர். இத்தகைய துரதிஷ்டமான நிலைமைக்குக் காரணம், அமெரிக்கா நேர்மையற்ற முறையில் செயல்பட்டதே என்பதே சர்வதேச விமர்சகர்களினது கருத்தாகும். தான் நினைத்தது நடக்கவில்லையே என்பது அமெரிக்காவின் கவலையாகும். ஆகவே தற்போது அது ஐ. நா. விடம் சரணடைந்துள்ளது.

## உண்மைகளை மறைக்கும் ஊடகங்கள் நிராகரிக்கப்படுவதை தடுக்க முடியாது!

அன்றாட உண்மை நிலைமைகளையும் யதார்த்தத்தையும் அறிந்து கொள்ள முனைவது பொது மக்களின் உரிமையாகும். தற்போது இந்நாட்டின் சில ஊடகங்கள் உண்மைகளை மறைத்து விட்டு பொய்களை பிரசுரிக்கின்றன; பேசுகின்றன. அத்தகைய ஊடகங்களுக்குப் பின்னால் கண்களுக்குப் புலப்படாத ஏதோ ஒரு சக்தி செயல்படுவதாக பொதுமக்கள் சந்தேகிக்கின்றனர்.

ஒரு ஊடகம் அவ்வாறு உண்மைகளை மறைத்து செயல்படுவது பாரதூரமான தவறாகும். அத்தகைய ஊடகங்கள் பொதுமக்களால் நிராகரிக்கப்படுவதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

தற்போது தேசிய ஊடகங்களில் பணிபுரிந்த திறமையான ஊடகவியலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் அல்லது தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர். திறமையானவர்கள் மட்டம் தட்டப்பட்டுள்ளனர். தங்களுக்கு மிக நெருங்கியவர்களுக்கு இடமளித்துள்ளனர்.

அத்தகைய ஊடகங்கள் குழப்பத்திற்குள்ளாகி உள்ளன. ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்குப் பின்னால் சுற்றிய ஊடகவியலாளர்கள் தற்போது பாக்கு வெட்டியின் இடையில் அகப்பட்ட பாக்கைப்போன்ற நிலையில் உள்ளனர்.

இந்நிலையிலிருந்து அவர்கள் மீள வேண்டுமாயின் ஊடகவியலாளர்கள் சுதந்திரத் தன்மையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் மற்றும் நாட்டின் தேவையைக் கருதி பேசவும், எழுதவும் துணிவு பெற வேண்டும்.

### ஜீ.எல். பீரிஸினால் மத்திய வங்கிக்கு ரூபாய் 80 மில்லியன் நஷ்டம்

பொ.ஐ.மு. அரசாங்க காலத்தில் பிரதி நிதி அமைச்சராக பதவி வகித்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களின் நிர்ப்பந்தத்தின்படி மத்திய வங்கியில் பதிவுசெய்யப் பெற்றிராத போலி நிதிக்கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபாய் 80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக்கூட்டுத்தாபனங்களுக்கு மட்டுமே இந்த அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன் பெற்றுக்கொள்ள முடியும்.

பொருளாதார மற்றும் கிராமிய அபிவிருத்தி வங்கி எனும் பெயரில் செயல்பட்ட இப்போலி நிதி நிறுவனம் இழுத்து மூடப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகியும் அவர்களால் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபாய் 8 கோடி இன்னும் மீளச் செலுத்தப்படவில்லை. அமைச்சர்களின் முறைகேடுகளில் இதுவும் ஒன்று.

### பேருவளையில் புதிய பள்ளிவாசல் அமைக்கப்படுவதற்கு எதிராக பிக்குகள் சங்கம் போர்க்கொடி!

பேருவளை நகர எல்லையில் (இல. 100, காலிவீதி) பள்ளிவாசல் அமைக்கப்படுவதற்கு பிக்குகள் சங்கம் போர்க்கொடி தூக்கியுள்ளது. இதனைத்தடுத்து நிறுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் இச்சங்கம் மேற்கொண்டு வருகிறது.

பள்ளிவாசல் அமைக்கப்படுவதை எதிர்க்கும் பிக்குகள் சங்கம் பேருவளை நகர எல்லைக்குள் 20 பள்ளிவாசல், 06 பௌத்த விகாரைகள், 02 கத்தோலிக்க ஆலயங்கள் உள்ளன. இதன் அடிப்படையில் இனி பள்ளிவாசல்கள் பேருவளை நகர எல்லைக்குள் அமைக்கப்படக்கூடாது. அதுமட்டுமன்றி இப்பள்ளிவாசல் அமைக்கப்படும் இடம் புகழ்மிக்க தங்களது போதி விகாரைக்கு அருகில் இருப்பதனாலும் இங்கு பள்ளிவாசல் கட்டுவது முடியவே முடியாது என்கிறது.

## முஸ்லிம் குரல் பத்திரிகை வாரம்!

**அன்பானவர்களே! நமது மக்களே!**

நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்களை சேர்த்துக் கொள்வதற்கும், நிதி உதவிகளை திரட்டுவதற்கும் செப்டம்பர் 19இல் இருந்து 30 ஆம் திகதி வரை முஸ்லிம் குரல் பத்திரிகை வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளோம். எதிர்வரும் 26.09.2003க்குரிய முஸ்லிம் குரல் இதழ் வெளிவரமாட்டாதென்பதை நமது வாசகர்களுக்கு கவலையுடன் தெரிவிக்கின்றோம்.

முஸ்லிம் குரல் சுவடு 20

19 செப்டம்பர் 2003 Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல் 22 றஜப் - 1424

181/1, Maligakanda Road, (White Park) Colombo - 10. Tel: 0777-389127, Fax: 01-665831, E-mail: mm-s@eol.lk

## நாமும் மர்ஹூம் அஷ்ரஃபும்

செப்டம்பர் 16ம் திகதி மூதூர் தொடக்கம் பொத்துவில் வரை ஒரே சோக மயம். மக்களின் தன்னியல்பான உணர்வுப் பெருக்கம் கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களை ஆட்கொண்டிருந்தது. முஸ்லிம் பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு வெள்ளை, கறுப்புக் கொடிகள் பரந்தளவில் கட்டப்பட்டிருந்தன. பாடசாலைகள் அரச அலுவலகங்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. நமது அரசியல்வாதிகளின் ஏற்பாட்டில் மறைந்த தலைவர் பெயரில் துஆக் கேட்பதும் கத்தம் ஓதுவதும் அன்னதானம் வழங்குவதும் மிகச் சிறப்பாக நடந்தேறின. சில ஊர்களில் தலைவர் பற்றிய கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. நமது மக்கள் இத்தினத்தை மறைந்த தமது தலைவனுக்கு காணிக்கையாக்கினர்.

இந்த உணர்ச்சி பெருக்கத்திற்கு மத்தியில் அனைத்து மக்களிடமும் ஒரு எதிர்பார்ப்பு மலைபோல் எழுந்து நின்றது. தமது தலைவனின் மரணத்தின் பின்னால் சூழ்ந்திருந்த திரை விலக்க முடியாச் சதியை இனம் காணுமாறும், சூத்திரதாரிகளை அடையாளம் காட்டுமாறும் அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கு, நமது அரசியல் தலைமைகள் இத்தினத்தை பிரயோகிப்பர் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. இந்த இறுதி எதிர்பார்ப்பிற்கும் மண் விழுந்து விட்டது.

நமது அரசியல் தலைமைகளோ இது பற்றி மூச்சிவிடவே இல்லை. ஆள்மாறி ஆள் குற்றம் சாட்டினர். கட்சியை புனரமைத்து வளர்க்க வேண்டும் என்றனர், கட்சியின் பதவியைப் பயன்படுத்தி கட்சியை அழிப்பதை அனுமதிக்க முடியாது என்றனர், மரநிழலில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றனர்.

நமது மக்களுக்கோ மரம் நாட்டிய தலைவனுக்கு என்ன நடந்தது என்பதே பிரதானமாக இருந்தது. "மௌத்தானவரின் வாயில் மண், இருப்பவர் வாயில் சோறு" என்பார்கள் நமது ஊர்களில். எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது இந்த முதுமொழி.

தலைவருக்கு நாங்கள் ஊரைக் கூட்டி துஆ ஓதியது போதாதா? கொந்தராத்து கொமிசன் பணத்தில் அன்னதானம் வழங்கியது காணாதா? அவரைப் பெருந்தலைவர் எனப் போற்றி போஸ்டர் அடித்தது போதாதா? அவற்றை விடவும் தலைவருக்கு 4.50 சத முத்திரை வெளியிட்டது சாதாரண விசயமா? என நமது மக்களிடம் ஒரு வேளை நமது அரசியல் தலைமைகள் கேட்கக் கூடும்!

ஆனால் ஒன்று மட்டும் உண்மை!

உலக வரலாற்றிலேயே ஒரு தேசிய இயக்கத் தலைவனுக்கு அத்தலைமையின் இழப்பை, சதி மரணத்தை இவ்வளவு மோசமாக அவர் பின் வந்த தம்பிகள் மூடி மறைத்து - துரோகம் புரிந்தது இங்கு மட்டும்தான் நிகழ்ந்திருக்கிறது. அதுவும் நமது முஸ்லிம் அரசியலில்.

தோழமையுடன்
பிரதம ஆசிரியர்

இப்பத்திரிகை 181/1, ஆனந்த மாவத்தை, கொழும்பு 10 முஸ்லிம் குரல் பப்ளிகேஷன் இனால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org